
குருமரபு நான்மணிமாலை





தெய்வப்பெருந்திரு

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

திருப்பெருந்திரு

சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அருளிய

குருமரபு நான்மணிமாலை

(மூலமும் உரையும்)

உரை
புலவர். வீ. சிவஞானம் எம்.ஏ., பி.எட்.,

திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் கயிலைக்குருமணி தெய்வத் திருப்பெருந்திரு **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்** அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருவள்ளுவராண்டு 2056, ஆவணித் திங்கள் 29ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று (14.9.2025) பேரூராதீன இருபத்தைந்தாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு **சாந்தலிங்க மருதாசல அடிகளார்** அவர்களின் அருளாணையின் வண்ணம் வெளியிடப்பட்டது.

வெளியீடு

குமாரதேவர் பதிப்பகம்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை
பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர் - 641 010.

குருமரபு நான்மணிமாலை

ஆசிரியர்: திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

உரை: புலவர். வீ. சிவஞானம்

இரண்டாம் பதிப்பு : திருவள்ளுவராண்டு 2045 (செப்டம்பர் 2014)

வெளியீடு

குமாரதேவர் பதிப்பகம்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை,
பேரூராதீனம், பேரூர், கோவை -641 010
☎ 0422-2607994/995 **Email:** omadihal@gmail.com

அச்சாக்கம்: கவின் பிரிண்ட் மீடியா, கோவை – 641001
M : 73958 666 99 / 9080 882 991
E: kavinprintmedia@gmail.com

பக்கங்கள் : 132 / விலை : ரூ. 120/-

உ
சிவமயம்
சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

பொருளடக்கம்

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க



திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம்
பேரூராதீன இருபத்தைந்தாம் பட்டம்
குருமகா சந்நிதானங்கள் கயிலைப்புனிதர்
முனைவர் திருப்பெருந்திரு
சாந்தலிங்க மருதாசல அடிகளார்
பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர் - 641010

அருள் வாழ்த்துரை

"**ப**த்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம்" என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. இவ்வாக்கிற்கேற்ப நமது பழவினைகளை நீக்கி முத்திநெறியை வழங்கும் நெறி பத்திநெறி. இத்தகைய பத்திநெறி அனைவருக்கும் சமமானதாகவும் பொதுவானதாகவும் அமைதல் வேண்டும். திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் தெய்வத் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் பத்திநெறியை அனைவரும் கொண்டு சேர்க்கும் நோக்கில் அனைவரும் அருச்சகர் ஆகலாம், அனைவரும் திருக்கோயிலில் சென்று வழிபாடுகள் செய்தல், தமிழ்த்திருக்குடநன்னீராட்டு ஆதியவற்றை நடத்திய பெருமைக்குரியவர்கள்.

1953ஆம் ஆண்டு பல்வேறு தடைகளுக்கு இடையில் வெள்ளக்கிணறு வெ.சி.சுப்பையகவுண்டர், கோவைகிழார் ஆதிய சான்றோர்களின் ஒத்துழைப்போடு பேரூர்ப் பட்டிப்பெருமான் திருக்கோயிலில் தமிழில் மலரருச்சனை வழிபாட்டைத் தொடங்கி ஆதீனத்தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்தவர். அடுத்த ஆண்டாகிய 1954ஆம் ஆண்டில் ஏன் தமிழில் வழிபாடுகளைச் செய்யக்கூடாது என்ற கேள்வியுடன் முதன்முதலாக கணபதியில் சிரவையாதீனம் மூன்றாம் குருமகாசந்நிதானங்களை இணைத்துக் கொண்டு திருநெறிய ஒண்தீந்தமிழ்நெறி வழிபாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்த பெருந்தகையாளர். தமிழ்நெறி வழிபாடுகள் தமிழகம் மட்டுமல்லாது அயலகத்திலும் சென்று சேரவேண்டும் என்பதற்காக அயலக

அடியார்களை அழைத்து வந்து அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கினார்கள். அடிகள் பெருந்தகை மீட்டெடுத்த தமிழ் வழிபாட்டு முறைமைகள் இன்று உலகெங்கும் நடைபெற்று வருகிறது.

அதுபோல அனைவரும் அருச்சகர் ஆகலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியவுடன் அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சென்று அனைவரும் அருச்சகர் ஆகலாம் என்ற திட்டத்திற்கு ஒரு குழு அமைத்து, இன்று ஆறு இடங்களில் அரசு அருச்சகர் பயிற்சிப் பள்ளி நடக்கப் பெரிதும் காரணமாக அமைந்தவர். மேலும் எப்பொழுதெல்லாம் தமிழ்வழிக் கல்வி, தமிழ் வழிபாட்டு உரிமைகளுக்குத் தடை வருகிறதோ அப்பொழுதெல்லாம் முன்னின்று அவற்றைத் தகர்த்த பெருமையாளர். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கருவறை புகுந்து வழிபாடுகளைச் செய்யவேண்டும் என்ற நோக்கில் கடந்த 30 ஆண்டுகளாகப் பெண்களைக் கொண்டு வேள்வி வழிபாடுகளைச் செய்வதோடு பெண் பயிற்சியாளர்களைக் கொண்டு அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியவர்.

அடிகள் பெருந்தகை அவர்கள் விசுவ இந்து பரிசித் அமைப்பின் தமிழ்நாடு அறவழி காட்டும் ஆன்றோர் பேரவைத் தலைவராகவும், மத்திய அமைப்பின் உறுப்பினராகவும் இருந்து சமயப்பணிகளை ஆற்றியவர். மேலும் அயோத்தி திருக்கோயில் குழு, காசித் திருக்கோயில் குழு உள்ளிட்ட பல்வேஎறு குழுக்களில் அமைந்து ஆலோசனைகளை வழங்கியவர்கள். நாமும் அவர்தம் வழியில் இக்குழுக்களில அமைந்து செயலாற்றி வருகின்றோம்.

மேலும் அடிகள் பெருந்தகை அவர்கள் தீண்டாமை ஒழிப்பைத் தலையாய கடமையாகக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் என்று கூறப்படுகின்ற மக்கள் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட ஊர்களில் இல்லங்கள் தோறும் சென்று திருவிளக்கு வழிபாடுகளைச் செய்து அனைவரிடத்தும் சமத்துவம் மேலோங்க வழிவகைகளைச் செய்தவர். தென்ஆப்பிரிக்கா, ரீயூனியன், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆதிய அயல்நாடுகளில் இருந்து 300க்கும் மேற்பட்ட அன்பர்களை அழைத்து வந்து வாழ்வியல் அருளியல் பயிற்சிகளை வழங்கியவர். அதன் தொடர்ச்சியாகத் தற்பொழுது இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானங்களாகிய நாமும் இணைய வழியாகவும் நேரடியாகவும் இப்பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

அடிகள் பெருந்தகை அவர்களின் எண்பதாம் அகவை முத்துவிழாவின் போது ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமையைப் போக்கும் வகையில் அதற்குண்டான செயல்திட்டங்களைச் செய்தார்கள். மேலும் கிராம மையம் ஒன்று தொடங்கப்பட்டது. அதுபோல தொண்ணூறாம் அகவை மரகத விழாவின்போது மருத்துவமனை, வனம் இந்தியா, விருப்புடன் திருப்பணி, பல்கலைக்கழகம் அமைப்பது என்ற நான்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றுள் முதல் மூன்று திட்டங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு அடிகள் பெருந்தகையின் நூற்றாண்டு விழா. இதையொட்டிப் பல்கலைக்கழகம் அமைக்கும் பணியை முன்னெடுக்க உள்ளோம். அன்பர்கள் துணைநிற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பல்வேறு அருட்செயல்களைச் செய்த அடிகள் பெருந்தகை அவர்களுக்கு இவ்வாண்டு நூறாம் நாண்மங்கல ஆண்டாக அமைவதையொட்டி அடிகள் பெருந்தகையின் நூற்றாண்டு விழாவை, குடந்தை ஆதிசிவபிரகாச சுவாமிகள் அருட்பணி மன்றத்தின் நிறுவுநர், நமது ஆதீனத்தின் அருட்தொண்டர் சிவத்திரு தேவேந்திரன் அவர்கள் நடத்த இருப்பதும் அவ்விழாவில் அடிகள் பெருந்தகை வீரசைவ ஆதீனக் குரவர்களுக்கான பாமாலையாக அருளிச்செய்த குருமரபு நான்மணிமாலை நூலை வெளியிட இருப்பதும் மகிழ்வுக்குரியது.

அவ்வகையில் இந்நூல் சிறக்கவும், இப்பெருவிழா சிறக்கவும் சிவத்திரு தேவேந்திரன் அவர்களும் இந்நூலைச் செம்மையான முறையில் அச்சாக்கம் செய்த கவின் பதிப்பகம் சிவமிகு. அருண்சீனிவாசன் அவர்களும், இந்நூல் உருவாக உழைத்த அனைவரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல அருள்மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளையும் அருட்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் கயிலைக்குருமணி தமிழ்நெறிவழிபாட்டுத் தந்தை தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

சாந்தலிங்க மருதாசல அடிகள்



கௌமார மரபு தண்டபாணி சுவாமிகள் வழிவழி
சிரவை ஆதீனம் நான்காம் பட்டம்
குருமகா சந்நிதானம்
முனைவர் திருப்பெருந்திரு
இராமானந்த குமரகுருபர சுவாமிகள்
கௌமார மடாலயம்,
சின்னவேடம்பட்டி, கோயம்புத்தூர்

அருள் வாழ்த்துரை

'வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல்

பின்பேசும் அந்தாதியின்நாற் பதுபெறின் நான்மணிமாலை' ஆகும்.

இறையருளைப் பெற்ற நால்வரின் அருட்ச்செயல்களைப் பாடுவதாக சிவப்பிரகாசரால் இயற்றப்பட்டுச் சிறப்பெய்தியது சமயக்குரவர் நால்வரைப் போற்றும் நால்வர் நான் மணிமாலை. இதே போல சந்தானக்குரவருக்கும் பாடப்பெற்றுள்ளது. இந்த நான்மணி மாலைகள் அடியார்களின் பெருமையினையும், அவர்கள் பாடிய பாக்களின் சிறப்பையும் விளக்குவதாகும். அவ்வகையில் வீரசைவக்குரவர்களாகிய ஆதிசிவப்பிரகாசர், தவத்திரு சாந்தலிங்கஅடிகளார், குமாரதேவர், சிதம்பர அடிகள் ஆதிய நால்வரைப் பாடுவது குருமரபு நான்மணி மாலை. அங்கத்துடன் இலிங்கத்தைத் தரித்தவர்கள் வீரசைவர்கள். ஈசனை என்றென்றும் உள்ளத்தால் உருகி வழிபடினும், அங்கத்துடன் இலிங்கத்தை இணைத்திருப்பவர்கள்.

இவ்வாறு வீரசைவக்குரவர்களாக விளங்கி நிற்கும் நால்வரின் அருமை, பெருமைகளைப் பற்றி திருப்பேரூராதீனம் கயிலைக் குருமணி சீர்வளர்சீர் அடிகளார் அவர்கள் 'குருமரபு நான்மணிமாலை' என்ற நூலினை அருளியுள்ளார்கள். சைவத்தையும் தமிழையும் போற்றிப் பரப்பிய சந்நிதானங்கள் சமயம், சமுதாயம், கல்வி, பதிப்புப் பணிகள் திருக்கோயில் திருப்பணிகள், தமிழ்நெறி வழிபாடு போன்ற பல பணிகளை ஆற்றியவர்.

வீரசைவக்குரவர்களை அனைத்து அன்பர்களும் அறியவேண்டும் என்று குருமரபு நான்மணிமாலை நூலை இயற்றியிருந்தார். பெருமைமிக்க இந்நூல் தெய்வப்பெருந்திரு அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு குடந்தை மாநகரில் அடியார் பெருமக்களால் வெளியிடப்படுகிறது. இந்நூலினை உணர்ந்து படிப்பவர்களும் நூலின் புவலராக அமைந்தவர்களும் நூல் உருவாக உழைத்தவர்களும், எல்லா நலன்களும் பெற்று நீடினிது வாழ தண்டமிழ்க் கடவுள் தண்டாயுதபாணிக் கடவுளின் திருவருளையும் ஆதி குருமுதல்வர் தவப்பெருந்திரு இராமானந்த சுவாமிகளின் குருவரையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துகளுடன்

இராமானந்த குமரகுருபர சுவாமிகள்.

சிவமயம்

முன்னுரை

நான்மணிமாலை என்பது நான்கு வகைப்பட்ட மணிகளை முறையே தொடுத்து அமைக்கும் மாலைபோல வெண்பா, கலித்துறை, ஆசிரியவிருத்தம், ஆசிரியப்பா என்னும் நான்குவகைப் பாடல்களை முறையே அமைத்து, அந்தாதியாக 40 பாடல்கள் கொண்டு பாடப்படும் ஒரு நூல்.

"வெண்பா கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தாதி யின்நாற் பதுபெறின்
நான்மணி மாலை யாம்என நவில்வர்"

- இலக்கண விளக்கம்

குருமரபு நான்மணிமாலை என்னும் இந்நூல் ஆதி சிவப்பிரகாசர், சாந்தலிங்க அடிகளார், குமாரதேவர், சிதம்பரஅடிகள் என்னும் வீரசைவக் குரவர் நால்வர் மீது பாடப்பட்டது.

கோயில் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை என வழங்கும் நூல்கள், தமிழில் உள்ளன. இவை இறைவன்மீது பாடப் பட்டவை. பின்னர் அடியார்கள்மீது நான்மணிமாலை நூல்கள் பாடப்பட்டன. சமயகுரவர்கள்மீது பாடப்பட்டது நால்வர் நான்மணிமாலை. அதுபோல சந்தான குரவர்கள்மீது பாடப்பட்ட நான்மணிமாலையும் உண்டு.

வீரசைவ சந்தான குரவர் நால்வர்மீது இந்நூல் பாடப் பட்டுள்ளது. ஆதலின், முதலில் 'வீரசைவம்' குறித்துச் சிந்திக்கலாம். இதற்கு உதவும் விதமாக, சென்னை பல்கலைக்கழகச் சித்தாந்தத் துறையில் தலைவராகப் பணியாற்றிய **வை. இரத்தினசபாபதி** அவர்கள் கூறும் விளக்கத்தைத் தேவையான அளவு இங்கு எடுத்து ஆளலாம்.

'இலிங்காயதம் என்பது வீரசைவத்தின் இயற்பெயர். இதன் தோற்றம் கன்னடநாடு எனப் பலர் நினைக்கின்றனர்; அது தவறு. இதன் தோற்றம் தமிழ்நாடே ஆகும். சித்தாந்த சைவத்தில் சிவன் பரம்பொருளாகக் கூறப்படுவன். அது இலிங்காயதத்தில் 'இலிங்கம்' எனப்படுகிறது. ஆன்மாவானது அங்கம் எனப்படும். ஆன்மாவின் அகத்தே இருப்பது இலிங்கம் எனப்படும். இந்த இலிங்கமும் ஆன்மாவும் சேரும்போது, அது 'இலிங்காங்கம்' எனப்படும். வீரசைவர்கள் உடம்பின்மீது இலிங்கம் தரித்துக் கொள்வர். இது 'அங்கலிங்கம்' எனப்படும்.

சைவசமயத்தை வைதீக சைவம், சித்தாந்த சைவம், வீர சைவம் என மூன்றாக்கிப் பார்க்க, அது ஆயுத எழுத்தின் மூன்று புள்ளிகள்போல் அமையும். கீழேயுள்ள முதற்புள்ளி வைதீக சைவம்; கீழேயுள்ள இரண்டாவது புள்ளி சித்தாந்த சைவம்; இந்த இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டே நிற்கும். அந்தவகையில் வைதீகசைவம் 'பரம் - சீவன்' இரண்டும் ஒன்றே என்னும் கொள்கை உடையது. சித்தாந்தசைவம் 'பரம் -சீவன்' இரண்டும் வேறுவேறு என்னும் கொள்கை உடையது. இப்பொழுது மேலேஉள்ள புள்ளியாக விளங்குவது வீரசைவம். இது இந்த இரண்டு சைவங்களையும் தழுவி உயர்ந்து நிற்கிறது. அதாவது ஆன்மாவின் அகத்தே விளங்கும் இலிங்கத்தை விரவிவிரவி (தழுவித்தழுவி) இலிங்கநிலை பெற்று, பருஉடம்புவரை இலிங்கமாகவே விளங்குவது. இதுதரும் மரணமிலாப் பெருவாழ்வே முத்திநிலை'. (இது நிற்க).

நான்கு வீரசைவ குரவர்கள் குறித்துப் பாடப்பட்டது இந்நூல் என்பதை மேலே கண்டோம். இனி அவரவர்க்குத் தனித்தனியே ஒதுக்கப்பட்ட பாடல் **எண்கள்,** அப்பாடல்களில் விரவிவரும் **செய்திகள்,** அவர் குறித்து நூலாசிரியர் குறிப்பிடும் நயமான **பாடல்வரிகள்** என இவற்றை ஒரு பட்டியல்போல் காண்போம்.

1. ஆதிசிவப்பிரகாசர்

பாடல் எண்கள்:

1, 5, 9, 13, 17, 21, 25, 29, 33, 37 - இப்பாடல்கள் நேரிசை வெண்பா என்னும் யாப்பு வகையால் அமைந்துள்ளன.

செய்திகள்:

இவர் திருவாவடுதுறை குருநமச்சிவாயரைத் தமது ஆசானாக ஏற்றவர்; குருவின் ஆணைவழி சிதம்பரம் சென்று, ஆடல்வல்லான் வழிபாட்டில் ஏற்பட்டிருந்த இடையூற்றைக் களைந்து, வழிபாடு சிறக்க வழிசெய்தவர்; 'அத்துவித வெண்பா' உட்பட 16 சாத்திர நூல்கள் பாடியவர்; கிளைமடங்கள் பல தோற்றுவித்தவர்; வீரசைவ நெறியைப் பரப்பியவர்.

பாடல் வரிகள்:

''வீரசைவ உத்தமனாய்ச் சென்றாய் உயர்ந்து''

''மெய்கண்டார் மாமரபில் வந்துதித்து''

''அறிவால் அறிந்து ஞானவாழ்வு அருள்ஆசான்''

''புரிசடைசேர் முக்கண்ணன் போன்றே திகழ்ந்து''

2. சாந்தலிங்க அடிகளார்

பாடல் எண்கள்:

2, 6, 10, 14, 18, 22, 26, 30, 34, 38 - இப்பாடல்கள் கலித்துறை என்னும் யாப்பு வகையால் அமைந்தவை.

செய்திகள்:

கொலைமறுத்தல் முதலிய நான்கு சாத்திர நூல்கள் அருளியவர்; வீட்டின்பம் விரும்புவோர்க்குத் துறவுநெறியே உகந்தது என்று சொன்னவர்; பேரூரில் திருமடம் அமைத்தவர்; இந்நூலின் ஆசிரியராகிய நமது பேரூரடிகளாரை ஆட்கொண்டவர்.

பாடல் வரிகள்:

''மகிழ்ந்துஅன்பர் போற்றும் நல்ஞான நெறிநின்ற மாதவன்''

''மயல்அது நீங்கிடச் செந்தமிழ் நூல்தந்த மாதவனே''

''சிவப்பிரகாசர் அருள்கூடச் செம்பொருள் தேர்ந்துணர்ந்தாய்''

''போக்கும் வரவும் இலாததொர் பூரணன் சற்குருவாய்''

3. குமாரதேவர்

பாடல் எண்கள்:

3, 7, 11, 15, 19, 23, 27, 31, 35, 39 - இப்பாடல்கள் ஆசிரிய விருத்தம் என்னும் பா வகையால் அமைந்தவை.

செய்திகள்:

இல்லற வாழ்வையும் 0 அரசபதவியையும் துறந்து, துறவின் பெருமையை உலகுக்கு உணர்த்தியவர்; பேரூர் வந்து சாந்தலிங்க அடிகளாரைக் கண்டு, அவரைத் தம் ஆசானாக ஏற்றவர்; தமிழில் சுத்தசாதகம் முதலிய 16 நூல்கள் பாடியவர்; வீரசைவம் அருள்நெறியே என்பதை நிறுவத் திருவாரூரில் தேரை நிற்கவும் ஓடவுமாகச் செய்தவர்; திருமுதுகுன்றில் பெரியநாயகி அம்மை தரப் பாலமுது உண்டவர்.

பாடல் வரிகள்:

''தவநெறி வேண்டி மணிமுடி துறந்து''
''மாதவனாகி மணிமுடி துறந்து''
''முழுத்துறவு ஏற்று வீரசைவமே அருளாம் என்று''
''முதுகுன்றில் உற்ற அன்னை பால்அமுதம் உவந்து''
''திருவாரூரில் தேர்செலப் பணித்தாய்''
''கொத்தாய் நூல்கள் பலசெய்த குமார தேவே''

4. சிதம்பர அடிகள்

பாடல் எண்கள்:

4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40 - இப்பாடல்கள் நிலைமண்டில ஆசிரியப்பா என்னும் பா வகையால் ஆனவை.

செய்திகள்:

திருப்போரூரில் முருகப்பெருமானுக்குத் திருக்கோயில் எடுத்துத் திருப்பணி செய்தது; திருக்குளத் திருப்பணி செய்தது;

திருமடம் நிறுவியது; சாந்தலிங்கர் அருளிய நூல்களுக்கு விரிவுரை எழுதியது; மீனாட்சியம்மை கலிவெண்பா, திருப்போரூர் சந்நிதிமுறை முதலிய நூல்கள் பாடியது; சித்துகள் கைவரப்பெற்று மக்களுக்கு நோய் முதலியன நீக்கி உதவியது.

பாடல் வரிகள்:

''சாந்தலிங்கர் நூல்தகும் உரைசெய்த''

''பரைமீனாட்சி கலிவெண்பாவை அருளிய போரூர் சிதம்பர அடிகேள்''

''நுண்ணிய உரையினை நாலியலாக நல்கிய குரவன் உளம்கொள உரைத்தாய்''

''திருக்குளப் பணியும் செய்து''

மேலும் நூலாசிரியராகிய அடிகளார் அவர்கள், தமது குருமார்களிடம் தனக்கென எதுவும் வேண்டாதவராய், வீரசைவ நெறிக்கே உரிய ஞானவீரம் உடையவராய்த் திகழ்கிறார்; அதே வேளையில் தமிழர் வாழ்வு சிறக்க வேண்டுமாயின், அவர்கள் தங்கள் வாழ்வியல், அருளியல் சடங்குகளைத் தமிழில் - திருமுறை வழியில் நிறைவேற்ற வேண்டும் என்றும், அதற்குத் தமது குருமார்கள் தோன்றாத்துணையாய் இருந்து உதவவேண்டும் என்றும் விண்ணப்பம் செய்கின்றனர். அது அடிகளாரின் பேச்சிலும் மூச்சிலும் கலந்திருப்பதைக் காணமுடிகின்றது. அவை வருமாறு:

''செந்தமிழால் போற்றிச் சிவநெறிகள் நாடெங்கும்''

''உவந்துஅன்பர் கோயில் தொறும்செயும் உயர்தமிழால்''

''காட்சிக்குரிய தெய்வத்தைக் கனிந்த தமிழால் வழிபட''

''திருமுறைகள் அன்பால் ஓதி வேள்விபல பெருகு''

''வேள்வி தானும் தமிழில் எந்நாளும் பொலிவுறவே''

என்பன (இது நிற்க)

இனி, முன்னோர்களின் மொழியும் பொருளும் நூலாசிரியரால் சற்றே மாற்றம் செய்யப்பட்டுக் கையாளும் விதம் குறித்து அறியலாம்.

1. வள்ளலார்	:	''தேவே நின் அடி நினையா வஞ்ச நெஞ்சை'' திருவருட்பா - இரண்டாம் திருமுறை - திருச்சாதனத் தெய்வத்திறம் - பாடல் - 10.
சாந்தலிங்கர்	:	''தேவே உனை அன்பினில் பூசை செய்தேனும் அல்லேன்'' வைராக்கிய சதகம் - தோத்திரம் - பாடல் -18.
நூலாசிரியர்	:	''தேவே உனை அன்புடன் நாளும் பூசை செய்தேனும் அல்லேன்'' பாடல் - 2.
2. மாணிக்கவாசகர்	:	''செம்பொருள் துணிவே'' திருவாசகம் - பிடித்த பத்து - பாடல் - 1.
திருவள்ளுவர்	:	''செம்பொருள் காண்பது அறிவு'' திருக்குறள் - 358
சாந்தலிங்கர்	:	''செம்பொருள் காண்பது அறிவு'' வைராக்கிய தீபம் - பாடல் - 37.
நூலாசிரியர்	:	1. ''செம்பொருள் கண்டு ஓங்கும் குருநமச்சிவாயர்'' பாடல் - 1. 2. ''சிவப்பிரகாசர் அருள்கூடச் செம்பொருள் தேர்ந்துணர்ந்தாய்'' பாடல் - 14.
3. திருவள்ளுவர்	:	''பொறிவாயில் ஐந்தவித்துப் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார்'' திருக்குறள் - 6.
நூலாசிரியர்	:	''பொறிவாயில் ஐந்தவித்தார் போற்றும் கிளை மடங்கள்'' பாடல் - 21.
4. வள்ளலார்	:	''வித்தாய் முளையாய் விளைவதாகி'' திருவருட்பா - முதல் திருமுறை - மகாதேவமாலை - பாடல் - 3.

நூலாசிரியர்	:	**"வித்தாய் முளையாய் சிவநெறியின் விளக்கம்அதாக" பாடல் - 23.**
5. மாணிக்கவாசகர்	:	**"குறைவிலா நிறைவே" திருவாசகம் கோயில் திருப்பதிகம் - பாடல் - 5.**
நூலாசிரியர்	:	**"கோயில் திருப்பணி குறைவிலா நிறைவாய்" பாடல் - 8.**
6. உமாபதிசிவம்	:	**"எங்கும் எவையும் எரியுறு நீர்போல்" திருவருட் பயன் - பாடல் - 9.**
நூலசிரியர்	:	**"எரியுறு நீரெரன எங்கள் பரிபவம்" பாடல் - 25.**

இது விரிக்கின் பெருகும் (நிற்க).

இனி வேறு பல வகையினாலும் நூல் குறித்து ஆராயலாம். எனினும் விரிவு அஞ்சி, இதனை இத்துடன் நிறைவு செய்கிறோம்.

மேலும் இந்நூலிலுள்ள எல்லாச் சொல்லும் பொருள் குறிப்பனவாய், சொல்நயம், பொருள்நயம், யாப்பமைதி, அணிநலம், எனப் பல சிறப்புகளும் அமையப் பாடப்பட்டுத் தமிழன்னையின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாட்டுடைத்தலைவர் நால்வரும் இறைவனது திருவருளைப் பெற்றவர்கள் என்பதும், தாங்கள் பெற்ற திருவருளை ஏனையோரும் பெற்று உய்ய வேண்டும் என்னும் வள்ளல் தன்மை உடையவராய் முத்திக்கு வித்தாக அமைந்துள்ள பல சாத்திர நூல்களைப் பாடி அருளியவர்கள் என்பதும், அவர்கள் வாழும் காலத்திலேயே பல அருளிச் செயல்கள் நிகழ்த்தியவர்கள் என்பதும், அந்நால்வர் பெருமக்களது சரித நிகழ்வுகளை நூலாசிரியர் நெகிழ்ந்து பாராட்டியுள்ளார் என்பதும், அன்னாரது வரலாறுகள் இந்நூலில் சற்று விளக்கமாகத் தரப்பட்டுள்ளது என்பதும், அது படிப்போர்க்குத் தாங்களும் அப்பேற்றினைப் பெற முயல வேண்டும் என்னும் எண்ணத்தை உண்டாக்கும் என்பதும் நாம் அறிய வேண்டிய செய்திகளாக உள்ளன.

இந்நூலினைப் பாடியதோடு நில்லாமல், நம்மை எல்லாம் படிக்குமாறு பணித்த குருமகா சந்நிதானங்களின் பொன்னார்

திருவடிகளைத் தலைமேல் சூடி மகிழ்வோமாக! இது நூலாக வெளிவர அருளாணை வழங்கிய இளைய சந்நிதானங்களையும் மனம், மொழி மெய்களால் வணங்கி மகிழ்வோமாக!

இது நூல்வடிவம் பெறவும், வெளிவரவும், உடனிருந்து உதவி செய்த திருமட அன்பர் அ.அருண்சீனிவாசன், பேராசிரியர்கள் முனைவர் கா. நாகராசு, முனைவர் கா. திருநாவுக்கரசு, முனைவர் பட்ட ஆய்வாளர் திரு. ஆதி நாராயணசாமி ஆகியோர்களுக்கு அடியேனின் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நாடகத்தால் அடியார்போல் நடித்து திருமட அடியார்களாகிய உங்களோடு சேர்ந்து, மடத்தகத்தே புகுந்திட விரையும் அடியேனையும் ஏற்று அருளும் அன்பர்களின் பெருங்கருணைத் திறம் வியந்து, இந்நூல் தங்கள் கைகளில் தவழக் குருவருளும் திருவருளும் துணை நிற்க வேண்டி அமைகிறேன்.

"திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம் சித்திக்கில்
திருவடி யேசிவ கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே"

- திருமந்திரம்

இவண்

அடித்தொண்டன்

வீ. சிவஞானம்

உ
சிவமயம்

நூற்றாண்டு நாயகரின் அருள் வரலாறு

கோவை மாவட்டம் அன்னூருக்கு அருகில் முதலிபாளையம் என்னும் சிற்றூரில் தவத்திரு. சிவராமசாமி என்னும் அடியார் ஒருவர் வாழ்ந்து வந்தனர். அவர் சிரவை ஆதீன நிறுவனரும் முதல் குருவுமாய் விளங்கிய தவத்திரு. இராமனந்த அடிகளாரின் சீடர்களில் ஒருவராக விளங்கிய கீரணத்தம் தவத்திரு. மருதாசல அடிகளைத் தமது குருவாகப் பெற்றவர். அதனால் அடிகள் இருவரும் இவரது தோட்டத்திற்கு வந்து தங்கிச் செல்லும் வழக்கம் இருந்தது. சிவராமசாமி அடிகளார் அவர்கள், அடியார்களுக்கு வேண்டும் பணிவிடைகள் செய்து, அன்புமிக உடையவராய் வாழ்ந்து வந்தனர். அதன் பயனாக அப்பெருமக்களால் அமைத்துத் தரப்பட்ட விநாயகர் திருக்கோயிலில் எழுந்தருளி இருந்த விநாயகப் பெருமானை வழிபட்டு, அத்துடன் வேல்பூசையும் செய்து வருவாராயினர். இதுகுறித்து சிரவைஆதீனம் இரண்டாம் குருமகாசந்நிதானம் கந்தசாமி சாமிகள்,

> **''ராமானந்த பரம குருபரன் இருதாள் பற்றும்**
> **அன்புஆர் மருதாசலத் தவனுக்கு அன்பு அமையும்**
> **சரதநிலை யால்மாதவம் பெருக்கும் சிவராமசாமி**
> **மெய்க்கௌமார நலத்தவன்''**

என்று ''முதலிபாளையம் திருவருள் விநாயகமாலை' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவரது சமய வாழ்வுக்கு உறுதுணையாய் விளங்கும் விதமாகவே இவரது மனைவியார் இருந்தார். அவர் பெயர் கப்பினி அம்மாள் என்பது. இல்லறத்தை நல்லறமாகப் பேணிவந்த இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் முதலில் பிறந்தனர்.

அவதாரம் :

கப்பினி அம்மாள் என்னும் அத்தாயாரின் மணிவயிற்றில் தமிழும், தமிழர் வாழ்வும், வீரசைவ நெறியும் தழைக்க நான்காவது திருமகனாக வந்து அவதரித்தவர்தாம், இந்நூலின் ஆசிரியரும் பேரூராதீன குருமகா சந்நிதானங்களுமாய் விளங்கும் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள். இவர்கள் அவதரித்தது குரோதன ஆண்டு புரட்டாசித் திங்கள் மகம் நாளில் (கி.பி.1925) என்பது அறிக.

கல்வி:

அடிகளார் தமது தொடக்கக் கல்வியை உள்ளூரிலேயே கற்று வந்தனர். அப்பொழுதே தங்கள் தோட்டத்தில் வந்து தங்கும் குருமார்களுக்குப் பணிவிடை செய்து வளரும் பேறு பெற்றவர். பின்னர் 1941-ஆம் ஆண்டு தமது 15-ஆம் வயதில் சிரவை ஆதீனத்துக்கு வந்து, அங்கு தங்கியிருந்து, இராமனந்த அடிகளுக்குப் பணிவிடை செய்து, திருமடத்துப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். அப்பொழுது அம்மடத்தின் இரண்டாம் பட்டம் கந்தசாமி அடிகளிடம் சமய இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து, கவிபுனையும் அளவு ஆற்றலும் பெற்றனர்.

அதன் பின்னர் 1947-ஆம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டம் மயிலம் சிவஞானபாலய அடிகளார் தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து, ஐந்து ஆண்டுகள் தனித்தமிழ்க் கல்வி பயின்று, 1952-ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகப் புலவர் பட்டம் பெற்றார்கள். மயிலம் பொம்மபுரம் 18-ஆம் பட்டத்து அடிகளார் அவர்கள், சிரவை ஆதீனத்தோடு நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள். அடிகளும் சிரவை ஆதீன அன்பர் என்பதால், மாணவப் பருவத்திலேயே அனைவரின் மதிப்பையும் அன்பையும் பெற்று விளங்கினர்.

பேரூராதீன இளையபட்டம் :

வீரசைவ நெறியைச் சேர்ந்த சாந்தலிங்க தேசிகரால் தோற்றுவிக்கப்பட்ட திருமடம் ஒன்று பேரூரில் மிகவும் விளக்கமாக இருந்து வந்தது. அம்மடத்திற்கும் சிரவை கௌமார மடத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அப்பொழுது பேரூராதீனத்தில்

தவத்திரு. ஆறுமுக அடிகள் குருமுதல்வராய் எழுந்தருளி இருந்தார்கள். அவர்கள் தமக்குப் பின்னர் மடத்தை நடத்திவர ஒருவரை இளையபட்டமாக அமர்த்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராய், அதனை இவர் தந்தையார் மூலம் இராமானந்த அடிகளிடம் பகிர்ந்து கொண்டனர். அதுகேட்ட இராமானந்த அடிகள், மயிலத்தில் தமிழ் பயின்று வரும் ‘அடிகளை’ இளையபட்டமாக அமர்த்தலாம் என்றனர். அதன்படி விரோதி ஆண்டு மாசித்திங்கள் 20ம் நாள் (1950) அடிகள் பேரூராதீனத்தின் இளையபட்டமாகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்கள். அப்பொழுது மயிலம் பொம்மபுரம் ஆதீனம் 18-ஆம் பட்டம் சிவஞானபாலய அடிகளிடம் வீரசைவ தீட்சை பெற்று, இலிங்க தாரணம் (அங்கத்தில் இலிங்கம் தரித்தல்) செய்து கொண்டார்கள்.

குருமுதல்வராதல் :

இளைய பட்டமாக பொறுப்பேற்றது முதற்கொண்டு திருமட வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும், ஆகப் பல்வேறு பணிகளைக் கையிலெடுத்து, அடிகள் அயராது உழைத்து வந்தனர். திருமடத்திற்கு அன்பர் கூட்டம் பெருகியது. ஆறுமுக அடிகள் தமது முதுமை காரணமாக 1967-ஆம் ஆண்டு அடிகளாருக்கு குருமுதல்வராகப் பட்டம் சூட்டி மகிழ்ந்தனர். அடிகளும் துவராடை அணிந்து முழுத்துறவு மேற்கொண்டனர்.

அடிகள் சிற்றூரில் பிறந்து வளர்ந்தது; இராமானந்த அடிகளுக்குப் பணி செய்தது; பின்னர் சாந்தலிங்கர் திருமடத்தின் குருமுதல்வரானது போன்ற நிகழ்வுகள் அனைத்தும் சாந்தலிங்கப் பெருமானின் அருட்திறத்தால் நிறைவேறியது என்பதை இந்நூலின் 18-ஆம் பாடலில் பதிவு செய்துள்ளார்கள். அகச்சான்றாக விளங்கும் அப்பாடல் இதோ:

கட்டளைக் கலித்துறை

“நாயன தீக்குணக் கூட்டம் தவிரும் நலனறியாத்
தீயனை ஆட்கொண்டு சிற்றூரில் வாழும் சிறுமைஇன்றித்
தாயன்பால் நோக்கி அருள்ராமா னந்தர் தரும்பணியால்
ஆய புலமை யுடன்ஆதீ னப்பணி ஆய்ந்தனனே” (18)

கல்வி நிறுவனங்கள் தொடங்குதல் :

அடிகள் பேரூர் மடத்தின் இளையபட்டமாகப் பொறுப்பேற்ற காலம், நாடு விடுதலை அடைந்து, குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட காலம். அந்நாளில் மக்களிடம் அறியாமையும் வறுமையும் மலிந்திருந்தன. அறியாமைக்குக் காரணம் கல்வி இன்மை. எனவே சிறார்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும், சமூகமதிப்பு பெற்றவர்களுக்கும் இருந்தது. அந்த அடிப்படையில் அரசின் உதவியோடு அடிகள், 1951-ஆம் ஆண்டு 6 ஆம் வகுப்பு வரை உள்ள ஒரு பள்ளியைத் தொடங்கினார்கள். அது 1952-இல் 7-ஆம் வகுப்பும், 1953-ல் 8-ஆம் வகுப்பும் கொண்டு, ஒரு நடுநிலைப்பள்ளி ஆனது. 1955-இல் பள்ளிக்கென ஒரு கட்டிடம் கட்டப்பட்டது.

பின்னர் 1960-இல் 9 ஆம் வகுப்பும், 1980-ஆம் ஆண்டில் 10, 11 -ஆம் வகுப்புகளும், 1990-இல் 12-ஆம் வகுப்பும் தொடங்கப்பட்டு இன்று மேல்நிலைப்பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது. 6 முதல் 10-ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி வகுப்பு களும் நடைபெற்று வருகின்றன.

1977-இல் ஞானாம்பிகை அம்மையார் பெயரில் நுழைவுரிமைப் (மெட்ரிக்) பள்ளியும், 1999-ஆம் ஆண்டில் ஆறுமுக அடிகள் பெயரில் தாய்த்தமிழ்ப் பள்ளியும் தொடங்கப்பட்டு அவைகளும் நடந்து வருகின்றன.

1953-ஆம் ஆண்டு, பேரூர் பட்டிப்பெருமான் திருக்கோயிலில் தமிழில் வழிபாடு செய்யப்பட்டு, திருமடத்தில் தமிழ்க்கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழகத்தில் தமிழ்வழிபாட்டு முறை முளை விடுவதற்கு ஊன்றப்பட்ட விதை என்று வரலாறு இந்நிகழ்வைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அடிகள்அவர்கள் அக்கல்லூரியில் பேராசிரியராகவும், துணை முதல்வராகவும், 1961-ஆம் ஆண்டு முதல், பணிக்காலம் முடியும் வரை முதல்வராகவும், அதன் பின்னர் செயலராகவும், தற்பொழுது தலைவராகவும் பணியாற்றி வருகிறார்கள். புலவர் பட்டயப் படிப்பு 1975-ஆம் ஆண்டில் அடிகளின் முயற்சியால் இளம் இலக்கியவியல் (Bachelor of Literature) என

இளங்கலைப் பட்டப் படிப்பாக மாற்றம் செய்யப்பட்டது. இது ஏனைய இளங்கலைப் படிப்புக்கு இணையானது என அறிவிக்கப் பட்டது. இதனால் தமிழ் மொழியும் தமிழ் படித்தவர்களும் தலைநிமிரும் சூழல் உருவானது. 1983-இல் முதுகலையும் (M.A.,), ஆய்வில் நிறைஞர் (M.PHIL.,), ஆய்வில் முனைவர் (PH.D.,) ஆகிய பட்ட மேற்படிப்புகளும் அக்கல்லூரியில் தொடங்கப்பட்டதுடன், 1989-ஆம் ஆண்டு கலை அறிவியல் கல்லூரியாக விரிவாக்கம் பெற்றது. 1993-ஆம் ஆண்டு தற்செல்வப் பிரிவு (Self Finance) வகுப்புகள் சிலவும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. பணப்புழக்கம் மிகவும் அருகி இருந்த காலம் அது, என்பதால் இந்த வளர்ச்சியின் பின்னணியில் **அடிகளின் அயரா உழைப்பு** ஒளிந்திருக்கிறது.

சமயப் பணி :

அடிகள் அங்கத்தில் இலிங்கம் தரித்திருப்பதால் நாளும் அந்த இலிங்கத்திற்குப் பூசை தவறாது இயற்றுதல் வேண்டும். அங்கம் வேறு, இலிங்கம் வேறாக இருந்தால் பூசை தவறிவிடுமோ? என்ற அச்சம் காரணமாகவே, வீரசைவர் அங்கத்தில் இலிங்கம் தரித்துள்ளனர். பூசையின் போதும்கூட இலிங்கத்தை இடக்கையில் வைத்துப் பூசித்துப் பின்னர் உடம்பில் தரித்துக் கொள்ளுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இலிங்கத்தை உடம்பைவிட்டு தனித்திருக்கச் செய்தல்ஆகாது. இந்த இலிங்கத்துக்குத்தான் 'சாந்தலிங்கம்' என்பது பெயர். இதனை பேரூர்த் திருமட நிறுவனர் தம்பெயராகப் பெற்றிருந்தார்கள். அடிகளும் தம்பெயரோடு அப்பெயரை இணைத்து, வழங்கிவரும் வழக்கம் உடையவராயினர். இது ஆத்மார்த்த பூசை. திருமடத்தில் இலிங்க உருவில் எழுந்தருளி இருக்கும் சாந்தலிங்கப் பெருமானுக்கும், அம்பலவாணருக்கும், நாள் வழிபாடு செய்து வருதல் வேண்டும். அடிகள் திருமடத்தின் தலைவர் என்பதால் அதிகாரம் உடையவர் பூசை என்ற பெயரில் அதனையும் செய்யும் உரிமை அடிகளுக்கு உண்டு. நாள் வழிபாடு தவிர, சாந்தலிங்க அடிகள் திருவருள் கலப்பு எய்திய மாசி மகம் நாளில் குருபூசையும், திங்கள் தோறும் வரும் மகம் நாளில் சிறப்பு

வழிபாடும், நடத்தி வருதல் வேண்டும். அத்துடன் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சமாதிக் கோயில் புதுப்பிக்கப்பட்டுத் திருக்குட நீராட்டும் நடத்தப் பெறுதல் வேண்டும். இவை அனைத்தும் அடிகள் பெருந்தகையின் காலத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சமயமும் சமுதாயமும் வேறுவேறானவை அல்ல. சமயம் சார்ந்துதான் சமுதாயம் அமையும். ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாடிய பாரதி கூட, ''சமயங்கள் இல்லையடி பாப்பா'' என்று பாடவில்லை. கடவுள் மறுப்புக் கொள்கையாளர் வாழ்விலும் கூட திருமணம், இறப்பு என்ற இரண்டு நிகழ்வுகளின் போது 'என்ன செய்யலாம்; எவ்வாறு செய்யலாம்'' என்ற வினாக்கள் எழாமல் இருப்பது இல்லை.

எனவே, இனி, சமுதாயத்துக்கு அடிகள் ஆற்றிவரும் சமயப் பணிகள் குறித்துக் காணலாம். அவையாவன: சமய வகுப்புகள் நடத்துதல், அடியார்களை உடன் அழைத்துச் சென்று உழவாரப் பணிகள் செய்வித்தல், வாழ்வியல் அருளியல் சடங்குகளைத் தமிழ்வழி நடத்தப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல், திருநெறிய தமிழ் முறைப்படி திருக்குட நீராட்டு விழாக்களை நடத்துதல், தமிழ் அர்ச்சனை முறையை மக்களிடையே பரவுமாறு செய்தல், திருமுறை முற்றோதல்கள் செய்வித்தல், தமிழகத் துறவியர்களை இணைத்து ஒதுக்கப்பட்டவர்களிடத்தும் சமயநெறி பரவச் செய்தல், தமிழக இந்து சமய அறநிலையத்துறை வழி, 'ஆலோசனைகளை' அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லுதல், கோயில் விழாக்களில் பங்கேற்று ஆசியுரை வழங்குதல் முதலியன. அடிகள் மேற்கொண்ட பணிகள் செவ்வனே நடைபெற உருவாக்கப்பட்ட அமைப்புகள் குறித்தும், அவற்றில் அடிகள் வகித்த பதவிகள் குறித்தும் இனிக் காணலாம்.

பதவிகள் :

1. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம் 2. உலக சைவப் பேரவை 3. தமிழகத் துறவியர் பேரவை 4. சத்வித்ய சன்மார்க்க சங்கம் 5. தவத்திரு சாந்தலிங்கர் நினைவு அறக்கட்டளை 6. தவத்திரு சாந்தலிங்கர் கல்விக்குழு 7. தவத்திரு சாந்தலிங்கர் கல்லூரிக் கழகம் 8. ஞானாம்பிகை நுழைவுரிமைப் பள்ளி 9. ஆதீன குரு முதல்வர்களது சமாதிக்கோயில்கள் 10. அருள்மிகு அம்பலவாணர்

வழிபாட்டுக் குழு 11. கோவை, நீலகிரி, ஈரோடு மாவட்டத் திருக்கோயில் வாரியக்குழு ஆகியவற்றில் **தலைவராகவும்;**

1. இலண்டன் திருக்கோயில் திருப்பணிக்குழு 2. குறள்நெறி பரப்பும் குழு 3. சேக்கிழார் ஆய்வுமையம் 4. மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் 5. மொரிசியசு சாந்தலிங்கர் திருத்தொண்டர் கூட்டம் 6. தென்னாப்பிரிக்கா சிவமன்றம் ஆகியவற்றில் **புரவலராகவும்** இருந்து பணியாற்றி உள்ளார்கள்.

பல்கலைக்கழகப் பணிகள் :

சென்னை, மதுரை, கோவை பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலை தேர்வுக்குழுத் தலைவராகவும்; 1961-ஆம் ஆண்டு முதல் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் முதல்வராகவும்; சென்னை பல்கலைக்கழக, ஆட்சி மன்றக் குழு, கல்விக்குழு, தமிழ்க் கல்லூரி பாடத்திட்டக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள். சென்னை பல்கலைக் கழகம் அடிகளார் பெயரில் **'தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் குழு'** என்று பெயரிடப்பட்ட ஒரு குழுவினை அமைத்துப் புலவர் கல்லூரிகளைப் பி.லிட்., கல்லூரிகளாக மாற்ற வகை செய்தனர். அதில் அடிகளால் முன்வைக்கப்பட்ட ஆறு தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

எழுத்துப் பணி :

நாளிதழ்களில் அடிகள் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதி உள்ளனர். அடிகள் எழுதும் வாழ்த்துச் செய்தி பெரும்பாலும் ஆசிரிய விருத்தங்களாக இருக்கும். ''தமிழ்நெறிக் கட்டுரைகள்'' என்னும் தலைப்பில் அடிகளின் கட்டுரைகள் நூலாக வெளியிடப் பட்டுள்ளது. மேலும், சமய சமுதாய அமைப்புகள் வெளியிடும் மலர்களில் வாழ்த்துரைகள் எழுதுதல், ஆதீனத் திங்களிழதாகிய சிவசாந்தலிங்கரில், 'அடிகள் அருளமுதம்' என்ற தலைப்பின் கீழ்த் திங்கள் தோறும் எழுதுதல், பல்வேறு ஆன்மீக நூல்களுக்கு வாழ்த்துக்களைப் பா வடிவில் எழுதுதல், நூல் மதிப்பீடு எழுதுதல், ஆய்வுக் கட்டுரை எழுதுதல், நூல்கள் உருவாக உதவுவதல் என்பன போன்ற எழுத்துப்பணிகள் தொடர்ந்து செய்து வருகின்றனர். அத்துடன் தாம் கலந்து கொள்ளும் விழாக்கள் அனைத்திலும்

அடிகள் ஆசியுரை வழங்குவர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அடிகள் கலந்து கொண்ட விழாக்களையும் உரைகளையும் எண்ணிச் சொல்வார் ஒருவருமிலர். வானொலி, தொலைக்காட்சிகள் வாயிலாகவும் விழாக்காலங்களில் பொதுமக்களுக்கு ஆசியுரை வழங்குவார்கள். அடிகளாரின் பணிகளைப் பாராட்டிச் சென்னை பல்கலைக்க கழகம் தனது 150-ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது, அடிகளுக்கு 'முது முனைவர்' (D.Lit.,) பட்டம் வழங்கிச் சிறப்பித்துத் தானும் சிறப்பு பெற்றது.

தலப்பயணம் :

அடிகள் தம் வாழ்நாளில் தமிழகத்திலுள்ள பல திருக்கோயில் களுக்கும் பலமுறை பயணம் செய்து வந்துள்ளனர். சிறப்புப் பயணமாக 1960, 62, 67, 72 -ஆம் ஆண்டுகளில் கேதாரநாத் பயணமும் 1982-ஆம் ஆண்டு சூலை ஆகஸ்டுத் திங்களில் அமர்நாத், திருக்கயிலைப் பயணமும் மேற்கொண்டனர்.

மாநாடுகள் :

1957-ல் டில்லியில் நடைபெற்ற கீழ்த்திசை மொழிகள் மாநாட்டில் கோவைகிழார் அவர்களுடன் சென்று கலந்து கொண்டது. 1983-ஆம் ஆண்டு உலக இந்து மகளிர் மாநாட்டை கோவை மாநகரில் நடத்தியது. 1985-ஆம் ஆண்டில் மலேசிய நாட்டில் நடைபெற்ற உலக இந்து மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டது. மற்றும் உலகத் தமிழ் மாநாடு, உலக சைவ மாநாடு, உலக இந்து மாநாடு, துறவியர் மாநாடு எனப் பலமுறை நடைபெற்றப் பல மாநாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றி உள்ளனர். சில மாநாடுகளைத் தாமே முன்னின்று நடத்தியும் சைவத்துக்கும் தமிழுக்குமான தமது பங்குபணிகளை ஆற்றியுள்ளனர்.

நாடு விடுதலை அடைந்து 67 ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரும் கூட இன்னும் அவரவர் தாய்மொழி வழிக் கல்வி பயில வழிவகை செய்யப்படவில்லை. ஆங்கில வழியில் கல்வி பயில்வதால் மாணவரின் சிந்தனை ஆற்றல் மங்குகிறது. இதனைப் பலரும் அறிவர். இருப்பினும் அதுகுறித்த விழிப்புணர்வு தேவைப் படுகிறது. அதனை நினைவுபடுத்தும் விதமாக, 2013-ஆம் ஆண்டு

செப்டம்பர்த் திங்களில் தமிழ்ப் பயிற்று மொழி மாநாட்டை முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களைச் சிறப்பு விருந்தினராக அழைத்து, கோவை மாநகரமே பாராட்டும் விதமாக அடிகள் முன்னின்று வெகுசிறப்பாக நடத்தி முடித்தனர்.

குணச்சிறப்புகள் :

எளிமை, உழைப்பு, சிந்தனைத் தெளிவு, மக்களை நன்னெறிப்படுத்தும் திறம் ஆகிய உயர் குணங்களின் உறைவிடமாக அடிகள் திகழ்கின்றனர். இதனால் சமய, சமுதாய பண்பாட்டுச் சிக்கல்கள் தோன்றும் போதெல்லாம் அடிகளார் அவற்றை முன்னின்று பலமுறை சீர்செய்துள்ளனர். மேலும் விருந்தோம்புதல், கொண்ட கொள்கையில் பிடிப்பு, செயலில் ஆர்வம், இன்முகம் காட்டி அனைவருடனும் பழகுதல், விடாமுயற்சி, தமிழ் வழிபாட்டில் ஆழங்கால்பட்ட ஈடுபாடு, சமயக்காழ்ப்பு இன்மை, சமரச சன்மார்க்கம் பேணுதல், அறியாமையால் தவறிழைத்துவிட்டுப் பின்னர் வருந்தும் சிறைவாசிகளிடமும் பரிவு காட்டுதல், நோயாளிகள் நலம் பெற திருநீறு அளித்தல், பாமர மக்கள் அறியாமையால் செய்யும் சிறுதெய்வ வழிபாட்டில் ஆடு, கோழி பலியிடுதலைத் தக்காங்கு எடுத்துரைத்துத் தடுத்தல், உயர் ஒழுக்கம் உடைய இந்து மதம் தழுவிய குடும்பத்தில் (சைவம், வைணவம்) பிறந்திருந்தும், அறியாமை மிகுதியால் பிற சமயங்களுக்கு மாறியோர், தாய்மதம் திரும்ப விரும்பும் போது, அவர்களைப் பரிவோடு ஏற்று, அவர்க்கு இடைக்காலத்தில் (மதம் மாறிய காலத்தில்) ஏற்பட்டிருந்த இடர்பாடுகளைக் களைதல், திருமடத்துக்கு வரும் வார, மாத, காலாண்டு இதழ்கள்; மதிப்பீட்டிற்காக வரும் நூல்கள்; வாழ்த்துரை பெறவரும் நூல்கள்; என அனைத்தையும் படித்துவிடும் பழக்கம் முதலியன அடிகளுக்கு உண்டு.

நெல்லிக்காவில் தங்குதல் :

வெள்ளியங்கிரி மலைச்சாரலில் சாடிவயல் பகுதியில் திருமடத்துக்குச் சொந்தமான நெல்லிவனம் ஒன்று உள்ளது. அங்கு தென்கயிலை தவ நெறிச்சாலை அமைக்கப்பட்டு, அதில் ஒரு சிவலிங்கமும் நிறுவப்பட்டுள்ளது. சகமுகமாகச் (சகம் - உலகம்)

செல்லும் மனத்தை அகமுகமாகத் திருப்பவும், அதன் வழி தன்னையும் (சீவ தரிசனம்), தலைவனையும் (சிவ தரிசனம்) அறிய முடியும் என்பதாலும் அடிகள் பெருந்தகை ஆண்டின் பெரும்பகுதி நாட்களை அங்கு கழிக்கவே விரும்புகின்றனர்.

அவதார நோக்கம் :

'அவதாரம்' என்ற சொல்லுக்கு 'இறங்குதல்' என்பது பொருள். இறங்குதல் என்னும் போது, 'மேலிருந்து கீழ் இறங்குதல்' என அது, விளங்கிக் கொள்ளப்படும். அவ்வாறு மேலிருந்து (மேலான உலகங்களிலிருந்து) கீழ் இறங்கி (நில உலகுக்கு) வருவோர், ஏதேனும் ஒரு வலுவான காரணம் பற்றியே வருவர். இதன் மறைபொருளை இறைவர் ஒருவரே அறிவர்.

பெரியபுராணத்துள் அறுபத்துமூன்று நாயன்மார் சரிதங்கள் பேசப்பட்டிருக்கிறது. அவற்றுள் தேவார மூவரும் அடங்குவர். அந்த மூவரின் தோற்றம் குறித்துப் பேசிய சேக்கிழார் பெருமான், தவறாமல் அம்மூன்றிடத்தும் அவதாரம் என்ற சொல்லையே பயன்படுத்தி உள்ளார். அவை வருமாறு:

1. "சிவம் பெருக்கும் பிள்ளையார் **திருஅவதாரம்** செய்தார்.
2. "மருள்நீக்கியார் வந்து **அவதாரம்** செய்தார்".
3. "தீதுஅகன்று உலகம் உய்ய **திருஅவதாரம்** செய்தார்"

இவை முறையே, ஆளுடைய பிள்ளை, ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி ஆகிய மூவர் குறித்து எழுந்த வரிகள்.

பிள்ளையும் அரசும் உலகுக்கு வரக்காரணம், 'தமிழகத்தை விட்டுச் சமணம் விலக வேண்டும், சைவம் தழைக்க வேண்டும்' என்பது. நம்பிகளது வரவுக்குக் காரணம், 'திருத்தொண்டத் தொகை' தமிழில் பாடப்பட வேண்டும் என்பது. அவ்வாறு அவர்கள் மூவரும் அவதாரம் செய்து, தலம் தோறும் சென்று, இறைவனைப் பாடி உலகுக்கு விட்டுச் சென்றவை தேவாரத் திருப்பதிகங்கள். ஆளுடைய நம்பிகளிடம் இறைவர் இதனைக் கேட்டே பெற்றுள்ளார். இது குறித்துச் சேக்கிழார்,

"நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக!" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடல்கள் மீது தமக்கு இருந்த பற்றுதல் காரணமாக இறைவர், இராசராசப் பேரரசன் மூலமாகத் திருக்கோயில்களில் ஓதுவார்களை நியமிக்கச் செய்து, திருமுறைகளைப் பாடுமாறு பணி கொண்டார். பிள்ளையும் அரசும் 7-ஆம் நூற்றாண்டினர். நம்பி 9-ஆம் நூற்றாண்டினர். இராசராசன் 10-ஆம் நூற்றாண்டினன். அதன்பிறகு 10 நூற்றாண்டுகள் அமைதி காத்த இறைவர், 20-ஆம் நூற்றாண்டில், 'ஓதுவார்களேயன்றி அடியார்களும் தன்னைத் திருமுறைத் தமிழால் பாடவேண்டும் என்றும், தமிழரின் அருளியல் வாழ்வியல் சடங்குகள் தமிழ் மொழி வழியே நடைபெற வேண்டும் என்றும், விருப்பம் கொண்டு, **அடிகள் பெருந்தகையை அவதாரம் செய்வித்து** அவ்விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டனர்.

தமிழில் 'புலவர்' படித்தவர்களுக்கு மட்டும், 'சமய இலக்கியம்' என்ற அளவில் அறிமுகமாகி இருந்த 'திருமுறை' இன்று பாமரனும் ஓதும் அளவு ஒரு சூழல் உருவாகக் காரணமானவர் அடிகள் பெருந்தகை என்பதை நாடு அறியும். அதனை வரலாறு, தன்னில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

திருமடம் ஆற்றிவரும் பணிகள்

தமிழையும் சைவத்தையும் எப்படி பிரித்து அறிய முடியாதோ, அதுபோல அடிகளையும் திருமட வளர்ச்சியையும் பிரித்து அறிய முடியாது. அதனால் திருமடம் இதுகாறும் ஆற்றி வந்துள்ள பணிகளின் தொகுப்பையும் இங்கு தருகிறோம்.

சமயப் பணிகள் :

1954 - ஆம் ஆண்டு முதல் பொதுமக்களுக்குச் சாதி, பாலினம், வயது வேறுபாடின்றி வாழ்வியல் அருளியல் சடங்குகள், வழிபாடுகள் நடத்துவதற்கு உரிய பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இதுவரை 150 மகளிர் உட்பட 900-ம் பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்கள் தமிழ்மொழி வழியாகவே பிள்ளையார் வேள்வி, திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு முதலிய அருளியல் நிகழ்வுகள், புதுமனைப் புகுவிழா, திருமணம், மணிவிழா முதலியன வாழ்வியல் நிகழ்வுகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றனர். இதுவரை 5000-க்கும் மேற்பட்ட கோயில்கள் தமிழ்வழியில் திருக்குட நன்னீராட்டுப் பெற்றுள்ளன.

இயற்கைச் சீற்றத்தாலும், பராமரிப்பு இன்மையாலும் பழுதடைந்த 10-க்கும் மேற்பட்ட கோயில்கள் திருமடத்தால் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 6 கோயில்கள் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை. பலநூறு சிறுகோயில்களின் திருப்பணிகளுக்கும் திருமடம் துணை நின்றுள்ளது.

பழையாறை வடதளி, ஆதி சிவப்பிரகாசர் கோயில், மடம் ஆகியன அடிகள் பெருந்தகையின் ஆதரவுடன் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளன. பேரூர் பட்டிப்பெருமான் திருக்கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு நடத்தியமை, பச்சை நாயகிக்குத் திருத்தேர் திருப்பணி, மருதமலை திருக்கோயில்

இராசகோபுரத் திருப்பணி, குடமுழுக்கு, தங்கத்தேர் திருப்பணி, சிவன்மலை முருகப்பெருமான் திருக்கோயில் புதுப்பிப்பு, குடமுழுக்கு, திருத்தேர் திருப்பணி, கோனியம்மன் கோயில் ஏழுநிலை இராச கோபுரம் திருப்பணி முதலியவற்றுக்கும் பெரிய அடிகள் பெரும்பங்காற்றி உள்ளார்கள்.

உலக இந்துப் பேரவை (வி.எச்.பி), தமிழகத் துறவியர் பேரவை, இந்தியத் துறவியர் பேரவை, ஆச்சாரியர் சபை ஆகிய சமய அமைப்புகளில் பங்கேற்றுச் சமய வளர்ச்சிப் பணிகளில் துணை நின்று வருகின்றது.

அருளாளர்களின் அருட்பாடல்களை அனைவரும் படித்துப் போற்றும் வகையில் சிறு வெளியீடுகளும் கையேடுகளும் அச்சிடப்பட்டு சிறப்பு நாட்களில் அன்பர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 50 வகையான தலைப்புகளில் 3 இலட்சம் படிகள் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து 15 ஆண்டுகளாக 45-க்கும் மேற்பட்ட சமயப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, அதனால் 3000-ம் பேர் பயனடைந்துள்ளனர்.

கடந்த 50 ஆண்டுகளில் இதுவரை 12000-ம் பேர் திருமடத்தின் மூலம் தாய்மதம் திரும்பியுள்ளனர். சிறைவாசிகள் பயனடையும் வகையில் திங்கள் தோறும் சிறப்பு வகுப்புகள், வழிபாடு நடத்துதல் முதலியன செய்யப்பட்டு வருகின்றன.

மலைவாழ் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோர் பயனடையும் வகையில், ஞானாம்பிகை வழிபாட்டுக் குழுவினரால் 'திருவிளக்கு வழிபாடுகள்' நடத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

பேரூர், வெள்ளிமலை, மருதமலை, ஈச்சனாரி, முத்தூர், கோயில்பாளையம் கோயில்களில் சிறப்புக் கட்டளைகள் மூலம் வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. தென்கயிலாய தவநெறிச்சாலை மூலம் மந்திர தீட்சை, துறவுப்பயிற்சி ஆகியன பலருக்கு அளிக்கப் பட்டுள்ளன. மலேசியா, மொரீசியசு, கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, தென்ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அன்பர்கள் பலரும் சமயதீட்சை, சிவபூசை தீட்சை, ஆசாரிய தீட்சை, வீரசைவ தீட்சை ஆகியன பெற்று சைவநீதியைப் பேணிவருகின்றனர்.

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, அருள்நெறித் திருக்கூட்டம், சாந்தலிங்கர் அருள்நெறி மன்றங்கள் மூலம் கூட்டு வழிபாடு, உழவாரப்பணி, நூல் வெளியீடு முதலியன நடைபெறுகின்றன.

அவ்வப்போது அடியார்களைப் பாடல் பெற்ற தலங்கள், கயிலை, கேதாரநாத், அமர்நாத் முதலிய புண்ணியத் தலங்களுக்கும் அயல்நாடுகளுக்கும் சாந்தலிங்கர் திருத்தலப் பயணக்குழு மூலம் அழைத்துச் சென்று வழிபடச் செய்துள்ளது. இதன் வழி இதுவரை 20000-ம் அன்பர்கள் பயனடைந்து உள்ளனர். அம்பலவாணர் வழிபாட்டுக்குழு மூலம் வழிபாடு, அன்னம்பாலிப்பு முதலியன நடைபெற்று வருகின்றன.

சமுதாயப் பணிகள் :

ஆண்டு தோறும் அடிகளின் நாண்மங்கல விழாவின் போது (புரட்டாசி - மகம்) 1000-ம் பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடைகளும் 300 பேருக்கு ஆடைக்கொடையும் வழங்கப்பட்டு வருகின்றன. மலைவாழ் மக்களுக்குக் கடந்த 18 ஆண்டுகளாக ஆடைக்கொடையும், அன்னம்பாலிப்பும் தைத்திங்களில் பொங்கல் வைப்பதற்கு உரிய பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

சாந்தலிங்கர் கோசாலை அறக்கட்டளை தொடங்கப்பட்டு 40 பசுக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் பிராணிகள் நலவாரியம் கோசாலையை அங்கீகரித்துள்ளது.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டுதோறும் உழவர்களுடன் சேர்ந்து மழைவேண்டிப் பூண்டியிலும் வெள்ளியங்கிரி மலை உச்சியிலும் வேள்விகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1960-ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை அன்பு இல்லம் மூலம் 30 ஆதுரவற்ற குழந்தைகளுக்கு கல்வி, உணவு, இருப்பிடம் தந்து, நன்னெறிகளைப் போதித்து வளர்த்து வரப்படுகின்றனர்.

மகளிருக்கு கைவினைப்பொருட்கள் தயாரிப்பு, தையல் பயிற்சிகளும் ஆடவர்க்கு மின்சாதனப் பொருட்கள் பழுதுபார்த்தல் பயிற்சியும் 6 மாத காலஅளவில் தரப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் பொங்கல் திருநாளையொட்டி வேளாண் தொழிலில் சிறந்து விளங்கும் உழவர்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 55 பேர் விருதுகள் பெற்றுள்ளனர்.

இலக்கியப் பணிகள் :

1914-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சத்வித்ய சன்மார்க்க சங்கத்தின் மூலம் ஞானியார் அடிகள், மறைமலை அடிகள், திரு.வி.க. சுத்தானந்த பாரதியார் போன்ற சிறந்த இலக்கிய அறிஞர்களைக் கொண்டு இலக்கியத் தொடர் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சாந்தலிங்கர் அருளிய நூல்களும் மற்றும் பலநூல்களும் அவ்வப்போது குமாரதேவர் பதிப்பகத்தின் மூலம் வெளியிடப் படுகின்றன. சித்தர் இலக்கியம், பெருங்கதை, சிவப்பிரகாசர் நூல்கள், தொல்காப்பியம் ஆகியவற்றில் தேசியக் கருத்தரங்கம் நடத்தப்பட்டு ஆய்வுமாலைகள் வெளியிடப்பட்டுள்ளன. 18 ஆண்டுகளாக சிவசாந்தலிங்கர் என்னும் திங்களிதழ், திங்கள் தோறும் 3000-ம் படிகள் வெளியிடப்படுகிறது.

மருத்துவப் பணிகள் :

1998-ஆம் ஆண்டிலிருந்து புதன்கிழமை தோறும் 50 முதல் 100 பேருக்கு மருத்துவ ஆலோசனையும், மருந்துகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. உதகையிலுள்ள திருமடத்தில் 1938-ஆம் ஆண்டிலிருந்து இலவச சித்த மருத்துவமனை இயங்கி வருகிறது. வியாழக்கிழமை தோறும் அலோபதி மருத்துவ ஆலோசனையும் மருந்துகளும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் 100 முதல் 150 பேர் வரை பயனடைந்து வருகின்றனர்.

சாடிவயல் மையத்தில் மூலிகைப்பண்ணை காட்சியகம் உள்ளது. சித்தமருத்துவ மூலிகைக் கண்காட்சி நடத்தப்படுகிறது. ஆண்டுக்கு மூன்று முறை மலைவாழ் மக்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

அவ்வப்போது கண், பல், பொது மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அதன்மூலம் 5000-ம் பேர் பயன் அடைந்துள்ளனர்.

15 பேருக்கு இதய அறுவை சிகிச்சை, ஏனைய அறுவை சிகிச்சைக்கும் உதவப்பட்டுள்ளன. திருமடத்தோடு தொடர்புடைய மருத்துவர்கள் மூலம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. சாந்தலிங்கர் குருதிக்கொடை குழு மூலம் 500 பேருக்கு குருதிக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

கல்விப் பணி :

1953-ஆம் ஆண்டு தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி தொடங்கப்பட்டு, இதுவரை 4000-த்திற்கும் மேற்பட்ட புலவர்களைத் தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தந்துள்ளது. இப்பொழுது கலை, அறிவியல், வணிகவியல் பட்டப்படிப்புகள், முதுகலை பட்டப் படிப்புகள், ஆய்வியல் நிறைஞர், முனைவர் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

கல்லூரி நூலகத்தில் கிடைத்தற்கரிய400-க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள், 15000-க்கும் மேற்பட்ட நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தொல்பொருட்கள், நாணயங்கள், செப்பேடுகள் கொண்ட தொல்பொருள்கூடம் ஒன்று உள்ளது. 60-க்கும் மேற்பட்ட கணினிகளுடன் கூடிய கணினி ஆய்வு மையம் உள்ளது.

1970-ஆம் ஆண்டு முதல் 40-க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித்திட்ட களப்பணிகள் கல்லூரி மூலம் நடத்தப்பட்டுள்ளன. கோவை மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கு இடையே திருக்குறள் போட்டிகள் நடத்தப்பட்டு சூழல்கோப்பை, பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அறக்கட்டளை மூலம் பலவகைச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. பல்கலைக்கழக அளவில் நடைபெறும் தேர்வுகளில் மாணவர்கள் தங்கப்பதக்கம் முதலியன பெற்று வருகின்றனர். ஓலைச்சுவடி, தொல்பொருள் பேணல், ஆவணப்பாதுகாப்பு, சுவடி பதிப்பித்தல் முதலிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

1990-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளியில் 6 முதல் 12-ஆம் வகுப்புவரை தமிழ் மற்றும் ஆங்கிலவழி வகுப்புகள் நடைபெறுகின்றன. பள்ளியில் திங்கள்தோறும் மரபுசார்ந்த விழாக்கள், கலைமகள்விழா, பாவை விழா,

பொங்கல் விழா, நூறாயிரம் பரவுதல் (இலட்சார்ச்சனை) முதலிய வற்றை மாணவர்களே முன்னின்று நடத்த ஊக்குவிக்கப்படுகின்றனர்.

1974-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஞானாம்பிகை நுழைவு உரிமைப்பள்ளி ஆங்கிலவழிக் கல்வியுடன் மரபு சார்ந்த பழக்க வழக்கங்களையும் ஆன்மீகத்தையும் போதித்து வருகின்றது. தவத்திரு ஆறுமுக அடிகளார் தாய்த்தமிழ்ப்பள்ளி 2000-ம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ்வழியில் நடத்தப்பட்டு வருகிறது.

உதகமண்டலத்தில் ஓம் பிரகாச அடிகளார் தொடக்கப்பள்ளி 1974-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கல்வி, சீருடை, புத்தகங்கள் ஏடுகள் அனைத்தும் இலவசமாகத் தந்து நடத்தப்பட்டு வருகிறது.

பள்ளி, கல்லூரி மாணவர்களில் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ளவர்களுக்கு உதவித்தொகையாக ஆண்டு தோறும் 3 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது. ஆய்வு மாணவர்கள் (எம்.பில்.,பி.எச்.டி) ஊக்கத்தொகை வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

இத்தகைய பணிகளை எல்லாம் விண்ணோர் வணங்கும் மன்னனாக இருந்து சைவத் தமிழ் உலகம் தழைக்க அகவை பாராது உழைத்த அடிகளார் அவர்கள் ஆவணித் திங்கள் 15ஆம் நாள் அசுபதி விண்மீன் (31.08.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு தமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு அம்பலவாணரின் திருவடிகளை அடைந்தார்.

அடிகளார் அவர்தம் திருமேனிக்கு மாலை 4.45 மணிக்கு திருமஞ்சனமும் 5.00 மணிக்குத் திருவீதி உலாவும் 6.00 மணிக்கு மகா சமாதியும் அடியார்கள் சூழ துறவியர் பெருமக்களால் நிகழ்த்தப்பட்டன. தொடர்ந்து கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் இருபத்தைந்தாம் பட்டம் குருமகா சந்நிதானங்களாக பொறுப்பேற்றார். வாழையடி வாழையெனத் தொடரும் குருமரபைப் பணிந்து அவர்தம் திருவடிகளை வணங்குகின்றோம்.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களின் அருட்பணிகள்

“மேலைச்சிதம்பரம்” எனப் போற்றப்பெறும் பேரூரில் திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தான வழியில் 16ஆம் நூற்றாண்டில் சாந்தலிங்கப்பெருமான் பேரூராதீனத்தை தோற்றுவித்தார். தவம் செய்த தவமாய் அருட்குரு சாந்தலிங்கப்பெருமானின் அருள்வழியில் இருபத்தைந்தாம் பட்டம் குருமகாசந்நிதானங் களாகவும் உதகைக் காந்தள் அருள்மிகு ஆலமர் செல்வர் திருமடத்தின் ஆறாவது குருமகாசந்நிதானங்களாகவும் அருள்பாலித்து வருபவர் கயிலைப்புனிதர் முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள்.

அடிகளார் அவர்கள் எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ (கூட்டுறவு), எம்.பில் (ஆய்வியல் நிறைஞர்), பி..ஜி..எல் (சட்டம்) படிப்புகளைக் கற்றுத் தேர்ந்தார். சாந்தலிங்கரின் மெய்யியல் கோட்பாடுகள் எனும் தலைப்பில் இவர் செய்த ஆய்வுக்காக பாரதியார் பல்கலைக்கழகம் இவருக்கு முனைவர் (பி.எச்.டி) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. 70 ஆண்டுப்பழமை வாய்ந்த பேரூர் தமிழ்க்கல்லூரியின் முதல்வராகவும் செயலராகவும் பணியாற்றி இன்று மாண்புசார் தலைவராகச் சேவை செய்து வருகின்றார்.

அடிகளார் அவர்களின் அருளாட்சியில் ஆதீனத்தின் அருட்பணிகள் உலகமெங்கும் விரிந்து விளக்கம் பெற்றுள்ளன. தமிழ்ச்சமய நெறிக்கு உயிரூட்டி உயர்வடையச்செய்தவர். குருகுல மரபை உள்ளடக்கிய நவீனக் கல்வி முறையில் ஒன்றாம் வகுப்பு முதல் உயர்கல்வி வரை கற்கக் கல்வி நிறுவனங்களை உருவாக்கியவர். அமெரிக்கா, கனடா, தென்னாப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, இலண்டன், மொரீசியசு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆதிய

நாடுகளில் தமிழ் வேள்விப் பயிற்சிகளை வழங்கி அப்பயிற்சிகள் மூலமாகங்கேயும் தமிழ்நெறி வழிபாடு சிறப்பதற்குத் தொண்டாற்றி வருகின்றார்கள். அயலகம் வாழ் தமிழர்கள் தமிழ்ச்சமய நெறியினைப் பின்பற்ற வழிகாட்டி வருபவர்.

மலேசியாவில் சுந்தரர் சிவயோக ஆசிரமம் என்ற பெயரில் கிளைமடம் அமைத்து மாணவர்களுக்குக் கல்வி, இசைக்கருவிகள் வாசித்தல், சைவ சித்தாந்தம் ஆதிய நிகழ்வுகளை நடத்தி வருகின்றார்கள்.

1953ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற செந்தமிழ்க் கல்லூரி புலவர் பட்டப்படிப்புடன் தொடங்கி இதுவரை 5000த்திற்கும் மேற்பட்ட புலவர்களை உருவாக்கிய பெருமையுடையது. இக்கல்லூரி தற்போது கலை அறிவியல் தமிழ்க்கல்லூரியாக வளர்ச்சி பெற்று பலருக்கும் பயந்தரும் பகலவனாக மிளிர்ந்து செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல கருத்தரங்குகள், பயிலரங்குகள், சொற்பொழிவுகள், விழாக்கள் ஆதியவற்றை நடத்தி வருகிறது. 1953முதல் ஆதீனக் கல்லூரியில் நடந்துவரும் அனைத்துக் கல்லூரித் திருக்குறள் பேச்சுப் போட்டியினை அடிகளார் அவர்களும் தனது அருட்தலைமையில் தொடர்ந்து நடத்திவருகிறார்கள். ஆண்டுதோறும் கோவை மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு அவர்களின் கல்வி, இலக்கியம் மற்றும் பொது அறிவை மேம்படுத்தும் வகையில் போட்டிகளை நடத்தி வருகிறார்கள். தமிழிசைக்கு சிறப்பான முறையில் ஆதரவுகளைத் தந்து வருகிறார்கள்.

பாரதியார் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினராக மூன்று ஆண்டுகளும் செனட் உறுப்பினராக பத்து ஆண்டுகளும் அமைந்து பணியாற்றியுள்ளார்கள். இந்துக் கல்விநிலையச் சங்கத்தின் துணைத்தலைவராகவும் மேற்கு மண்டலத் தலைவராகவும் அமைந்து இந்துக் கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டிற்குத் துணைபுரிந்து வருகின்றோம்.

மேனாள் தேர்தல் ஆணையர் திருமிகு கோபால்சாமி அவர்களின் தலைமையில் மத்திய அரசு வழங்கும்

விருதுக்குண்டானவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் மூன்று ஆண்டுகள் அமைந்து சிறப்பான முறையில் பணியாற்றியவர்கள்.

தமது கல்விப்பணியின் நீட்சியாக 27க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித்து மொழி வளர்ச்சிக்குத் துணைநிற்பவர். கொங்கு மண்டலத்தில் உள்ள தொன்மையான பொருட்களை தொல்துறையினருடன் இணைந்து சேகரித்து வருகிறார்கள். அதில் செப்பேடுகள், கல்வெட்டுகள், நாணயங்கள், பானை ஓடுகள், ஓலைச்சுவடிகள் ஆதியன அடங்கும். ஆதீனக் கல்லூரியின் நூலகத்தில் பழமையான நூல்களையும், சுமார் 700க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளையும் பராமரித்துப் பாதுகாத்து வருகிறார்கள். அரிய நூல்களைப் பாதுகாத்து மின்னூலாக்கி உலகிற்குத் தரும் முயற்சியை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஆதீனக் கல்லூரியில் பயிலும் ஏழைக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் சுமார் இருபது இலட்சம் ரூபாய் தொகையை அன்பர்களின் துணைகொண்டு கல்வி உதவித் தொகையாக மாணவர்களுக்கு வழங்கி வருகிறார்கள்.

உலகத் தாய்மொழி தினத்தை முன்னிட்டு இளைய சமுதாயத்தினரை ஒன்றுதிரட்டிப் பரப்புரை, கருத்தரங்கம், பேரணிகளை நடத்தி வருபவர். உலகத்தமிழ் இணைய மாநாடு போன்ற தமிழினை முன்னெடுத்துச் செல்லும் பல ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபட்டு இன்றைய சமுதாயத்திற்கு வழிகாட்டி வருபவர்.

விசுவ இந்து பரிசித் தமிழ்நாடு அமைப்பின் அறவழி காட்டும் ஆன்றோர் பேரவை என்கிற பிராந்திய மார்க் தர்சக் மண்டலின் ஒருங்கிணைப்பாளராக இருந்து வருகின்றார். இதற்குமுன் 1985 முதல் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் இருந்து வந்தார்கள். தற்போது இவர்கள் இப்பொறுப்பை வகித்து வருகிறார்கள். அதுபோல உலகளவில் உள்ள விசுவ இந்து பரிசித் அமைப்பின் கேந்திரிய மார்க் தர்சக் மண்டல் என்ற மத்திய அமைப்பின் செயற்குழு உறுப்பினராக இருந்துவருகிறார். அயோத்தி திருக்கோயில் கட்டப்பட்ட போது அமைக்கப்பட்ட அயோத்தி உச்ச அதிகாரி

சமிதியிலும் அங்கம் வகித்தவர். திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப்பெருவிழாவின் பிரதிஷ்டையின் போது சிறப்பு அழைப்பாராகக் கலந்துகொண்டார்கள்.

மனவளக் கலையினை உலகிற்கு அளித்த அருள்திரு வேதாத்திரி மகரிசி அவர்களுடன் பத்தாண்டுகளுக்கும் மேலாக உடனிருந்து உலக சமுதாய சேவா சங்கத்தின் முன்னேற்றத்திற்கு துணைநின்றவர். ஆழியாறு அறிவுத் திருக்கோயிலின் உருவாக்கத்தில் இரவுபகலாகப் பணியாற்றியவர். அருட்தந்தையின் சமாதிப் பணிகளை முன்னின்று செய்த பெருந்தகையாளர். கொங்குநாடு தந்த ஆன்மீகப்பேரொளி தவத்திரு சச்சிதானந்த அடிகளார் அவர்களால் அமெரிக்காவில் தொடங்கப்பெற்ற ஒருங்கிணைந்த யோக மையமான வர்ஜீனியா தாமரைக்கோயிலில் ஆண்டுக்கொரு முறை வழிபாட்டுப் பயிற்சி, சமயப் பயிற்சி, யோகப் பயிற்சியினை அனைத்துலக அன்பர்களுக்கும் வழங்கி வருபவர்.

மொரீசியஸ், தென்ஆப்பிரிக்கா, மலேசியா நாடுகளில் பேரூராதீனக் கிளைமடங்களை நிறுவித் தமிழர் தம் மரபுகளைப் போற்றி வருபவர். தேசிய அளவிலும், வெளிநாடுகளிலும் நடந்த கல்வி, கலாச்சார, சமயக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தமிழ்மொழி மற்றும் தமிழக மக்களின் தொன்மை, சமயம், கலாசாரம், பண்பாடு போன்றவற்றை வெளிப்படுத்தி உள்ளார்.

இப்பணிக்காக இவர் நேபாளம், துபாய், பிரான்சு, செர்மனி, ஆலந்து, பெல்சியம், இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தோனேசியா நாடுகளில் உள்ள மக்களின் அன்பு அழைப்பை ஏற்று அங்கு சென்று உரையாற்றி உள்ளார். அடிகள் பெருந்தகை மேற்குலக சைவ கருத்தரங்கை மூன்றுமுறை வழி நடத்தியதுடன் உலகின் வெவ்வேறு பகுதிகளில் நடந்த சைவ கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார்.

பாரதத்தில் உள்ள பல புனித இடங்களுக்கும் பக்தர்களை அழைத்துச் சென்றது மட்டுமல்லாமல், புனிதத் திருமலையாம் கயிலாயத்திற்கு மூன்றுமுறை சென்று வந்துள்ளார். தமிழர்களின் பழைய கூட்டமைப்பாக இருக்கும் ரைஸ் என்ற அமைப்பில் கலந்துகொண்டு தலைமையேற்றுச் சிறப்பித்துள்ளார்கள்.

இந்து துறவியர் பேரவையின் இணைச்செயலாளராகவும், தமிழக புலவர் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார். விசுவ இந்து பரிசத்தின் மூலம் இலங்கைக்கு சென்ற ஆறுபேர் கொண்ட அமைதிக்குழுவிலும் அங்கம் வகித்து உள்ளார். இலங்கையில் நடைபெறும் சைவ இந்து இளைஞர்கள் மாநாடு, சைவ மகளிர் மாநாடு, சைவ கல்வியாளர்கள் மாநாடு ஆதியவற்றில் கலந்து சிறப்பித்தவர்கள்.

பல்வேறு உலக சைவ மாநாடுகளிலும் கலந்து சிறப்பித்த அடிகளார் அவர்கள் 2010ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சிதம்பரத்தில் 12ஆவது உலக சைவ மாநாட்டின் ஒருங்கிணைப்பாளராக இருந்து தமிழகத்தில் உள்ள அனைத்து ஆதீன மடாதிபதிகளையும் பங்கேற்கச்செய்து மாநாட்டினை சிறப்புற நடத்தினார். 2010ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள வடஅமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையின் சிறப்பு அழைப்பாளராகச் சென்று செம்மொழியின் மேன்மையைப் பற்றி உரையாற்றினார். ஐக்கிய நாடுகள் சபையில் வடமெரிக்க வளர்தமிழ் இயக்கத்தின் சார்பாக 2017 செப்டம்பர் 15 அன்று உலக அமைதி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

தமிழையும், சைவத்தையும் தமது இரு கண்களாகப் போற்றும் இவர் தற்கால இளைஞர்களுக்கு ஓர் நல்ல முன் உதாரணமாகத் திகழ்ந்து வருகிறார். இடைவிடாத பணிகளுக்கு இடையிலும் தமிழ் முறையில் குடமுழுக்கை செய்யும் ஊர்களுக்குச் சென்று அவர்களை ஊக்குவித்து அருளாசி வழங்கி வருகிறார். கிராமப்புற மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு சாந்தலிங்கர் அருள்நெறி மன்ற அடியார்கள் மூலமாகக் கிராமங்கள் தோறும் திருவிளக்கு வழிபாடுகளை நிகழ்த்தி வருகிறார். பல்லாயிரக்கணக்கான திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளார்கள்.

இணைய வழியாக ஒவ்வொரு நாளும் காலையில் மானசீக ஒவ்வொரு திருக்கோயிலுக்குச் செல்வது என்ற அடிப்படையில் அடிகளாருடன் அருளுலா என்ற நிகழ்வினை நடத்தி வருகிறார்கள். புதன்கிழமை தோறும் அயலகத்தில் இருக்கும் அன்பர்களும் ஆங்கிலமொழி வழியாகத் தியானப் பயிற்சியை வழங்கி வருகிறார்கள்.

அதுபோல நல்லார் இணக்கம், சுவைஞர் சுற்றம் ஆதிய நிகழ்வுகளை இணைய வழியாக நடத்தி அதன்வழி சமய, சமுதாயச் சிந்தனைகளை வழங்கி வருகின்றார்கள்.

மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் கூட்டுத்தியானம், மெய்ப்பொருள் உணர்தல், இறைநாமம் பரவுதல் ஆதியவற்றை உள்ளடக்கிய ''சிவனருள்'' ஆராய்ச்சி வகுப்பினை ஊர்கள்தோறும் நடத்தி வருகிறார்கள். ஆண்டுதோறும் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு உள்ளிட்ட அருளியல் நிகழ்வுகள், இல்லற நிகழ்வுகளான திருமணம், புதுமனை புகுவிழா உள்ளிட்ட உள்ளிட்ட நிகழ்வுகளை நடத்துவதற்கு உண்டான பயிற்சிகளை வழங்கி வருகின்றார்கள்.

இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 276 பாடல்பெற்ற திருக்கோயில்களையும் நினைவுகூறும் வகையில் சிவலிங்கங்களை அமைத்து கோடி அருச்சனைப் பெருவிழாவை மிகச் சிறப்பான முறையில் நடத்தினார்கள். மாதந்தோறும் பன்னிரு திருமுறை முற்றோதலை நடத்தி வருகின்றார்கள். இதுவரை 27 சுற்றுகள் நடத்தி முடிக்கப் பெற்றுள்ளன. அதுபோல நூற்றுக்கும் மேற்பட்ட திருவாசக முற்றோதல்களையும் நூற்றுக்கும் மேற்பட்ட திருவிளக்கு வழிபாடுகளையும் நடத்திய பெருமைக்குரியவர்கள்.

தமிழகத்தில் சுமார் 7000க்கும் மேற்பட்ட சிவன் கோயில்கள் உள்ளன. அதில் பாதியளவுக் கோயில்கள் பழுதுபட்டுள்ளன. அக்கோயில்களைப் புதுப்பிக்கும் நோக்கத்தோடு விருப்புடன் திருப்பணி என்ற அமைப்பினை உருவாக்கி அதன்மூலமாக சுமார் 75க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு திருக்கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டு வருகின்றன.

வெள்ளியங்கிரி மலையின் அடிவாரத்தில் உள்ள மலைவாழ் மக்களுக்குக் கொரோனா தீநுண்மிக் காலங்களில் நாள்தோறும் 600 உணவுப் பொட்டலங்கள் வழங்கியும் மற்ற காலங்களில் ஆண்டுக்கு மூன்று முறை அவர்களுக்குத் தேவையான உணவு,

உடை, அரிசி ஆதிய பொருட்களை வழங்கி வருகின்றார்கள். தீண்டாமையை ஒழிப்பதற்காக ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குச் சென்று அவர்தம் இல்லங்களில் திருவிளக்கு வழிபாடுகளை மேற்கொண்டு அவர்களிடத்தில் சமுதாய நல்லிணக்கத்தை வளர்த்து வருகின்றார்கள். இதுவரை இதுபோன்று அறுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் இப்பணிகளைச் செய்துள்ளார்கள்.

ஒன்பான் இரவுப் பெருவேள்வி எனப்படும் நவராத்திரி விழாவின்போது மகளிர்களைக் கொண்டு வேள்வி வழிபாடுகள் நடத்துவது, மகளிர் மாநாடுகளை நடத்துவது என மகளிர் மேம்பாடிற்கான இப்பணிகளைத் தொடர்ந்து 33 ஆண்டுகளாக நடத்திவருகிறார்கள். பெண்களும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக பெண்களை முன்னிலைப்படுத்தி பல்வேறு பணிகளைச் செய்துவருகிறார்கள். இப்பணிகளோடு மக்கள் சேவையே மகேசன் சேவை எனும் அடிப்படையில் இதுவரை 18 முறை இரத்ததானம் வழங்கியுள்ளார்.

வெள்ளியங்கிரி மலையின் அடிவாரத்தில் உள்ள உழவர்களின் வாழ்வாதாரத்திற்காக கடந்த 36 ஆண்டுகளாக நடைபெறும் மழைவேள்வியில் கலந்துகொள்வதோடு 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஏழாவது மலையின் உச்சியில் சென்று வேள்வி செய்து வந்தவர்கள்.

பயிற்றுமொழியில் தமிழ், ஆட்சித்துறையில் தமிழ், நீதித் துறையில் தமிழ், வழிபாட்டில் தமிழ் என அனைத்துத் துறைகளிலும் செம்மொழியாம் தமிழே இடம்பெற 2013ஆம் ஆண்டு மேனாள் குடியரசுத்தலைவர் மேதகு அப்துல்கலாம் அவர்களைக் கொண்டு தமிழ்ப்பயிற்றுமொழி வழிபாட்டு மொழி மாநில மாநாட்டில் வளர்தமிழ் இயக்கத்தை உருவாக்கி ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து வருகிறார்.

அகில பாரத சந்நியாசிகள் சங்கத்தின் தலைவராக இருந்து கும்பகோணத்தில் தென்பாரதக் கும்பமேளாவையும், காவேரி, தாமிரபரணி, வைகை, சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா, நொய்யல்

உள்ளிட்ட நதிகளின் புட்கரப் பெருவிழாவினை பொதுமக்களும் அடியார்களும் பயன்பெறும் வகையில் நடத்திச் சிறப்பித்தார்கள்.

நொய்யல் பெருவிழா நடத்தியதோடு அதைத் தொடர்ந்து நொய்யலாறு அறக்கட்டளை அமைக்கப்பெற்று அதன் தலைமை நிர்வாக அறங்காவலாரக அமைந்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் குஜராத்தில் முதல்வராக இருந்தபோது சபர்மதி நதியைத் தூய்மை செய்ததை முன்மாதிரியாகக் கொண்டு நொய்யலாற்றைத் தூய்மைப்படுத்தும் பணியைச் செய்து வருகின்றார்கள்.

தமிழ்நாட்டின் தேசிய மரமான பனை மரத்தின் சிறப்புகள், பயன்பாடுகள் ஆகியவற்றை இன்றைய இளைய சமுதாயம் அறிந்துகொள்ளும் வகையில் உலகப் பனைப் பொருளாதார மாநாட்டினை அதன் தலைவராக இருந்து சிறப்பாக நடத்தினார்கள். அதன் பேரமைப்பின் தலைவராக இருந்து பனைப் பொருளாதாரத்திற்குத் தொண்டாற்றி வருகிறார்கள்.

பசுக்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றைப் பாதுகாக்கும் அன்பர்களுக்கு ஊக்கம் தருவதோடு பல்வேறு வகையான அமைப்புகளை நிறுவி சாந்தலிங்கர் ஆனிலை அறக்கட்டளை மூலமாகச் செம்மையான முறையில் நிர்வகித்து வருகிறார்கள்.

கோவை மாவட்ட அளவில் உள்ள பல்வேறு சமயங்களின் ஒருங்கிணைப்பாளராகவும். பல்சமய நல்லுறவு இயக்கத்தின் கௌரவத் தலைவராகவும் இருந்து அனைத்துச் சமயங்களின் அருள்விழாக்களையும் ஒருங்கிணைத்து நடத்தி வருகின்றார்கள். தமிழக அளவில் கிராமப்புற மேம்பாட்டிற்காக செயலாற்றி வரும் நல்லிணக்க அறக்கட்டளையிலும் இணைந்து செயலாற்றி வருகிறார்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கோவைக்கு வருகை தந்தபோது அவர்களைச் சந்தித்து அம்மையப்பர் திருவுருவப் படத்தை வழங்கி வாழ்த்தினார்கள். இந்தியத் திருநாட்டின் 75ஆவது தன்னுரிமைத் திருநாளையொட்டி அமைக்கப்பட்ட புதிய பாராளுமன்றத்திற்குச் செங்கோல் அமைக்கும் நிகழ்விற்கு 20 ஆதீனங்களுடன் கலந்துகொண்டார்கள். மாண்புமிகு பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குச் செங்கோல் வழங்கிய ஆறு

ஆதீனங்களுள் குருமகாசந்நிதானங்களும் ஒருவராக இருந்து செங்கோலுக்கு வழிபாடுகள் செய்து வாழ்த்திப் பாரதப் பிரதமர் அவர்களிடத்தில் வழங்கினார்கள்.

சங்கரர் அவர்கள் உபதேசம் பெற்ற நர்மதா நதிக்கரையில் உள்ள ஓம்காரேசுவரர் மலையில் நிறுவப்பட்டுள்ள 108 அடி உயர சங்கரர் சிலையின் திறப்பு விழாவிற்கு மத்தியப்பிரதேச முதல்வர் .... அவர்களின் அழைப்பின்பேரில் கலந்து சிறப்பித்தார்கள். கார்தாம் என்று அழைக்கப்படும் நான்கு தலங்களுக்கும் மீமேலைத் தலங்களுக்கும் சென்று வந்துள்ளார்கள்.

21ஆம் நூற்றாண்டின் திருநாவுக்கரசர் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் 90ஆம் ஆண்டு மரகதவிழாவின் போது உருவாக்கப்பட்ட பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை மூலம் அவர்கள் அவதரித்த முதலிபாளையத்தில் ''பேரூரடிகளார் மருத்துவமனை'' பல்நோக்கு வசதிகளுடன் கூடிய மருத்துவமனையை நிறுவி இரண்டு மாடிகள், 50 படுக்கைகளுடன் ஓராண்டு காலமாக எளிய மக்களுக்கு உதவும் வகையில் மருத்துவமனையை நடத்தி வருகிறார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஐயா அவர்களால் கோயம்புத்தூரில் நடத்தப் பெற்ற செம்மொழி மாநாட்டில் விருந்தோம்பல் குழுவின் தலைவராக இருந்து மாநாட்டில் பங்கேற்க உலக நாடுகளில் இருந்து வந்திருந்தோரை தமது அன்பால் ஈர்த்தவர்.

பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் குழு உறுப்பினராக அமைந்து அம்மாநாடு சிறப்பான முறையில் நிகழத் துணைநின்றவர்கள். மேலும் பழனித் திருக்கோயில் மூலவர் சிலைப் பாதுகாப்புக் குழுவிலும் உறுப்பினராக அமைந்து செயலாற்றி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிவரும் இந்துசமய அறநிலையத்

துறையின் உயர்நிலைக் குழு உறுப்பினராக இருந்து திருக்கோயில்கள் வளர்ச்சிக்கு அருட்பணி ஆற்றி வருகிறார். தமிழக அரசின் அனைவரும் அருச்சகராகலாம் பள்ளிகளின் ஆலோசகராக இந்துசமய அறநிலையத்துறையால் நியமிக்கப்பட்டு அப்பள்ளிகளின் மேம்பாட்டிற்குச் செயலாற்றி வருகிறார்கள். தமிழ்நெறி வழிபாட்டை அனைத்துத் திருக்கோயில்களிலும் கொண்டு செல்வதற்கான குழுவில் இடம்பெற்றுத் தொண்டாற்றி வருகிறார்கள்.

உதகை தட்சிணாமூர்த்தி திருமடத்தின் மடாதிபதியாக 2002ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறார்கள். அங்குள்ள நீலகிரி வாழ் மலைவாழ்மக்களுக்குப் பல்வேறு வகையான கல்வி, சமய, சமுதாய, மருத்துவப் பணிகளைத் தொடர்ந்து செய்துவருகின்றார்கள்.

இது போன்ற பல்வேறு நலப்பணிகள் அடிகளார் அவர்களின் அருட்பணியாகத் தொடர்கின்றது.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

சந்தானக் குரவர்கள்

அகச்சந்தானம்:

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'' (குறள் 50)

என்பார் வள்ளுவர். இங்கு ''வாழ்வாங்கு வாழ்தல்'' என்பது 'வாழவேண்டிய நெறிமுறைப்படி வாழ்தல்' என்று பொருள்படும். அந்த நெறிமுறைகளை வகுத்துத் தந்தவன், கயிலை மலையில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமான். தாம் வகுத்த அந்த நெறியை, அவர் நந்தியெம்பெருமானுக்கு எடுத்துரைக்கிறார்.

அதனை நந்தியெம்பெருமான், சனற்குமாரர்க்கு எடுத்துரைக் கிறார். அதனைச் சனற்குமாரர், சத்தியஞான தர்சினி என்பவருக்கு எடுத்துரைக்கிறார். அதனைச் சத்தியஞான தர்சினி, பரஞ்சோதியாருக்கு எடுத்துரைக்கிறார். இவர்கள் நால்வரும் அகச்சந்தான குரவர்கள் எனப் போற்றப்படுகின்றனர்.

புறச்சந்தானம்:

திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் சைவ வேளாளர் குலத்தில் அச்சுதக் களப்பாளர் என்று ஒருவர், மகப்பேறு இல்லாமையால் வருத்தமுற்றிருந்தார். அவர் தமது குலகுருவாக விளங்கிய சகலாகம பண்டிதர் என்பாரிடம் சென்று, தமது குறையைக் கூறினார். அவர் திருமுறைச் சுவடியில் கயிறு சாத்தி, வந்த ஏட்டில் உள்ள பாடலைப் பார்த்தார். அப்பாடல் திருஞானசம்பந்தர் அருளிய திருவெண்காட்டுப் பதிகத்தின் இரண்டாம் பாடல். அது,

**"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினொடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயன தோளுமை பங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினை யார்அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே"**

என்பது. இப்பாடலைக் கண்ட குலகுரு, 'நீ உன் மனைவியுடன் வந்து திருவெண்காட்டு முக்குளத் தீர்த்தத்தில் நீராடி, அத்தலத்து இறைவரை வழிபடப் பிள்ளைப்பேறு கிடைக்கும்' என்று கூறினர். அதன்படி செய்ய, இறைவரருளால் பிள்ளைப்பேறு வாய்த்தது. அப்பிள்ளைக்கு 'வெண்காட்டு நம்பி' என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தனர்.

குழந்தைக்கு இரண்டு வயது இருக்கும்போது, குழந்தை தெருவில் தேர்உருட்டி விளையாட, வான் வழியாகச் சென்று கொண்டிருந்த பரஞ்சோதியார் கீழிறங்கி, வெண்காட்டு நம்பியின் பக்குவம் கண்டு, அவருக்குத் தாம்கற்ற சைவநெறிக் (சிவனால் எடுத்துரைக்கப்பட்ட சிவநெறிக்) கொள்கையை, எடுத்துரைத்தார். அத்துடன் தமது குருவாகிய சத்தியஞான தர்சினி என்னும் பெயரைத் தமிழாக்கம் செய்து, தன் மாணவனுக்குப் பெயராக 'மெய்கண்டார்' என்று சூட்டினார்.

தாம் இம்மண்ணுலகில் வந்து பிறக்கக் காரணமாய் இருந்த தங்கள் குடும்ப குலகுரு சகலாகம பண்டிதர், மெய்கண்டாரின் மாணவராகி, அவரிடம் பாடம் கேட்டு, அருள்நந்தி என்னும் தீக்கைப்பெயர் (தீட்சாநாமம்) பெற்றார். மெய்கண்டார் தாம் உணர்ந்த ஞானத்தை 'சிவஞானபோதம்' என்ற சித்தாந்த சாத்திர நூலாக உலகுக்குத் தந்தார். அவரது மாணவராகிய அருள்நந்தி, சிவஞான போதத்துக்கு விளக்கமாகப் பாடல் வடிவிலே, 'சிவஞான சித்தியார்' என்னும் நூலினை அருளினார். அத்துடன் இருபா இருபஃது என்னும் நூலினையும் பாடி அருளினார்.

அதன்பின்னர் அருள்நந்தி சிவத்திடம் மறைஞான சம்பந்தர் என்பார் பாடம் கேட்டார். அவ்வாறு பாடம் கேட்டவர், தமது ஆசிரியர் அருளிய இரண்டு நூல்களுக்கும் உரை எழுதினார். (மறைஞான சம்பந்தர் பாடியதாக மூலநூல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை) இனி இவரிடம் கொற்றவன்குடி உமாபதிசிவம்

என்பார் பாடம் கேட்டார். இவர் 1. சிவப்பிரகாசம்; 2. திருவருட்பயன்; 3. நெஞ்சுவிடு தூது; 4. போற்றிப் பஃறொடை; 5. உண்மைநெறி விளக்கம்; 6. கொடிக்கவி; 7. வினா வெண்பா; 8. சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டு நூல்களைப் பாடியருளினார். (இவற்றைச் சித்தாந்த அட்டகம் என்பர்). சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கு. அவற்றுள் பதினொரு நூல்களை மேற்கண்ட நால்வருள் மூவரே பாடியுள்ளார். இங்கு குறிக்கப்பட்ட நால்வரும் புறச்சந்தான குரவர்கள் எனப்பட்டனர்.

(இதுவரை கூறியவற்றால், சிவபெருமானே முதல் குரு என்றும், நந்தியெம்பெருமான், சனற்குமாரர், சத்தியஞான தர்சினி, பரஞ்சோதி ஆகிய நால்வரும் அகச்சந்தான குரவர்கள் என்றும்; மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய நால்வரும் புறச்சந்தான குரவர்கள் என்றும் தெரிந்துகொண்டோம்).

சித்தாந்த சைவம்:

இவர்கள் அருளிய நெறியே, 'சித்தாந்த சைவநெறி' என்று போற்றப் பட்டு வருகின்றது. கொற்றவன்குடி உமாபதி சிவம், நமச்சிவாய சித்தர் என்பவருக்குப் பாடம் சொல்ல, அவர் சிவப்பிரகாச சித்தருக்கு அருளினார். சித்தர் சிவப்பிரகாசர் தாம் பெற்ற உபதேசத்தை நமச்சிவாய மூர்த்திகள் என்பாருக்கு அருளினார். அதன்பின்னர் சித்தர் சிவப்பிரகாசர் பொதிய மலைக்குச் சென்று, தவம் இயற்ற விருப்பம் கொண்டார். அப்பொழுது நமச்சிவாய மூர்த்திகள், தம் குருவை அன்புடன் நோக்கி, தாங்கள் இன்னும் சிலகாலம் எம்முடன் இருந்து, 'ஞானசமாதி கூடுவதற்கான உபதேசங்களையும் அருளவேண்டும்!' என்று கேட்டுக் கொண்டார். அதற்கு சித்தர் சிவப்பிரகாசர், 'எமது பெயரில் ஒருசீடன் வருவான். அவன் உனது உள்ளக் குறையைப் போக்குவான்' என்று கூறிவிட்டுப் பொதிகை மலை சென்றார்.

இங்கு நமச்சிவாய மூர்த்திகள், திருவாவடுதுறை என்னும் தலத்தில் திருமடம் அமைத்துத் தங்கிஇருந்து, தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருளுபதேசம் வழங்கி, ஒரு ஞானவள்ளலாகத் திகழ்ந்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

ஆதி சிவப்பிரகாசர் வரலாறு

பிறப்பு:

பட்டீசுவரம் என்னும் தலத்தில் வேளாண் செட்டி மரபில் தோன்றியவர் சிவப்பிரகாசர். இவர் தமக்கு ஏழுவயது நிரம்பிய போதே, இலக்கணம், இலக்கியம், சாத்திரம் எனப் பலவும் கற்றுத் தேர்ச்சி பெற்று, நற்குண நற்செயல்களின் உறைவிடமாய்த் திகழ்ந்தார். அதனால் அவருக்கு மெய்ஞ்ஞானத்தின் மீது நாட்டம் மிகுதியாக, தலப்பயணம் மேற்கொண்டார். பல தலங்களுக்கும் பயணம் மேற்கொண்டவர், சிவனைக் கண்டு வணங்குவதும், தீர்த்தமாடுவதும், சமயப்பெரியோர்களைச் சந்திப்பதும் ஆகிய செயல்களில் ஈடுபட்டார். அவ்வாறு பல தலங்களையும் வழிபட்டு வந்த சிவப்பிரகாசர், திருவாவடுதுறைக்கு வந்தார். அங்கு நமச்சிவாய மூர்த்திகளைக் கண்டார். அப்பொழுது சிவப்பிரகாசர் மனதில், இதுவரை ஏற்படாத ஒருவகை அன்பும், இன்பமும், அச்சமும் ஏற்பட, 'இவரே நம்மை ஆட்கொள்ளும் தகுதியுடைய குரு' என்பதை உணர்ந்தார். உடல் நடுங்க, நா தழுதழுக்க, நெருப்பில் பட்ட மெழுகுபோல மனம் உருக, கைகூப்பி நின்றார்.

தீக்கை பெறுதல்:

சிவப்பிரகாசரது பக்குவநிலையைக் கண்ட நமச்சிவாய மூர்த்திகளும், 'தமது குருநாதர் கூறிய சீடன் இவன்தான்' என்னும் எண்ணம் எழப்பெற்றவராய், இவருக்குச் சங்கமம், சமயம், விசேடம், நிருவாணம் முதலிய தீக்கைகளை முறையே செய்துவைத்து, உண்மை நிலையையும் எடுத்துரைத்துத் தமது மாணவனாக ஏற்றுக்கொண்டார். சிவப்பிரகாசர் 'இறை உயிர் தளை' என்னும் முப்பொருள் உண்மை குறித்து, ஆசிரியர்வழி தடைவிடை

முறையில் கேட்டுப் பெற்று, ஐயம் தீர்ந்து, தெளிவு பிறந்தவராய், ஆசிரியர் முன்னிலையில் மோனநிலை பெற்று உயர்ந்தார். இதுகண்ட நமச்சிவாய மூர்த்திகள் மனம் மகிழ்ந்து, 'அன்பனே! இனி நீ ஆத்மார்த்த பூசையும் (தன்பொருட்டுச் செய்வது) அதிகாரம் உடையவர் பூசையும் (ஆதீன முதல்வர் வழிபாடு - கூத்தபிரானுக்குச் செய்வது) முறையாகச் செய்து, இந்த ஆதீனத்தைப் பாதுகாத்து வருவாயாக!' என்று கட்டளை பிறப்பித்தார். இவ்வாறு அருளியபின் நமச்சிவாய மூர்த்திகள் குகையில் அமர்ந்து சகசநிட்டை கூடும் நிலையினைப் பெற்றார். சிவப்பிரகாசரும் ஆதீனத்தில் எழுந்தருளி அடியார்களுக்குத் தீக்கையும் அருளாசியும் வழங்கி வந்தார்.

சிவலிங்கம் பெறுதல்:

இந்நிலையில் சிவப்பிரகாசர் தில்லை அம்பலவாணரை வழிபடும் விருப்பம் மிக உடையவராய், தமது திருக்கூட்டத்துடன் புறப்பட்டுத் தில்லை (சிதம்பரம்) சென்று சேர்ந்தார். அங்கு அம்பலக் கூத்தனைக் கண்டு வணங்கும்போது, ஒரு சிவலிங்கம் அவர் கையில் வந்திருந்தது. சிவலிங்கம் கண்டு மகிழ்ந்து, அம்பலவர் அருளை வியந்து, கொற்றவன்குடி சென்றார். அங்குத் தமது திருமடத்தின் முதல் குருவாகிய உமாமதி சிவாச்சாரியாரது திருவுருவைக் (குருமூர்த்தத்தைக்) கண்டு வணங்கினார். சிலகாலம் அம்மடத்தில் தங்கி இருந்தார். அப்பொழுது தில்லைக்கூத்தனைக் கண்டு வணங்க வேண்டும் என்னும் எண்ணமும், திருவாவடுதுறை சென்று ஆசிரியரைக் கண்டு வணங்கவேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டது.

தாளம் பெறுதல்:

முதலில் தில்லை சென்று, தில்லைக் கூத்தனை வணங்கித் தேவாரம் பாடித் தாளமிட்டுத் திருக்கூத்தும் ஆடி மகிழ்ந்தார். தாளமிட்டுக் கை வருந்துவது கண்டு அம்பலவர், திருத்தாளம் இவர் கையில் வந்து பொருந்துமாறு அருளினார். அதனைப் பெற்று மகிழ்ச்சி அடைந்தவர், திருவாவடுதுறை திருமடத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு ஆசிரியருடன் தாமும் உடனிருந்து, சிவநெறி தழைக்கப் பணியாற்றி வந்தார்.

அம்பலவாணர் – பூசை தடைபடுதல்:

அக்காலம் விசயநகர அரசன் விருப்பாட்சிராயன் என்பவனது ஆட்சிக்கு உட்பட்ட சிதம்பரத்தில் வைணவன் ஒருவன் அலுவலாளராகப் பணியில் இருந்தான். அவன் கூத்தப் பெருமானுக்கு நடைபெற்ற நாள்வழிபாடு, சிறப்புவழிபாடு முதலியன கண்டு, மனம் புழுங்கி, அப்பெருமானுக்குரிய கொடிக்கம்பத்தைப் பிடுங்கி, கோவிந்தராசப் பெருமாளுக்கு உரியதாக நட்டு, பெருமாள்கோயில் வருமானத்தைப் பெருக்கி, அம்பலவாணர் வழிபாட்டை நிறுத்திவிட்டான். இதுகண்டு வருத்தமுற்ற தில்லை அந்தணர்கள், சைவ அடியார்கள், தலத்துக்குரிய மக்கள், சான்றோர்கள் என அனைவரும் கூடி அந்த வைணவ அலுவலரிடம் முறையிட்டனர். ஆனால் அவன் எதற்கும் உடன்படவில்லை. ஏமாற்றம் அடைந்தவர்கள் எதிர்த்துப் போரிட்டனர். அதனால் பலர் உயிர்நீத்தனர். இருந்தும் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படவில்லை. அப்பொழுது சைவர்கள் ஒன்றுகூடி, சைவசமயத் தலைவராய் விளங்கிய உமாபதி சிவாச்சாரியார் மரபில் வந்த திருவாவடுதுறை ஆதீனகர்த்தரிடம் முறையிடலாம் என்று முடிவு செய்து, அவ்வாறே எடுத்துரைத்தனர்.

பூசை தடைபட்ட செய்தி அறிதல்:

இதுகேட்ட சிவப்பிரகாசர், குகையில் நிட்டைகூடும் வழக்கம் உடைய தமது குருநாதர் நமச்சிவாய மூர்த்திகளிடம் முறையிட்டார். நமச்சிவாயரும், 'நமது வழிபடு கடவுளாக விளங்கும் தில்லைக் கூத்தனுக்கு மீண்டும் பூசை சிறப்புற நடைபெற, நீ தில்லை சென்று ஆவன செய்வாயாக!' எனக் கட்டளை இட்டனர். குருவின் ஆணைவழி தில்லை சென்ற சிவப்பிரகாசர், கொற்றவன்குடி மடத்தில் தங்கி, வைணவ அலுவலரைச் சந்தித்துப் பேசினார்; பயன் ஏற்படவில்லை.

அதன்பின்னரும்கூட, சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் இடையே கலகம் நடைபெற்றது. இவற்றைக் கண்டு மனம் வருந்திய தில்லை அந்தணர்களும், சிவப்பிரகாசரும், அடியார்களும், 'வேலூர் சென்று அரசனிடம் முறையிடலாம்' என்ற முடிவுக்கு வந்தனர். அந்தணர்களும் சிவப்பிரகாசர், வேலூர் செல்லும்போது அரசருக்கு உள்ள மரியாதையை விட, உயர்ந்த மரியாதை உடையவராய்ச் செல்ல வேண்டுமே! என எண்ணினர். அன்று இரவு அந்தணர்கள்

கனவில் சென்ற அம்பலவாணர், 'அவரை எமக்குரிய சிவிகை (பல்லக்கு), குடை, சாமரம், ஆலவட்டம், இடபத்தடி, கொடி முதலிய வற்றுடன் அனுப்பி வையுங்கள்!' எனக் கட்டளை இட்டார்.

மறுநாள் காலை அந்தணர்கள் எழுந்து, தங்கள் வழிபாடுகளை முடித்துக்கொண்டு, கோயிலுக்குச் சென்று, கூத்தபிரானை வணங்கி, அவரது சிவிகை முதலியவற்றைக் கொண்டு சென்று, சிவப்பிரகாசர் முன்வைத்து, இறைவர் இட்ட கட்டளை குறித்து எடுத்துக் கூறினர். இதுகேட்டு முதலில், 'தமக்கு இவை எதற்கு?' என எண்ணம் கொண்டவர், பின்னர் இறைவனது கட்டளையை மீறமுடியாதே! என்பதற்காக ஏற்றார். பல்லக்கில் ஏறி, அடியார் புடைசூழ, வேலூர் நோக்கிச் செல்லும் வழியில், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் ஆகிய தலங்களில் தங்கி வழிபாடு செய்து, பின்னர் வேலூரைச் சென்றடைந்தார்.

இலிங்கண்ணர் – சந்திப்பு:

சிவப்பிரகாசரது வரவு கேட்டு மகிழ்ந்த வேலூர் மக்கள், அடிகளின் வரவு குறித்து விசாரித்தனர். அவரும் தமது உள்ளக் குறிப்பை வெளியிட்டார். இதுகேட்ட மக்கள், அரசர் நாயக்கர் வகுப்பைச் சேர்ந்தவர். அவரிடம் இதுகுறித்துப் பேசினால் பயன்விளையாது. அமைச்சர் இலிங்கண்ணன் என்பார் வீரசைவர். அவரது குரு சித்தராமதேவ சுவாமிகள். அமைச்சர் உடம்பில் இலிங்கம் தரித்திருப்பவர். உடம்பில் இலிங்கம் தரியாதவர் (வீரசைவர் அல்லாதவர்)களிடம், அவர் முகங்கொடுத்துப் பேசுவதில்லை என்றனர். இதுகேட்ட சிவப்பிரகாசர் சற்றே யோசித்தார். சித்தாந்த சைவருக்கும் வீரசைவருக்கும் கடவுள் ஒருவரே; அவர் சிவபெருமானே. வழிபடு முறையிலும் முத்திநிலையிலும் சிறுசிறு வேறுபாடுகள் உண்டு. இருப்பினும் 'சிவசம்பந்தமே சைவம்' என்னும் மறைப்பொருளை மனம்கொண்டு, தமது பூசைப் பெட்டியில் இருந்த சிவலிங்கப்பெருமானை சிறிய பெட்டியில் எழுந்தருளச் செய்து, தலைமேல் தரித்துச் செல்வது என எண்ணினார். அப்பொழுது அம்பலவாணர், 'அவ்வாறே செய்க!' என அசரீரியாக மூன்றுமுறை கூறியருளினார். இதுகேட்டு சிவப்பிரகாசரும், உடன் வந்த அடியார்களும் அவ்வாறே தரித்துக்கொண்டு, அமைச்சர் தங்கிஇருந்த மாளிகைக்குச் சென்றனர்.

மீண்டும் வழிபாடு நடைபெறுதல்:

அமைச்சர் இலிங்கண்ணனும், 'தமது சமயகுரு எழுந்தருளி யிருக்கிறார்' என்று மகிழ்ந்து, இசைக்கருவிகள் முழங்க, பதினாறு வகை மங்கலங்களுடன் (சோடச உபசாரம்) திருவடிவழிபாடு (பாதபூசை) செய்து வணங்கித் தாங்கள் அடியேனின் சிறுகுடிலுக்கு எழுந்தருளிய காரணம் யாதோ?' என விண்ணப்பித்தார். அதற்கு சிவப்பிரகாசர், தில்லையில், அரசின் அலுவலாளனாய் இருப்பவன் செய்த தகாத செயல்கள் குறித்து எடுத்துரைத்தார். இதுகேட்ட அமைச்சர் மனம் வருந்தி, அரசு அலுவலர் சிலரை அழைத்துச் சிதம்பரம் சென்று, அந்த வைணவ அலுவலரை அப்புறப்படுத்திவிட்டு, அம்பலவாணருக்கு முறையான வழிபாடு நடக்க ஏற்பாடு செய்து, திருக்குட நன்னீராட்டும் செய்து, திருநீற்றுக் காப்புடன் (விபூதிப் பிரசாதம்) வருமாறு ஆணையிட்டார். அலுவலாளரும் சிதம்பரம் சென்று, செயல் முடித்துத் திருநீற்றுக் காப்புடன் வேலூர் வந்தனர்.

சித்தராமதேவர் – சந்திப்பு:

திருநீற்றினை வணங்கி அணிந்துகொண்ட சிவப்பிரகாசர், அதனை அமைச்சருக்கும் வழங்கினார். அமைச்சரும் அத்திருநீற்றை உடல்முழுதும் பூசிக்கொண்டார். பின்பு சிலகாலம் அமைச்சனது மாளிகையிலேயே சிவப்பிரகாசர் தங்கி இருந்தார். அப்பொழுது அமைச்சன், சித்தராமதேவ சுவாமிகளை வரவழைத்து, தமது மாளிகையில் தங்கவைத்து, வீரசைவ நெறி குறித்து அளவளாவி இருக்குமாறு செய்தான்.

அரசர் – சந்திப்பு:

அமைச்சரது மாளிகையில் சிவப்பிரகாசர் எழுந்தருளி இருப்பது குறித்துக் கேள்விப்பட்ட அரசன், அமைச்சரது மாளிகைக்கு வந்து, அடிகளிடம் மழையின்றி மக்கள் துன்பமுறுவது குறித்து எடுத்துரைத்தான். அதுகேட்ட அடிகள், 'சற்றே பொறுத்திரு!' என்று கூறி, நீராடி, வழிபாடு முடித்து, கையில் வீணையை ஏந்தி, அடியார்கள் தாளம்ஒத்த, 'மேகராகக்குறிஞ்சி' என்னும் பண்ணில் அமைந்த தேவாரப் பதிகத்தை ஓதினார்; ஓதிக்கொண்டே நடனமும் ஆடினார்.

அப்பொழுது மேகம் திரண்டு, இடிமின்னலுடன் மழைபெய்தது; வெள்ளம் பெருக்கெடுத்தது; இனியும் மழை பெய்தால் அழிவு நேரும் என்று உணர்ந்து, 'மழை போதும்' என்று அடிகளிடம் முறையிட்டனர். அதுகேட்ட அடிகள் நடனத்தை நிறுத்த, மழையும் நின்றது.

திருவண்ணாமலையில் மடம் நிறுவுதல்:

இதுகண்ட மன்னனும் அமைச்சனும் அடிகளை வணங்கி, 'தாங்கள் எப்பொழுதும் எங்களோடு இருந்து, எங்களுக்குக் காட்சி வழங்குதல் வேண்டும்; அருகில் திருவண்ணாமலை எனும் தலம் இருக்கிறது; அங்குத் திருமடம் அமைத்துத் தருகிறோம்; அங்குத் தங்கிஇருந்து அருளவேண்டும் என வேண்டினர். அதற்கு அடிகள் உடன்பட்டதால், திருவண்ணாமலையில் அக்கினி தீர்த்தக் கரையில், திருமடம் ஒன்றை நிறுவி, அதற்கு ஏழு கிராமங்களைத் தானமாகத் தந்து, கல்வெட்டில் எழுதினர்; மேலும், பல்லக்கு, குடை, சாமரம் முதலிய விருதுகளும் வழங்கி, பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட அணிகலன்கள், யானைகள், குதிரைகள், காளைகள், பசுக்கள் முதலியவற்றையும் கொடையாகத் தந்தனர்; அரசன் வழங்கிய பொருள்களை, அம்பலவாணர் அருளால் பெற்று, சிவப்பிரகாசர் திருவண்ணாமலை மடத்தில் தங்கி, அருளுரை வழங்கி, வீரசைவத்தைப் பரப்பி வந்தார்கள்.

நூல்கள் பாடுதல்:

திருவண்ணாமலையில் தங்கியிருந்த காலத்தில் 1. அத்துவித வெண்பா; 2. கணபாட்சித ரத்தினமாலை; 3. முக்காண்டம்; 4. சதகத்திரையம்; 5. அனுபவசடுத்தலம்; 6. மந்திரகோப்பியம்; 7. தீட்சா போதை; 8. மிசிராற்பணம்; 9. நூற்றொருதலம்; 10. சர்வாசாரசடுத்தலம்; 11. திருவாலந்துறைச்சிந்து; 12. திருக்கழுக்குன்றமாலை; 13. விருத்தம்; 14. கப்பறை முக்கியம், 15. தீட்சா விதி, 16. வெண்பா முக்காண்டம் என்னும் பதினாறு. நூல்களைத் தமிழ்மொழியில் பாடியருளினார்கள். தன்னை வந்து சரண்அடைந்தவர்க்கு சிவலிங்கம் அணிதலாகிய (சிவலிங்கதாரண) தீட்சை வழங்கி, ஒரு அத்துவித சைவசமய நிறுவன ஆசானாய், வீரசிங்காதனத்தில் வீற்றிருந்தார்.

காளத்திநாதன் – சந்திப்பு:

சிலநாட்கள் கழிந்து, சிவத்தலயாத்திரை செய்ய எண்ணம் கொண்டு, திருக்கழுக்குன்றம் வந்து வழிபட்டார். அங்கு அந்தணர்கள் சிலர் எழுப்பிய ஐயங்களுக்கு விடைபகர்ந்தார். பின்னர் திருக்காளத்தி நோக்கிப் பயணித்தார். வழியில் பொன்முகலி ஆற்றில் நீராடி, அதன் கரையில் சிவழிபாடு முடித்து, திருக்கோயிலுக்குப் புறப்படும்போது, வடநாட்டில் இருந்துவந்த மத்துவ சமய குரு ஒருவர் அங்கு வரக்கண்டு, அவரோடு உரையாடிக் கொண்டிருந்தார். அந்த உரையாடல் மத்துவ சமய சித்தாந்தம், வீரசைவ சமய சித்தாந்தம் ஆகிய இரண்டுக்குமான சொற்போராக மாறியது. அப்பொழுது அடிகள், 'தோற்பவர் வெல்பவருக்கு அடிமை என்பதை உறுதி செய்துகொண்டு வாதிக்கலாமே!' என்றார். அதன்படி மூன்று நாட்கள் தொடர்ந்து சொற்போர் நடந்தது. நான்காம் நாள் சொற்போர் முடிவுக்கு வந்தது. மத்துவகுரு, தம் தோல்வியை ஒப்புக்கொண்டார். தமது மரபுக்கு வேறு ஒருவரை நியமனம் செய்துவிட்டு, யானை, சேனை முதலியவற்றைச் சிவப்பிரகாசரிடம் ஒப்படைத்துவிட்டு, அவரை வணங்கித் திருநீறு, உருத்திராக்கம் பூண்டு, திருவைந்தெழுத்து மந்திர உபதேசமும் பெற்றுக்கொண்டார். அவரை நோக்கிய சிவப்பிரகாசர், அவருக்குத் தூளிதம் காளத்தி நாதன் என்று தீக்கைப் பெயர் (தீட்சா நாமம்) சூட்டித் தம் மாணவராக ஏற்றுக்கொண்டார். பின்னர் காளத்தி இறைவரை வணங்கிப் புறப்பட்டு, கல்யாணபுரி வழியாக உடுப்பி சுப்பிரமணியம் என்னும் தலத்துக்குச் சென்றார்.

அடியார்கள் அமுது படைத்தல்:

அத்தலத்துக்கு அருகிலிருந்த அழகிய வனத்துக்குச் சென்றவர், அங்கு இருந்த ஓர்அழகிய தடாகத்தைக் கண்டு, அவ்விடத்தில் பல்லக்கை விட்டு இறங்கி, நிட்டை கூடி, மூன்று நாட்கள் உணவு, தண்ணீர் என எதுவும் அருந்தாது, நிட்டை கலையாதவராக இருந்தார். இதுகண்ட சிவபெருமான், அவ்வூர் அடியார்கள் கனவில் சென்று, சிவப்பிரகாசரது நிலைகுறித்து எடுத்துரைத்து, அவருக்கு அமுது (உணவு) படைக்குமாறு அறிவித்தார். அவர்களும் அறுசுவையோடு கூடிய உணவு சமைத்துக்கொண்டு வந்து, நிட்டை கலையும்

சமயம்வரை காத்திருந்து, அவருக்கும், உடனிருந்த அடியார் களுக்கும், அமுது படைத்து மகிழ்ந்தனர். சிலநாள் அவ்விடத்தில் தங்கி இருந்தவர், பின்னர் புறப்பட்டுத் திருச்செங்கோடு என்னும் தலத்தைச் சென்றடைந்தார்.

கல் நந்தி கடலை தின்றது:

அங்கு அந்தணர்கள் குடியிருந்த வீதிவழியே இவர் பல்லக்கில் செல்வதுகண்டு, கேதாரிஐயர் என்பவரது சீடர்கள் சிலர் தடுத்தனர். இதுவும் அம்பலவாணன் திருவருள்தான் என்று கூறி பல்லக்கை விட்டு இறங்கி, நடந்து சென்றார். அப்பொழுது அவர்கள் ஒன்றுகூடி நீவிர் பெரியராயின், நாங்கள் கொடுக்கும் கடலையை இங்கிருக்கும் கல்நந்தியைத் தின்னச் செய்ய வேண்டும் என்றனர். 'அப்படி அந்த நந்தி, கடலையைத் தின்றால், நீங்கள் என்ன செய்வீர்கள்?' என வினவ, 'நாங்கள் உங்களுக்கு அடிமையாவோம்!' என்றனர். அப்பொழுது அவர்கள் தந்த கடலையை வாங்கி நந்தியின் முன்வைத்து,

''வில்லார் மணிச்சபையின் வித்தகா கூடலின்முன்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன் - வல்லாண்மை
கட்டுரையே யாகிலிந்தக் கல்லே றெழீஇக்கடலை
இட்டவிவர் முன்றினச்செய் யே''

(மதுரையில் கல் யானை கரும்பு தின்றது உண்மையாயின், இங்கு இந்தக் கல் நந்தி கடலை தின்னவேண்டும்) என்ற வெண்பாவைப் பாடினார். அப்பொழுது அந்த நந்தி வாலை நிமர்த்தி, காலைப் பரப்பி, ஆரவாரம் செய்து, கடலை முழுவதையும் தின்றது. இந்த அதிசயம் கண்டோர், கேதாரி ஐயரிடம் சென்று கூறினர். அவரும் ஓடிவந்து, திருவடிகளில் விழுந்து வணங்கி, மன்னிக்குமாறு வேண்டினார். இதற்கு மேலும் தாங்கள் பல்லக்கில் ஏறாது, நடந்து செல்வீராயின், நாங்கள் உயிர்விடுவோம் என்றனர். அத்தலத்து உமையொரு பாகராய் விளங்கும் இறைவரை வணங்கிப் பல்லக்கில் ஏறிப் புறப்பட்டவர், கேதாரி ஐயரின் வேண்டுகோளை ஏற்று அவரது திருமடத்தில் தங்கி, அங்கிருந்தோர்க்கு சிவலிங்க தீக்கை செய்து, வீரசைவ நெறிமுறைகளைக் கற்றுக் கொடுத்துப் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, திருவண்ணாமலை வந்து சேர்ந்தார்.

குமாரசாமி தேசிகர் – சந்திப்பு:

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த குமாரசுவாமி தேசிகர் என்னும் அன்பர், திருவண்ணாமலை கண்டு வழிபடத் தலப்பயணம் மேற்கொண்டார். வழியில் கல்லாற்றங்கரையில் சிவவழிபாடு முடித்து, பூசைப் பெட்டியை ஒரு கொன்றை மரத்தில் தொங்கவிட்டு, உணவருந்தி, பயணம் மேற்கொண்டார். மறுநாள் திருவண்ணாமலை வந்துசேர்ந்தார். அதிகாலை நீராடி, வழிபாடு செய்யப் பெட்டியைத் தேடினார்; அது கிடைக்கவில்லை; மறந்து வந்தமையை நினைந்து வருந்தி, மூன்று நாட்கள் உணவு உண்ணாது இருந்தார். அவரது கனவில் அண்ணாமலையார், ஒரு முதியவராகத் தோன்றி, 'நீ அங்கம் (உடம்பு) வேறு, இலிங்கம் வேறாக இருந்தமையால்தான், உனக்கு இத்துன்பம் நேர்ந்தது; இங்கு அக்கினி தீர்த்தக்கரையில் ஒருதிருமடம் உள்ளது. அங்கு சிவப்பிரகாசன் என்னும் துறவி ஒருவன் உளன்; அவனிடம் சென்று சிவலிங்கத்தை அங்கலிங்கமாக அணிந்து கொள்க' எனக்கூறி மறைந்தார். திருமடம் சென்று, அடிகளைக் கண்டு, கனவுபற்றிக் கூறினார். அவரும் சிவலிங்கத்தை அங்கலிங்கமாக அணியச் செய்தார். அதன்பின்னர் அவர் சிலகாலம் திருவண்ணாமலையில் தங்கி இருந்தார்.

தேசிகருக்குப் பிள்ளைகள் பிறத்தல்:

அப்பொழுது தமக்கு இதுவரை மகப்பேறு வாய்க்கவில்லை என்று, தம்மனக் குறையை அடிகளிடம் கூறினார். அதுகேட்ட அடிகள், அண்ணாமலையார் அருளால் உனக்கு மூன்று ஆண்பிள்ளை களும் ஒரு பெண்பிள்ளையும் பிறப்பர். அவர்களில் மூத்தவனுக்கு எமது பெயரைச் சூட்டி, அவனை எம்மிடம் ஒப்படைத்துவிட்டு, மீதிப்பிள்ளைகளை நீவிர் வைத்துக்கொள்ளலாம் எனக் கூறித் திருநீறளித்தார். அடிகளின் அருள்வாக்குப்படி பிள்ளைகள் பிறந்தனர். மூத்தபிள்ளைக்குச் சிவப்பிரகாசன் என்றும், ஏனையோருக்கு வேலையன், கருணையன், ஞானாம்பாள் என்றும் பெயர்கள் சூட்டி, சிவலிங்கமும் அணியச் செய்து வளர்த்து வந்தார்.

துறைமங்கலம் சிவப்பிரகாசர்:

சிவப்பிரகாசர் கல்வியில் மிகவும் தேர்ச்சி உடையவராய், அடிகளிடம் வந்து, சங்கம தீட்சை பெற்றுக்கொண்டார். பிறகு

ஞானநூல்களை ஓதியுணர்ந்து, அடிகளிடம் விடைபெற்று, சிவத்தலப் பயணம் மேற்கொண்டார். வழியில் அண்ணாமலை ரெட்டியார் என்னும் ஓர் அன்பரைக் கண்டு அளவளாவினார். இவரது கல்வித்திறத்தையும் சாத்திர முதிர்ச்சியும் கண்டு வியந்த அவர், துறைமங்கலம் என்னும் ஊரில் திருமடம் அமைத்து அங்குத் தங்கி இருக்க வேண்டிக்கொண்டார். அதனால் இவருக்குத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என்னும் பெயர் வழங்கலாயிற்று. (நிற்க).

இலிங்கதுரை – சந்திப்பு:

அப்பொழுது துறையூரை ஆண்டுவந்த அரசரது தம்பி இலிங்கதுரை என்பவர், தன் தமையனிடம் மனவருத்தம் கொண்டு, காசியாத்திரை புறப்பட்டார். வழியில் திருவண்ணாமலை சென்று அண்ணாமலையாரை வழிபட்டார். அப்பொழுது அங்கு எழுந்தருளி இருந்த சிவப்பிரகாசரது பெருமைகள் குறித்துக் கேள்விப்பட்டவர், அடிகள் எழுந்தருளி இருக்கும் இடத்துக்கு வந்து, நேரில் கண்டு, வணங்கி நின்றார். அப்பொழுது அடிகள், ‘உன் எண்ணம் நிறைவேறும்!’ என்று கூறித் திருநீறு அளித்தார். அதனைப் பெற்று அணிந்துகொண்ட இலிங்கதுரை காசி சென்று, மீண்டு வரும்போது திருவண்ணாமலை வந்து, அடிகளைத் திருமடத்தில் கண்டு வணங்கித் திருநீறு பெற்று நின்றார்.

அவ்வாறு நிற்கும்போது, துறையூரில் தமையன் இறந்தமையால், அரசுசெய்ய ஒருவரும் இல்லையே என அமைச்சர் முதலியோர் ஆலோசனை செய்து, ‘இளவரசரான இலிங்கதுரை திருவண்ணாமலையில், சிவப்பிரகாச அடிகளது திருமுன்பு இருக்கிறார்’ என்ற செய்தி அறிந்து, அனைவருமாகச் சேர்ந்து, அங்கு வந்து, அரசற்குச் செய்யும் மரியாதை அனைத்தும் செய்து, நிகழ்ந்தது அனைத்தும் கூறினர். செய்திகேட்டு இலிங்கதுரை முதலில் மனம் வருந்திப்பின் ஒருவாறு மனம் தேறி, அடிகளின் பெருமையை மனதில் நினைந்து, அடியேன் இதுமுதல் என்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் தங்களிடம் ஒப்படைத்துவிட்டேன்; இனி அடியேனுக்கு சிவலிங்கம் அணிவித்து, சிவபூசை செய்யவும், சிவத்தியானம்

செய்யவும், என்னைத் தகுதி உடையவனாக்கி, அருளவேண்டும்!' என விண்ணப்பித்தான். அங்ஙனம் அடிகளும் அருளிச்செய்தார்.

துறையூரில் திருமடம் அமைத்தல்:

அதற்குமேலும், 'சுவாமி! தாங்கள் அடியேனுடன் துறையூருக்கு எழுந்தருளி, எப்பொழுதும் எங்களுக்குக் காட்சி நல்குதல் வேண்டும்! என்று வேண்டினான். அதன்படி அடியார்கள் புடைசூழ அடிகள் பல்லக்கில் ஏறிப்புறப்பட்டார். வழியில் பெண்ணையாறு குறுக்கிட்டது. ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவது குறித்து அன்பர்கள், அடிகளிடம் முறையிட்டனர். அவர்கள் கையில் திருநீற்றைக் கொடுத்து, 'இதனை ஆற்றில்இட்டு பல்லக்கைச் செலுத்துங்கள்!' என ஆணை வழங்கினார். வெள்ளம் வடிந்து, நீர் கணைக்கால் அளவானது. பல்லக்கும் அடியார்களும் அக்கரைக்குச் சென்று சேர்ந்தனர். இதுகண்டு இளவரசன் மகிழ்ந்து, துறையூரை அடைந்து, தமையனுக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன் முதலியன செய்து முடித்து, அரசு செலுத்தி வரும்நாளில், அரண்மனைக்கு எதிரில் திருமடம் அமைத்து, வழிபாடு, திருவமுது முதலியவற்றுக்காக சில கிராமங்களைத் தானமாக எழுதிவைத்தான். அத்துடன் நில்லாது, நாளும் பத்து பொற்காசுகளும் அளித்து, அடியார்களையும் பாதுகாத்து, அடிகளை நாளும் கண்டு, வணங்கி வரலானான்.

நீர்கொண்டு தீவட்டி எரித்தல்:

அடிகளும் துறையூர் மடத்தில் தங்கியிருந்து, பலருக்கு வீரசைவ தீக்கை முதலியன செய்துவைத்துத் தாம் திருவருளில் திளைத்திருந்த காலம், திருவாவடுதுறை சென்று குருநாதரைக் கண்டு வணங்க விருப்பம் கொண்டார். பல்லக்கில் ஏறி, விருது களோடும் வாத்தியம் முழங்கத் திருக்கூட்டத்துடன் புறப்பட்டார். வழியில் திரிசிரபுரத்தில் (திருச்சிராப்பள்ளியில்) அவ்வூர் அன்பர்கள் ஒன்றுகூடி அடிகளை வரவேற்று, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அப்பொழுது மரியாதைக்காக எடுத்துச் சென்ற தீவட்டியில் எண்ணெய் தீர்ந்துவிட, தம்முடன் வந்த அடியார் ஒருவரை அழைத்து, 'நீ காவிரியில் நீராடி, குடத்தில் நீர் நிரப்பி வந்து தீவட்டியை எரியச் செய்!' என்றார். அவ்வாறு செய்து, நீர்கொண்டு தீவட்டி எரித்து, அடியார்கள் மகிழ்ந்தனர்.

தொழுநோய் போக்குதல்:

அங்கு சாரமாமுனிவர் என்பாரது தவக்குடிலுக்குச் சென்று, வழிபாடு முடித்து, தாயுமான இறைவரை வழிபட்டு உணவருந்திப் பல்லக்கில் ஏறிப்புறப்பட்டார். திருச்சோற்றுத்துறை என்னும் தலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும்போது, வழியில் ஓர் ஆலமர நிழலில் ஒரு தொழுநோயாளனைக் கண்டார். அவனது துன்பம் கண்டு, அவன் மீது எச்சிலை உமிழ, அவன் அவ்வெச்சிலை விழுங்க, அவனது தொழுநோய் நீங்கியது. அவனும் அடியார் திருக்கூட்டத்தில் ஒருவனாக சேர்ந்துகொண்டான்.

பித்தம் தெளிவித்தல்:

சோழர் மரபைச் சேர்ந்த அரசன் ஒருவன், தெய்வக் குற்றத்தால் மனநிலை பாதிக்கப்பட்டு ஊர்ஊராய் அலைந்து திரிந்து கொண்டிருந்தான். அடிகள் பல்லக்கில் செல்வது கண்ட அவன் ஓடிவந்து, பல்லக்கைச் செல்லவிடாது பிடித்து இழுத்தான். அவனைப்பற்றி அடிகள் வினவ, உடனிருந்தோர் விடை கூறினர். திருநீற்றை எடுத்து அவன் மீது அடிகள் தெளிக்க, தெய்வக்குற்றம் நீங்கி, மனம் தெளிந்து, மீண்டும் அரண்மனை சென்று, நாட்டை ஆளத் தலைப்பட்டான்.

சிறுவன் உயிர் பெறுதல்:

திருக்கலயநல்லூருக்கு அருகில் செல்லும்போது, அவ்வூர்ச் சிவன் கோயிலில் வழிபாடு செய்துவரும் ஆதிசைவ அந்தணன் ஒருவனது மகன் பாம்பு தீண்டி இறந்ததை அறிந்தார். உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வது கண்ட அடிகள், அவர்களை அழைத்து, ‘இச்சிறுவனை எனக்குக் கொடுப்பீர்களா?’ என வினவினார். அவர்கள், ‘உயிர் நீங்கிய உடலையா கொடுப்பது’ என வருந்தினர். அதற்கு அடிகள், நீங்கள் அதுகுறித்துக் கவலைப்பட வேண்டாம்; இது உங்களுக்குப் பயனற்றதுதானே!’ என்றார். அவர்கள் ‘இத்தவசியின் பெருமைக் குறித்து நாம் ஒன்றும் அறியவில்லை!’ என்று கூறி, உடலைக் கொடுத்தனர். அடிகள் திருநீற்றினை எடுத்து, மந்திரம் கூறி, உடம்பின்மீது இட்டு, ‘ஞானக்கூத்தா!’ என்று அழைத்தார். அச்சிறுவன் ‘சிவாயநம’ என்று சொல்லிக்கொண்டு

துயில் நீங்கி எழுந்தவன்போல எழுந்து ஓடிவந்தான். அடிகள் மார்போடு அச்சிறுவனைத் தழுவி, முத்தமிட்டுச் சிவிகைத் தண்டின்மீது அமரவைத்துப் புறப்பட்டனர்.

நமச்சிவாயர் திருவருட்கலப்பு எய்துதல்:

திருவாவடுதுறை சென்று நமச்சிவாய மூர்த்திகளைக் கண்டு, வணங்கிச், சிதம்பரம் சென்றது முதல் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் எடுத்துரைத்து ஆசிரியரை மகிழ்வித்தார். நமச்சிவாய மூர்த்திகள், மீண்டும் திருமடப் பொறுப்பு முழுவதையும் சிவப்பிரகாசரிடம் ஒப்படைத்துவிட்டு, குகைக்குச் சென்று, நிட்டைகூடி இருந்தனர். அப்பொழுது நமச்சிவாய மூர்த்திகள் 'திருவருள்கலப்பு' எய்த, குகையில் அமர்த்தல் முதலியன செய்து, திருவுருவு அமைத்துக் கோயில் எடுப்பித்துக் குடமுழுக்கு, குருபூசை, அன்னம்பாலிப்பு என அனைத்தும் செய்துமுடித்துச் சிலகாலம் அங்குத் தங்கிஇருந்தார்.

தம்பிரான் நியமனம்:

அப்பொழுது அடியார் திருக்கூட்டத்தில் கல்வித்திறமும் சாத்திரப் பயிற்சியும் உடையவராய் விளங்கிய ஒரு தம்பிரானுக்குச் சைவ ஆதீன குரு பரம்பரை மேன்மேலும் வளரும்பொருட்டு, ஆகம விதிப்படி குரு கலச நீராட்டு (ஆசாரிய அபிடேகம்) செய்வித்து, அவருக்கு ஆத்மார்த்த பூசைக்கும் அதிகாரப்பூசைக்கும் ஆதரவு நல்கி, 'நம்மைப்போல இவ்வாதீனத்தை சிறப்புற நடத்திவருவீராக!' என ஆசி வழங்கித் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டார்.

மறைஞானசம்பந்தர் சமாதியாதல்:

திருவண்ணாமலையில் அடிகள் எழுந்தருளி இருக்கும் காலத்து, திருவாவடுதுறையில் இளைய பண்டாரம் மறைஞான தேசிகர், திருவருளில் கலந்த செய்தி கேட்டுத் திருவாவடுதுறை வந்து, அம்பலவாண தேசிகருக்குக் கலச நீராட்டுச் செய்து, ஆதீனப் பொறுப்பில் அமர்த்திவிட்டுத் திருவண்ணாமலை செல்லப் புறப் பட்டார். அடியார் திருக்கூட்டத்துடன் பயணிக்கத் தொடங்கியவர், தாம் விதேக முத்தி அடையும் காலம் நெருங்கி விட்டமையை உணர்ந்தார். வழியில் திருப்பட்டீச்சரம், வள்ளலார் கோயில்,

முழையூர், திருச்சத்திமுற்றம், திருக்குடந்தை என்னும் ஐந்து தலங்களுக்கு நடுவிலுள்ள நவலிங்கத் தீர்த்தக் கரையில் கூடாரம் அமைத்துத் தங்கினார்.

வீரசைவ ஆதீனம் தொடங்குதல்:

திருவாவடுதுறைக்குத் தம்பிரான்களை அனுப்பி, அம்பலவாண தேசிகரை வரவழைத்து, அவரை நோக்கி, 'அப்பா! இறைவனது திருவுளப்பாங்கின்படி நமது ஆதீனம், சைவ ஆதீனம் எனவும், வீரசைவ ஆதீனம் எனவும், இரண்டு பகுதிகள் உடையதாயிற்று. இந்த இரண்டுவித ஆதீனங்களுமே இனி உலகில் சிறப்புற்றுத் திகழவேண்டும்' என்று கூறித் திருவண்ணாமலையில் வீரசைவ ஆதீனத்துக்கு ஞானக்கூத்தரைக் கலசநீராட்டி அனுப்பி வைக்க வேண்டுமென்று கூறி, நவலிங்க தீர்த்தக் கரையில் மண்டபம் அமைத்து, வீராகம விதிப்படி சிவலிங்கம் அணிவித்தலும், சங்கமதீக்கையும், குருகலச நீராட்டும் செய்துவைத்து, திருவண்ணாமலையில் வீரசைவ ஆதீனத்தை நடத்திவர ஞானக்கூத்தரைப் பணித்தார்.

அடிகள் – சோதியில் மறைதல்:

திருவாவடுதுறைக்கு இருந்த 128 மடங்களில் 64 மடங்களையும், அவற்றின் வருமானங்களையும், ஞானக்கூத்தருக்கு ஒப்படைத்து விட்டு, சிவவழிபாடு (சிவபூசை) அடியார் வழிபாடு (மகேசுவர பூசை) முதலியன நிறைவேற்றி, திருக்கூட்டத்தோடு ஐந்து நாட்கள் அவ்விடத்தில் இருந்தார். ஆறாம் நாள், முறைப்படி அவர்தம் வழிபாடு முடித்து நிற்கும்போது, காண்பார் வியக்கும் வண்ணம் பூமி பிளந்து, ஓர் ஒளிப்பிழம்பு தோன்றியது. அப்பிழம்பில் அடிகளின் திருமேனி கரைந்து மறைந்தது. அதுகண்டு அடியார்கள் ஆடியும் பாடியும் மகிழ்ந்தனர்.

சமாதிக் கோயில்:

இதுகேட்ட சோழமன்னன் அவ்விடம் வந்து, அடிகளார், தமது தமையன் மகனது மனநிலையைச் சீர் செய்தவர் (பிரமகத்தி தோடத்தைப் போக்கியவர்) என்ற செய்தியை அமைச்சர் முதலானோர்க்குக் கூறி மகிழ்ந்தான். அரசன் அங்கு ஓர்ஆலயம்

அமைத்து, சிவலிங்கம் நிறுவி, குடமுழுக்கு நடத்தி, சில கிராமங் களைத் தானமாகக் கொடுத்துக் கல்வெட்டு எழுதி நிறைவேற்றித் தந்தான். ஞானக்கூத்தர் சிலநாள் அங்குத் தங்கிப் பின் தம்பிரான் களை நியமித்துத் தாம் துறையூர் சென்று, அங்குச் சிலநாள் தங்கிப்பின் திருவண்ணாமலை சென்று சேர்ந்தனர். அங்கு அவர் சிவலிங்கம் அணிவிக்கும் தீக்கை, திருவருள்வீழ்ச்சி நிகழ்ந்தோர்க்கு ஞானஉபதேசம் முதலியன செய்து வீரசைவ நெறியைப் பரப்பும் ஞானகுருவாக வீரசிங்காசனத்து எழுந்தருளி இருந்தனர்.

(அடிகளாருக்குப் பின்னர் பல அருளாளர்கள் சிவப்பிரகாசர் என்ற பெயரில் வாழ்ந்து வந்துள்ளனர். ஆதலால் இவரை ஆதி சிவப்பிரகாசர் என வழங்கவேண்டி வந்தது).

(இந்த வரலாற்றுச் செய்திகள், குமாரதேவர் திருமட வெளியீடாக வந்துள்ள 'அத்துவித வெண்பா' என்னும் நூலிலிருந்து திரட்டப்பட்டவை).

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

சாந்தலிங்க அடிகளார் வரலாறு

ஆதி சிவப்பிரகாசரைக் காண்டல்:

சாந்தலிங்கர் இளமையிலே சமயநெறியை மேற்கொண்டு, பல தலங்களுக்கும் தலப்பயணம் மேற்கொள்பவராய் சற்குருவை நாடியிருந்தார். அப்பொழுது திருவண்ணாமலையில் வீரசைவ ஆதீனத்தின் முதல்குருவாக விளங்கிய ஆதி சிவப்பிரகாசரைக் கண்டார். அவரது தவலிமையும் அருட்பொலிவும் சீலமும் கோலமும் சாந்தலிங்கரை மிகவும் கவர்ந்தது. சிவப்பிரகாசரைச் சிவமாகவே கண்டு வணங்கி, அவருடன் தங்கிப் பணிவிடைகள் செய்துவந்தார். சாந்தலிங்கரது பக்குவநிலையைக் கண்ட சிவப்பிரகாசர், அவருக்கு அருள்நோக்கம் வைத்து, முறையாக உபதேசம் செய்து அருளினர். அப்பொழுது நாளும் உண்ணாமுலை உமையாளையும், அண்ணாமலை அண்ணலையும் வழிபட்டு வந்தார்.

தலப்பயணம் மேற்கொள்ளல்:

சிவப்பிரகாசர் சிதம்பரத்துக்குப் புறப்பட்டார். அப்பொழுது சாந்தலிங்கரும் உடன்சென்று, கொற்றவன்குடித் திருமடத்தில் தங்கிப் பணிசெய்து வந்தார். தில்லையில் சிலகாலம் தங்கி வழிபட்ட சிவப்பிரகாசர், திருக்காளத்திக்குப் பயணமானார். அப்பொழுது சாந்தலிங்கரும் உடன்சென்றார். பொன்முகலி ஆற்றின் கரையில் மத்துவ நெறியினர் ஒருவரோடு சிவப்பிரகாசர் சொற்போர் செய்து, வென்று, அவருக்குக் காளத்திநாதன் என்று பெயரிட்டு, அவரைத்தம் மாணவன் ஆக்கிக்கொண்டார். அந்தக் காளத்திநாதன்மீது, சாந்தலிங்கருக்கு ஈடுபாடு உண்டாயிற்று. அவரைச் சாந்தலிங்கர், தமக்கு வழிகாட்டும் ஆசானாக ஏற்றார். தமது பிறவிக்கடலைக் கடக்க உதவும் தோணியாக அவர் விளங்கினார் என்பதை,

"காணாதபவக் கடலின் கரைகாண எற்குக்
கோள்நாகணி மார்ப மெய்யன்பு கொடுத்திஎன்றே
நாணாதிசைத் தேன்திருக் காளத்தி நாதஉன்தாள்
பேணாது அவக்கடல் மூழ்கிய பேதையேனே"

என்று தாம் பாடிய வைராக்கிய தீபம் என்னும் நூலில் உள்ள இந்தப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

சிவப்பிரகாசர் உடுப்பி சென்றபோது, சாந்தலிங்கரும் உடன் சென்றார். மேலும் துறையூரில் இலிங்காரெட்டியார், சிவப்பிரகாசருக்கு அமைத்துக் கொடுத்த மடத்தில் சிவப்பிரகாசர் தங்கியிருந்தபோது, சாந்தலிங்கரும் உடன்தங்கிப் பணிசெய்து வந்தார். சாந்தலிங்கர் துறையூர் மடத்தில் தங்கியிருக்கும்போது, ஆசானின் அருளுரை பெற்று, சிவப்பரம்பொருளை அகத்தும் புறத்தும் கண்டு, நிட்டை கூடித் தவப்பொலிவோடு விளங்கினார். சிவப்பிரகாசர் திருவண்ணாமலை, திருச்செங்கோடு, பேரூர் முதலிய தலங்களை வணங்கச் சென்றபோது சாந்தலிங்கரும் உடன்சென்று, மீண்டும் திருவண்ணாமலை சேர்ந்தனர்.

பேரூரில் தங்குதல்:

சிவப்பிரகாசர், சாந்தலிங்கரின் பழுத்த மனத் தொண்டினையும், அருளுணர்வு நிலையினையும் கண்டு, 'முதிர்ந்த தவநிலை பெற்றுள்ள நீவிர், விரும்பும் தலத்துக்குச் சென்று, உம்மை நாடிவரும் மாணவர்களுக்குத் தீக்கை முதலியன வழங்குவதும், மக்களை நல்வழிப்படுத்துவதும் ஆகிய பணிகளை மேற்கொள்ளலாம் எனப் பணித்தார். சாந்தலிங்கரும் தம்மை மிகவும் ஈர்ந்த பிறவாநெறித் தலமாகிய பேரூருக்குச் செல்லலாம் என எண்ணம் கொண்டு புறப் பட்டார். வரும் வழியில் அவிநாசியில் அவினாசியப்பரை வணங்கிச் சிலநாள் அங்குத் தங்கினார். அதனைப் பின்னாளில் தாம் பாடியருளிய வைராக்கிய சதக நூலின் பாடலில் குறிப்பிட்டுள்ளார். பாடல் வருமாறு:

"கொள்ளே னெனினும் எழுத்தைந்தும் உள்கோது யாதும்
தள்ளே னெனினும் உனைச்சார் தவம்சார்ந் திலாரை
விள்ளே னெனினும் எனைநீ கைவிடேல் விடேல்காண்
நள்ளா றுடையாய் அவிநாசி நயந்து ளானே"

திருமடம் உருவானது:

அவிநாசி விட்டுப் புறப்பட்டுப் பேரூர் வந்து, அரசவனத்தில் தங்கி, தவம் மேற்கொண்டார். அவரது அருட்பொலிவு கண்டு, அன்பர்கள் அவரை நெருங்கிப் பணியாற்றினர். அவர் தங்குவதற்கு ஒருதிருமடமும் உருவாக்கினர்.

"சாலக் கருணை தழைத்தகுரு தாள்பணிந்து
கூலப் பொலிவாரும் கொங்குவள நாட்டினிடை
மேலச் சிதம்பரமாம் மிக்கபுகழ்ப் பேரையினில்
சீலத்தர் போற்றத் திருமடம் செய்துற்றானே"

என்னும் புலவர் புராணப் பாடல் இச்செய்தியைத் தெரிவிக்கிறது.

சாந்தலிங்கரது தவவலிமை கண்டு, மடத்தில் அடியார் கூட்டம் பெருகியது. அவரது நல்லுரையைக் கேட்க, அன்பர்கள் கூடினர். திருமடத்துப் பணிகளைப் பணியாளர்கள் இன்றித் தொண்டர்களே முன்வந்து செய்தனர். இதனைப் புலவர் புராணம்,

"ஏறும் விடைபுரப்போன் ஏடுகைக்கொண்டே படிப்போன்
சோறு சமைப்போன் துகிற்பணி செய்வோன் முதலாத்
தேறும் நிமித்தம் திருத்தொண்டு செய்பவராக்
கூறும் அடியார் குழாம்பலவும் கொண்டானே"

என்று விளக்குகிறது.

ஓவியத்தில் வரைந்த விளக்கின் சுடர் அசைவற நிற்பது போல, சமாதிநிலையில் மனம் அசைவற நின்று, விளக்கம் பெற்று, அனைத்துயிரும் இன்பமுற வழிகாட்டிப் பணிசெய்து வந்தார்.

அம்பலவாணர் தரிசனம்:

ஒருநாள் அடிகள் நிட்டையிலிருந்து விழித்து, சிவபெருமானை உருவத்திருமேனியில் சிந்தித்துக் கொண்டிருக்க, அப்பொழுது அம்பலவாணர் பச்சைநாயகியுடன் இடபத்தில் எழுந்தருளி காட்சி நல்கினார். அதுகண்டு கைகளைத் தலைமேல் கூப்பி, கண்களில் நீர் அருவியென வழிய, பேரின்பக் கடலில் மூழ்கி, வாய்குழறித்

துதித்து, விழுந்து எழுந்து தம்மை மறந்தவர் ஆயினர். இவ்வாறு தாம் கண்டு வணங்கியதை தமது பாடல்களில் பின்னாளில் பதிவு செய்துள்ளனர். அவை வருமாறு:

1. **''பிரானே திருத்தில்லை உள்ளாய் அன்றுஇப் பேதையேன்முன் ஓர்ஆன் ஏறு இவர்ந்து அம்பிகையோடு எளிதுஓடி வந்தாய்''**
2. **''ஆன்ஏறுஏறி இவர்ந்து என்எதிரே விரைந்துஅன்று வந்தோய்க்கு''**
3. **''சார்ந்தாய் குருஆதியாய் விடைதன்னில் வந்தாய்''**
4. **''தவந்தான் சிறிதும் இலிபால் விடைதன்னில் மின்னோடு இவர்ந்தே வர''**

இவை முறையே வைராக்கிய சதகம் தோத்திரம் 6, 10, 24, 42 ஆகிய பாடல் வரிகள்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் சந்திப்பு:

அப்பொழுது சாந்தலிங்கர் பொம்மபுரம் என்னும் பொம்மையபாளையத்தில் திருமடம் அமைத்து அருளாட்சி செய்துவரும் வீரசைவ ஞானியாகிய அம்மடத்தின் இரண்டாம் பட்டம் சிவஞானபாலய அடிகளாரைக் கண்டு வழிபடவேண்டும் என்று எண்ணினார். அவ்வாறு பொம்மபுரம் புறப்பட்டவர், வழியில் துறைமங்கலத்தில் தங்கியிருந்த கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசரைக் கண்டு, அளவளாவி, சிலகாலம் அங்குத் தங்கினார். அப்பொழுது ஞானாம்பிகையம்மையார் சிவப்பிரகாசரது வழிபாட்டுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்வதுகண்டு, 'இந்நங்கை யார்?' என சாந்தலிங்கர் வினவினார். அதற்குச் சிவப்பிரகாசர் நயம்பட, 'இவள் எமது தங்கை உமது அங்கைக்குரியவர்' என விடைகூறினார்.

சிவப்பிரகாசர் – நெஞ்சுவிடு தூது பாடியது:

பின்னர் இருவரும் அடியார்களுடன் புறப்பட்டுப் புதுச்சேரிக்கு அருகிலுள்ள பொம்மையபாளையம் சேர்ந்தனர். இரவு நேரம் வந்தது. சாந்தலிங்கர், சிவப்பிரகாசரிடம் பொம்மபுரம் ஆதீனம்

சிவஞானபாலய தேசிகரை வழிபட்டுச் செல்லலாம் என்றும், அவர்மீது பாமாலை பாடுமாறும் வேண்டினார். அதற்கு சிவப்பிரகாசர், 'கடவுளைத் தவிர, மனிதர்களை யாம் பாடுவதில்லை' என விடை பகர்ந்தார்.

அன்று இரவு அங்குள்ள அய்யனார்கோயில் வளாகத்தில் இருவரும் உறக்கம் கொண்டனர். அப்பொழுது சிவப்பிரகாசர் கனவில் முருகப்பெருமான் எழுந்தருளி, ஒருதட்டில் மலர்களை எடுத்துவந்து, மாலை தொடுத்துத் தருமாறு வேண்டினார். உறக்கம் கலைந்து எழுந்த சிவப்பிரகாசர், சாந்தலிங்கரிடம் இச்செய்தியைக் கூறினார். சாந்தலிங்கர், 'முருகனே, முருகனது அருள்பெற்ற சிவஞானபாலயரைப் பாடுமாறு உணர்த்தியுள்ளார்' எனக் குறிப்பிட்டார். இதுகேட்ட சிவப்பிரகாசர், 'சிவஞானபாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது' பாடினார். பின்னர் இருவரும் தேசிகரைக் கண்டு, வழிபட்டு மகிழ்ந்தனர். அவரும் இவர்களது வரலாற்றினையும், பயணச் சிறப்பினையும் கேட்டு அருள்புரிந்தார்.

திருமணம்:

மயிலம் பொம்மபுரம் ஆதீனம் இரண்டாம் குருவாக விளங்கிய சிவஞானபாலய தேசிகர், 500 ஆண்டுகள் வாழ்ந்தவர், என வரலாறு கூறுகின்றது. அவரது அருள் ஆணையின்படி, சிவப்பிரகாசர் தமது தங்கை ஞானாம்பிகையைச் சாந்தலிங்கருக்குத் திருமணம் செய்துவைத்தார். ஞானாம்பிகையாருடன் பேரூர் மடத்தில் தங்கி சாந்தலிங்கர் அடியார்களுக்கு அருளுரையும் அன்னம்பாலிப்பும் செய்துவந்தார். அங்கு, இவரது ஆசிரியர் ஆதிசிவப்பிரகாசர் கும்பகோணம் - பழையாறை வடதளியை ஒட்டியுள்ள முளையூரில் பேரருளாக விளங்கிய ஒளிப்பிழம்பில் கலந்து முத்தி அடைந்தார்.

மௌனசாமிகள் – சந்திப்பு:

இங்குச் சாந்தலிங்க அடிகளார், செம்பொருளைக் காண விரும்பும் துறவியர்க்கும் இல்லறத்தார்க்கும் மெய்ப்பொருளை உபதேசிப்பவராய்ப் பேரூர் மடத்தில் இல்லறநெறியில் நின்றார். அப்பொழுது நாளும், ஒரு வீரசைவப் புதிய அடியாரை, உடன்

இருத்தி, உணவு உண்ணுவதைச் சாந்தலிங்கர் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் திசைகளை ஆடையாக உடுத்தியவரும், (ஆடையின்றி இருப்பவர் என்பது கருத்து) பேசாநோன்பும், உறங்காமையும், உடையவராய் விளங்கிய மௌனசாமிகள் என்பார், சிதம்பரத்திலிருந்து பேரூருக்கு வந்திருந்தார். அன்று புதிய அடியவராக அவரை அழைத்து, வீரசைவ முறையில் அவரது சடைமுடியில் சிவலிங்கம் அணிவித்து, உணவு பரிமாறி, உடன் இருந்து உணவருந்தி மகிழ்ந்தனர். அன்றுமுதல் மௌனசாமிகள் வீரசைவ நெறிநின்று, மெய்ப்பொருளை உணர்த்தி வந்தார். சிதம்பரத்திலுள்ள அவரது திருமடத்தில் இப்பொழுதும் வீரசைவநெறி, வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

நூல்கள் அருளுதல்:

சாந்தலிங்கர் தாம் கடைபிடித்து ஒழுகிய நெறியினை உலகுக்கு அறிவிக்கும்விதமாக, நான்கு ஞானநூல்களைப் பாடிஅருளினார். வீடுஅடைய முயலுவோர்க்கு வாயிலாக விளங்குபவை அந்நான்கு நூல்கள் என்பதை வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள்,

''தன்குரவன் போலத் தலம்தோ றலையாமல்
இன்குணத்துத் தொண்டர் இனம்சூழ ஆங்கிருந்து
நன்குமுத்தி வீட்டில்உறும் நான்குபெரு வாயில்என
என்குணங்கள் போற்றிடும் நூல்ஈரிரண்டு செய்தானே''

என்று குறிப்பிட்டுள்ளார்.

அம்மை அப்பராகக் காட்டுதல்:

சாந்தலிங்கர் தமது மாணவர்களுக்குப் பாடம் சொல்லும்போது, மடத்தில் தங்கிஇருந்தவர்களோடு, மடத்துக்கு அருகில் வசிப்போர் சிலரும்கூட வந்து பாடம் கேட்பதுண்டு. துறவு பற்றி அடிகளார் விரிவாகப் பாடம் சொல்லக் கேட்ட சிலர், 'இல்லறத்தில் இருந்து கொண்டு துறவின் பெருமை குறித்துப் பேசுகிறாரே!' என ஒருவருக்கொருவர் வினா எழுப்பினர். இதனைக் குறிப்பால் அறிந்துகொண்ட சாந்தலிங்கர், ஞானாம்பிகை அம்மையாரை அருகில் இருத்திப் பாடம் சொன்னார். அப்பொழுது அவர்களுக்குக்

கயிலைநாதரும் உமையம்மையுமாகக் காட்சி அளித்தனர். அக்காட்சி கண்டவர், வந்து திருவடியில் விழுந்து வணங்கிப் பிழைபொறுக்குமாறு வேண்டினர்.

முழுத்துறவு ஏற்றல்:

இருப்பினும், 'புறத்துறவு என்பது உயிர்ச்சார்பு, பொருட்சார்பு என்ற இரண்டையும் துறப்பது' என்பதால், மனைவியைத் துறப்பது தவறாகாது என உணர்ந்து, 'இன்று பகல்உணவு பெறப் பிச்சைக்குச் செல்லும்போது, முதல்வீட்டில் பாலன்னம் கிடைத்தால் மனைவியைத் துறந்து, முழுத்துறவில் நிற்பது. இது பேரூர்ப் பெருமானின் ஆணையாக ஏற்கப்படும்!' என்று கூறிப் பிச்சைக்குச் சென்றார். மாடுமேய்க்கும் தொழிலுடைய ஒருவனது குடிசைவீட்டில் பிச்சை கேட்க, பால்சோறு கிடைத்தது. சாந்தலிங்கரும் முழுத்துறவு ஏற்பது என முடிவு செய்தனர். இச்செய்தி துறைமங்கலம் சிவப்பிரகாசருக்கு எட்டியது. அவரும் பேரூர் வந்து சேர்ந்தார்.

மெய்யுணர்வு கொண்ட துறவிகளானவர், நூறுவயது வரை வாழ்ந்தாலும் வாழலாம்; உடம்பில் நோய்முதலியன கண்டாலும் வாழலாம்; பேய்பிடித்தாலும்கூட வாழலாம்; ஆனால் ஒருபெண்ணுடன் வாழ்தல் என்பது ஆகாது என்ற கருத்துபட,

"சேய்கொண்டா ரும்கமலச் செம்மலுட னேயரவப்
பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே
நோய்கொண்டா லும்கொளலாம் நூறுவய தளவும்
பேய்கொண்டா லும்கொளலாம் பெண்கொள லாகாதே"

என்று பட்டிப்பெருமான்மீது, சிவப்பிரகாசர் ஒருபாடலைப் பாடினார். (இந்த சிவப்பிரகார், ஞானம்பிகை அம்மையாரின் தமையன் என்பது குறிப்பிடத்தக்கது)

திருவண்ணாமலையில் ஞானாம்பிகை:

சாந்தலிங்கர், ஞானாம்பிகையாரை நோக்கி, 'உனக்குப் பாதுகாப்புஉடைய ஓர்இடத்திற்குச் சென்று தவநெறியில் ஒழுகுக!' என்று அருளிச்செய்தார். ஞானமுதிர்ச்சி உடைய அம்மையாரும் திருவண்ணாமலை சென்று, குருபீடமாக விளங்கிய ஆதி

சிவப்பிரகாசர் திருமடத்தில் தங்கி, அடியார்கட்கு அருட்பணி செய்து, சிவனருள் பெற்றார். அவரைக் குருவாக ஏற்ற வீரசைவ அன்பர்கள், அங்கே திருமடத்தில் அழகிய மண்டபம் அமைத்து, அம்மையாரின் திருவடியை எழுந்தருளச் செய்து வழிபட்டனர். இன்றளவும் அவர் பல வீரசைவக் குடும்பங்களுக்குக் குலதெய்வமாக விளங்கி வருகிறார்.

பல அருளிச் செயல்கள்:

அதன் பிறகு இங்கு சாந்தலிங்கர், பல அருளிச்செயல்கள் நிகழ்த்தியவராய், பேரூரிலிருந்து அருளாட்சி செய்து வருவாராயினர். அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

1. ஒருநாள் அடிகள் பிச்சைக்கு ஊருக்குள் செல்லும்போது, ஒரு சிறுவனை அன்பினால் நோக்கினார் என்றும், அதுமுதல் அச்சிறுவன் உலகப் பற்றுக்களைத் துறந்து அடியவனானான் என்றும், அன்றுமுதல் சாந்தலிங்கர் வீதியில் சென்றால், பிள்ளையைத் தாயர் மறைத்து வைத்துக் கொள்வர் என்றும், ஒரு செவிவழிச் செய்தி உண்டு.

2. ஒருமுறை அடிகளாருக்கு குன்மநோய் வந்துற்றது. அப்பொழுதும் தம் மாணவர்களுக்குப் பாடம் சொல்வதை அவர் கைவிட வில்லை. அதற்காக அவர் பாடம் சொல்லும்போது, தன் அருகில் ஒருபிரம்பை நட்டு வைப்பர் என்றும், அப்பிரம்பு ஆடிக்கொண்டே இருக்கும் என்றும், அதுகுறித்துக் கேட்ட போது, தமது குன்மநோயை பிரம்பின்மேல் ஏற்றிவிட்டுப் பாடம் சொல்வதாகவும் கூறினார். ஆனால் பாடம் முடிந்தவுடன் பிரம்பைப் பிடுங்கிவிடுவார். அக்குன்மநோய், அதன்பின் அவரைப் பற்றிக்கொள்ளும். இதுகண்ட மாணவர்கள் ஏன் அந்நோயை நிரந்தரமாகப் பிரம்புக்கு தரக்கூடாது என வினவினர். அதற்கு அவர், 'நுகர்வினையை (பிராரத்த கன்மம்) உடல் இருக்கும்போதே அனுபவித்துக் கழித்துவிட வேண்டும்' என்று விடை கூறினார். இதனால் மாணவர்கள் வினைக் கொள்கையைத் தெளிவுபடுத்திக் கொண்டனர்.

3. சோழமன்னன் ஒருவனுக்கு மருதப்புரவல்லி என்று ஒருமகள் இருந்தாள். அவளுக்குத் தீராத குன்மநோய் இருந்தது.

மருத்துவர்களால் அந்நோயைக் குணப்படுத்த முடியவில்லை. அவள் புனித நீராடல் விரும்பித் தலப்பயணம் செய்தாள். அவ்வாறு செய்தவள், பேரூர் வந்து, திருமடத்தில் அடிகளாரைக் கண்டு, வணங்கித் தன் துன்பம் குறித்து எடுத்துரைத்தாள். அதற்கு அடிகள், 'இலங்கை நாட்டின் வடபகுதியில் 'கீரிமலை' என்றுஒரு மலை இருக்கிறது. அங்கு சுத்த தீர்த்தம், மலைஅருவித் தீர்த்தம், என்ற இரண்டும் கலந்த ஒரு புனிதத் தீர்த்தம் உள்ளது. அங்கு சென்று நீராட நோய் நீங்கும்' என்று அருளினார்.

அதன்படி அங்குச்சென்ற மருதப்புரவல்லி அத்தீர்த்தத்தில் நீராடி, அம்மலையில் எழுந்தருளிஇருந்த முருகப்பெருமானை வழிபட்டாள். அப்பொழுது அவளது குன்மநோய் நீங்கியது. அக்கோயிலில் வழிபாடு செய்துவந்த பெரியவர், அப்பெருமானது சிறப்புகள் குறித்து எடுத்துக் கூறினார். அதுகேட்ட மருதப்புரவல்லி தாம் கற்கோயில் அமைக்க விரும்புவதாக அப்பெரியவரிடம் கூறினார். அதுகேட்டு, அப்பெரியவரும் மகிழ்ச்சி அடைந்தார்.

பின்னர் தன்இருப்பிடம் (இலங்கையில் தாம் தங்கிஇருந்த இடம்) வந்துசேர்ந்த மன்னன் மகள், தன் தந்தையாருக்கு, 'திருக்கோயில் திருப்பணி' குறித்து ஓலை வழி செய்தி அனுப்பினாள். அதுகண்ட அரசன், சோழ நாட்டிலிருந்து சிற்பிகள், உருவச்சிலை, சிவாச்சாரியர், வேண்டும்பொருள்கள் என அனைத்தும் அனுப்பி வைத்தார். பொருள்கள் காங்கேசன் துறைக்கு வந்துசேர்ந்தன. மருதப்புரவல்லி, தாமே முன்நின்று, திருக்கோயில் திருப்பணி செய்து, திருக்குடநீராட்டும் முடித்து, வழிபாட்டுச் செலவுக்காக நன்செய் புன்செய் நிலங்களை மானியமாக ஈழத்திலும், சோழநாட்டிலும், வழங்கி மீண்டார். அவ்விடம் இப்பொழுது, 'மாவிட்டபுரம்' என்று வழங்கப்படுகிறது.

4. கோவை நகரப்பகுதியில் வாழ்ந்துவந்த இசுலாமிய அன்பர்கள், சாந்தலிங்கரது மாணவர் ஒருவரிடம் மிகுந்த அன்புடையவராய், நாள்தோறும் அவரைக் கண்டு, அளவளாவி வந்தனர். அவர் திருவருட்பேறு எய்தும்நிலை வந்துற்றது. அப்பொழுது இசுலாமிய அன்பர்கள் அவர்க்குத் தாங்களே சமாதி அமைப்பதாக

வேண்டினர். அத்துறவியும், 'நீங்கள் அமைக்கும் சமாதியில் திருநீறு வைத்துப் பேணவேண்டும்' என்றார். அதன்படி அவர்க்குச் சமாதி அமைத்து, இன்றளவும் திருநீறு வைக்கும் அம்முறை பேணப்பட்டு வருகின்றது. அது கோவை நகரின் பெரியகடை வீதியில் 'கோரி' என்ற பெயரில் வழங்கி வருகிறது.

திருவருள்கலப்பு எய்துதல்:

இவ்வாறு, பலஅருளிச் செயல்கள் புரிந்தும்; 1. கொலை மறுத்தல்; 2. வைராக்கிய சதகம்; 3. வைராக்கிய தீபம்; 4. அவிரோத உந்தியார் என்னும் நான்கு ஞானநூல்களைப் பாடியும்; அருளாட்சி செய்துவந்த சாந்தலிங்க அடிகளார் ஒரு மாசித்திங்கள், மகம்நாளில், சமாதியடைந்து, தமது வழிபடு கடவுளாகிய கூத்தப்பெருமான் திருவருளில் கலந்தார்.

(இந்த வரலாற்றுச் செய்திகள், பேரூர்த் திருமட வெளியீடாக வந்துள்ள 'தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அருள்வரலாறு' என்னும் நூலிலிருந்து திரட்டப்பட்டவை).

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

குமாரதேவர் வரலாறு

முற்பிறப்பு:

குமாரதேவர், முற்பிறப்பில் ஒருதவமுனிவராய்த் திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) என்னும் மலையில் சிவபெருமானை நோக்கித் தவம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது வேறொருவரும், வேறொரு பக்கத்தில் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தார். சிவபெருமான் அவருடைய தவத்திற்கு இரங்கி, அவர்முன்னே தோன்றி, 'அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார். அவர் மனதில் ஒன்றை நினைத்து, வாயால் வேறொன்றைக் கேட்டார். இதுகண்ட சிவபெருமான் கோபம் கொண்டு, 'நீ மனதில் ஒன்றும் வாயில் ஒன்றும் உடையவனாய் இருப்பதால் சடாமுனியாகக் கடவாய்!' என்று சபித்தார்.

அத்தவசி, அச்சாபத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து, வணங்கி நின்று, 'சுவாமி! என் ஊழ்வினை வசத்தால் நான் நினைத்ததைக் கேளாமல் வேறொன்றைக் கேட்டுவிட்டேன்; இச்சாபம் இனி எப்பொழுது நீங்கும்?' எனக் கேட்டார். அதற்குச் சிவபெருமான், 'நீ முனியாகச் சென்று விருத்தாசலம் என்னும் தலத்தில்உள்ள மணிமுத்தா நதியின் கரையில் செழித்து வளர்ந் திருக்கும் அரசமரத்தில் இரு! அங்கு தவம் செய்து கொண்டிருக்கும் என்அன்பன் பின்ஒரு காலத்தில் கன்னட நாட்டில் அரசனாக அவதாரம் செய்து, சிலகாலம் அரசுபுரிந்து, பிறகு உலகவாழ்வில் வெறுப்புற்று, துறவு மேற்கொண்டு, பேரூர் என்னும் தலத்துக்குச் சென்று, சாந்தலிங்க அடிகளிடம் உபதேசம் பெற்று, அவரது கட்டளையை ஏற்று, விருத்தாசலம் என்னும் தலத்தை அடைந்து, நீ தங்கி இருக்கும் அரசமரத்தின்கீழ் வந்துதங்குவான். அப்பொழுது நீ அவன்முன் சென்று வணங்கினால், அவன் உன்னுடைய

சாபத்தை நீக்கிஅருளுவான்' என்று கூறினார். அதன்படி அந்தத் தவசி சடாமுனியாகி அந்த அரசமரத்தில் சென்று தங்கினான்.

குருநாதர் – சந்திப்பு:

குமாரதேவர் கன்னடநாட்டில் அரசகுடும்பத்தில் பிறந்து, சிலகாலம் அரசுசெய்து, பின்னர் துறவுபூண்டு, பேரூர்த் திருமடத்துக்கு வந்து, சாந்தலிங்கரைக் கண்டு, வணங்கி நின்றார். சாந்தலிங்கர் கையேட்டுத் தம்பிரானை நோக்கி, 'இவன் அரசனைப்போல் விளங்குகிறான்; இவன் துறவுநெறிக்குப் பொருத்தமானவன் அல்லன்; இவனை மீண்டும்போய் அரசாட்சி செய்யும்படி கூறி அனுப்பிவிடு!' என்றார். அதற்கு ஏட்டுத்தம்பிரான், உத்தம சீடனுக்கு உரிய பக்குவம் இவனிடம் காணப்படுகிறது என்பதைக் குறிப்பால் உணர்த்தி நின்றார்.

புல் அறுத்தல்:

அதன்பிறகு அடிகள், 'இவனை நம் எருதுகளுக்குப் புல் அறுக்கும் வேலையில் அமர்த்து!' என்றார். ஏட்டுத்தம்பிரான் அரிவாளும் கயிறும் கொடுத்துப் புல்அறுக்க அனுப்பினார். குமாரதேவர் வயலுக்குச் சென்று, இடக்கையினால் புல்லைச் சேர்த்துப் பிடித்து, வலக்கையால் அறுக்கும்போது, கையையும் சேர்த்து அறுத்துக்கொண்டார். இதுகண்டு அங்கு, புல்அறுத்துக் கொண்டிருந்த ஏனையோர், 'நீவிர் யார்?' என வினவினர். அதற்கு அவர், 'நான் சாந்தலிங்க அடிகளாருடைய எருதுகளுக்குப் புல்அறுப்பவன்' என்றார். இவரது தோற்றப்பொலிவு கண்டவர்கள், 'இவரோ அரசரைப்போல் இருக்கிறார்; இவருக்குப் புல்அறுத்துப் பழக்கமில்லை; எனவே இவருக்கான புல்லை நாமே அறுத்துக் கொடுப்போம்' என எண்ணி, புல்அறுத்துக் கட்டுக் கட்டி, அவர் தலைமேல் ஏற்றி வைத்தனர். அதனைச் சுமந்து நடக்கவும், அவருக்குத் தெரியவில்லை. எனவே உடன்இருந்தோர் அந்தப் புல்கட்டைச் சுமந்து, எருது கட்டியிருக்கும் இடத்துக்குக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போயினர். குமாரதேவர் அதை எடுத்து, எருதுக்குப் போட்டார். இவ்வாறு இரண்டு நாட்கள் நடந்தேறின.

மூன்றாவது நாள், புல்அறுப்போர் ஏட்டுத்தம்பிரானிடம் இதுகுறித்துக் கூறினர். அவர் இதனைச் சாந்தலிங்கருக்குத் தெரிவித்தார். அதுகேட்ட அடிகள் குமாரதேவரை அழைத்து கோபிப்பவர்போலக் காட்டிக்கொண்டார். குமாரதேவர் உண்மை யாகவே அஞ்சி ஒதுங்கி நின்றார்.

சோறு சுமத்தல்:

அன்றுஇரவு அடிகள், ஏட்டுத்தம்பிரானை அழைத்து, 'எனக்கும் குமாரதேவனுக்கும் தனித்தனியே கட்டுசோறு கட்டி, ஒருதண்டத்தில் முடிந்து, அவனிடம் கொடுத்து, அவனை என்னுடன் அனுப்பிவை!' என்றார். அடிகளாரின் கட்டளையைத் தம்பிரான் நிறைவேற்றினார்.

சாந்தலிங்கர் முன்னே நடக்கக் குமாரதேவர் சோற்றைச் சுமந்தபடி பின்னே சென்றார். சிறிதுதூரம் கடந்தபின், அடிகள் வேண்டுமென்றே வேகமாக நடந்தார். குமாரதேவரால் ஈடுகொடுத்து நடக்க முடியவில்லை. அப்பொழுது அடிகள் திரும்பிப் பார்த்து, 'ஏன் தாமதம்?' என அதட்டினார். குமாரதேவர் பயந்து, 'சுவாமி! ஒரு பக்கத்தில் அச்சுலிங்கமும், மறுபக்கத்தில் கணாயுத்தமும், ஆகச் சுமை என்னை இழுத்து, நடக்க ஒட்டாமல் தடுக்கிறதே!' என்றார். அவர் நிலைகண்ட சாந்தலிங்கர், அங்கிருந்த குளக்கரையில் தங்கி, குமாரதேவரையும் அமரச்செய்து, இரண்டு மூட்டையிலும் உள்ள சோற்றையும் ஒன்றாக்கிப் பின், பரிமாறும்படி பணித்தார். அவ்வாறே பரிமாற அடிகள், தமக்குத் தேவையான அளவு உண்டு, மிச்சஉணவை குமாரதேவரை உண்ணுமாறு செய்தார். பின்னர் இருவரும் சிறிதுநேரம் அளவளாவிப் பின் திருமடத்துக்குத் திரும்பினர். சிலநாட்கள் சென்றபிறகு குமாரதேவர், அடிகளிடம் ஆசிபெற்று, யோக சாதனைகளில் ஈடுபடலானார்.

இறைவர் தண்ணீர் தருதல்:

அச்சாதனையில் குமாரதேவர் முதிர்ச்சி பெற்ற பிறகு, ஒருநாள் அடிகள், 'மகாராசா!' என்று அழைத்து, 'நீ விருத்தாசலம் செல்வாயாக!' என்று கட்டளையிட்டார். அவரும் ஆசிரியரின் ஆணையை ஏற்று விருத்தாசலத்துக்குப் புறப்பட்டுப் போனார்.

வழியில் சின்னசேலம் என்னும் ஊருக்கு அருகில் காட்டுவழியே நடந்து செல்லும்போது, பழமலைநாதர், ஓர் அந்தணர் வடிவந் தாங்கித் தண்ணீர்ப்பந்தல் வைத்துக் காத்திருந்தார். அதன்அருகில் குமாரதேவர் வந்தவுடன், 'அப்பனே! நீ தாகத்தால் சோர்ந்து போயிருக்கிறாய்; நீர் அருந்திவிட்டுச் செல்லலாமே!' என்று உபசரித்தார். அதனை வாங்கிப் பருகித் தாகம் தீர்ந்து, விருத்தாசலம் வந்துசேர்ந்து, மணிமுத்தா நதியின் கரையிலிருந்த அரசமரத்தின்கீழ் படுத்து அலுப்புத்தீர உறங்கினார்.

இறைவி பால் தருதல்:

அப்பொழுது அத்தலத்து இறைவி பெரியநாயகி அம்மையார், திருமஞ்சனத்துக்காக பொற்பாத்திரத்தில் வைத்திருந்த பாலை எடுத்துக்கொண்டு, ஓர் அந்தணப் பெண்ணாய் வந்து, குமாரதேவரது தலைப்பக்கம் அமர்ந்து, அவர் தலையைத் தம்மடிமீது இருத்தி, பாலைப் புகட்டினார். சோர்வு நீங்கிக் கண்விழித்த குமாரதேவர், 'அம்மா! நீ யார்?' என்று கேட்டார். 'அப்பா, குமாரதேவனே! நான்தான் பெரியநாயகி; நீ எப்பொழுதும் இத்தலத்தில் மகிழ்வுடன் இருக்கவேண்டும்!' என்று கூறி மறைந்தார். அம்மையின் அருளை வியந்து, குமாரதேவர் இன்பத்தில் திளைத்தார்.

சடாமுனி சாபம் நீக்கல்:

அப்பொழுது சிவபெருமானது சாபத்தால் அம்மரத்தில் தங்கிஇருந்த முனி, அந்தண வேடம்கொண்டு குமாரதேவர் முன்வந்து வணங்கி நின்றது. குமாரதேவர், 'நீ யார்?' என்று வினவ, முனி தன்வரலாற்றை எடுத்துரைத்தது. அதுகேட்ட குமாரதேவர், முனியின் சாபத்தை நீக்கிஅருளினார். அதன்பின்னர், அவர் குமாரதேவரின் கைப்பிச்சை உணவினை வாங்கிஉண்டு, அங்குத் தங்கி இருந்தார்.

அம்மன் சந்நிதி திருப்பணி:

அக்காலத்தில், அவ்வூரில் இருந்த இல்லறத்தான் ஒருவன், குமாரதேவரது பெருமைஅறிந்து, நாளும் வந்து, அவரை அன்போடு கண்டு வணங்கி வந்தான். அதனால் அவனுக்கு வாழ்வில்

எல்லா நலன்களும் உண்டாயின. ஒருநாள் அவன் குமாரதேவரைக் கண்டு வணங்கி, 'சுவாமி! ஏதேனும் ஒரு திருப்பணி செய்ய இந்த அடிமைக்குக் கட்டளை இடுங்கள்!' என்று வேண்டினான். அவர், 'பெரியநாயகி சந்நிதியில் ஒரு மண்டபம் கட்டிவை!' என்று கட்டளைஇட்டார். அவன் அவ்வாறே மண்டபம் கட்டினான். ஒருநாள் மண்டபத்தின்மேல் உத்திரக்கல் ஏற்றும் பணி நடைபெற்றது. அந்தக் கல்லை மேலே ஏற்றமுடியாமல் பணியிலிருந்தவர் துன்பப்பட்டனர். அதுகண்டு அந்த இல்லறத்தான் கவலையுடன் குமாரதேவரிடம் வந்தான். அவர் திருநீறு கொடுத்து, 'இதனை அக்கல்மேல் போட்டுத் தூக்குங்கள்' என்று கட்டளை இட்டார். அதன்படி செய்யக் கல் எளிதாக மேல்ஏறியது. அவன் மண்டபத்தை நல்ல முறையில் கட்டி முடித்துக் குமாரதேவரைப் புகழ்ந்துபேசி, அவ்விடம் விட்டுச்சென்றான்.

சமைத்தமீன் உயிர்பெறல்:

பின்னர் ஒருநாள் குமாரதேவர், ஒருவீட்டு வாயிலுக்குச் சென்று பிச்சைக்குக் கையேந்தினார். அவரது பெருமை அறியாத அவர்கள், சமைத்து வைத்திருந்த சோற்றோடு, குழம்பிலிருந்த மீனையும் சேர்த்துக் கையில் கொடுத்தார்கள். அதனை ஏந்திய படியே குமாரதேவர், ஒருகுளத்தின் அருகே செல்ல, சமைத்தமீன் உயிர்பெற்று குளத்தில் குதித்தது.

குட்டநோய் நீக்குதல்:

மேலும், குட்டநோயாளி ஒருவன், தன் நோய்த்துன்பம் தீரவேண்டும் என்று நாளும்வந்து, குமாரதேவரை வழிபட்டுச் சென்றுகொண்டிருந்தான். ஒருநாள் அவனது வேதனை மிகுதியாக, அவர் காலில் விழுந்து, கதறி அழுதான். அவனைப் பார்த்து, 'அப்பா! நான் வைத்தியன் அல்லன்; என்னால் என்ன செய்ய முடியும்?' என்றார். அவன், 'சுவாமி! உங்கள் கையால் திருநீறு கொடுத்தால் நோய் நீங்கும்!' என்றான். அவரும் மனம்இரங்கி, அவனுக்குத் திருநீறு அளித்து, அதனை இடக்கையில் வைத்து, வலக்கையால் மூடுமாறு கூறினார். பின்னர் பழமலைநாதர் சந்நிதியில் ஒரு மாடத்தில் இருக்கும் விநாயகர் குறித்து எடுத்துக்

கூறி 'நீ அந்த விநாயகர் முன்சென்று, இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு நின்று, அப்பொழுது நிகழும் அதிசயத்தை என்னிடம் வந்து கூறு' என்று கட்டளைஇட்டார். அவன் அவ்வாறு சென்று நின்றான். அப்பொழுது அவனுக்குச் சிறிதே அறிதுயில் வந்தது. அந்நிலையில் விநாயகர் தம் கையை நீட்டி, அந்த விபூதியைத் தொட்டதாக ஒரு தோற்றம் கண்டான். உடனே விழித்துத் தான்கண்ட அக்காட்சியைக் குமாரதேவரிடம் எடுத்துச் சொன்னான். அவரும் மகிழ்ந்து, திருநீற்றைத் தொட்டுத் தாம் தரித்துக்கொண்டு, அவனையும் தரித்துக்கொள்ளும்படி கூறினார். அவனும் அவ்வாறே அந்தத் திருநீற்றை, அன்று தொடங்கி நாள்தோறும் தரித்து வந்தான். சிலநாளில் அவனது குட்டநோய் நீங்கியது.

தேர் செல்லப் பணித்தது:

வேறொரு சமயம், குமாரதேவர் திருவாரூரில் நடைபெற்ற பெருந்திருவிழாவிற்குச் சென்றிருந்தார். தேர் மாடவீதியில் உலாவரும்போது, தியாகேசப் பெருமானைக் கண்டு, கும்பிட்டுத் தோத்திரம் செய்தார். இதுகண்ட சித்தாந்த சைவர் இருவர், 'வீரசைவ மருளைப் பார்த்தீர்களா?' என்று தங்களுக்குள் ஏளனமாகப் பேசிக்கொண்டனர். இதுகேட்ட குமாரதேவர், 'பெருமானே! வீரசைவம் மருளாயின் தேர்நடக்க, வீரசைவம் அருளாயின் தேர்நிற்க!' என்று கூறினார். உடனே தேர் நின்றுவிட்டது. குமாரதேவர் சற்றுதொலைவில் இருந்த ஒருமர நிழலில் சென்று அமர்ந்துகொண்டார். எவ்வளவோ முயன்றும் தேர் நகரவில்லை. அக்கோயிலின் அறங்காவலராக அப்போதைய தஞ்சை மன்னன் இருந்துவந்தான். அவன் தேர்த்திருவிழா அன்று, தேர் நிலைக்குவந்த பிறகே, உணவு உண்ணும் வழக்கம் உடையவன். செய்தி கேட்ட அரசன், தேரை நகர்த்த அன்று மாலைவரை, எவ்வளவோ முயன்றுப் பார்த்தான். தேர் சற்றும் நகரவில்லை. அதற்கான காரணத்தை ஒருவாறு அறிந்த அரசன், குமாரதேவரை அணுகி, தேரை ஓடச்செய்ய வேண்டும் என்று கெஞ்சினான். குமாரதேவர், 'இந்த மருளனிடம் உங்களுக்கு என்னவேலை? இவனால் உங்களுக்கு என்ன ஆகப்போகிறது? நீங்கள் செல்லலாம்!' என்றார். 'சுவாமி! தாங்கள் பிழைபொறுத்து தேர்செல்ல அருள

வேண்டும்!' என்று அரசன் பலமுறையும் வேண்ட, மனமிரங்கி, தேர்முன் சென்று நின்று, 'தியாகராசப் பெருமானே! வீரசைவம் அருளாயின் தேர்நடக்க, மருளாயின் தேர் நிற்க!' என்றார். உடனே தேர்ஓட ஆரம்பித்தது. தேர் நிலைக்கு வந்தது; மக்கள் அதிசயித்தனர்.

காளிக்கு அருளுதல்:

அதன்பிறகு குமாரதேவர், விருத்தாசலம் சென்று, தாம் முன்பு தங்கிஇருந்த அரசமரத்தின்கீழ் மீண்டும் தங்கினார். அப்பொழுது வேற்றுநாட்டு மாந்திரீகன் ஒருவன் விருத்தாசலத்தில் எழுந்தருளி இருக்கும் காளியை வசப்படுத்தும்பொருட்டு வந்துகொண்டிருந்தான். அதனை அறிந்த காளி, ஒருபெண் வடிவில் வந்து, குமாரதேவரை வலம்செய்து, வணங்கி நின்றாள். குமாரதேவர், 'நீ யார்?' என வினவினார். 'சுவாமி! நான் பத்திரகாளி; ஒரு சண்டாளன் என்னைத் தன்வசப்படுத்த நினைத்து வந்துகொண்டிருக்கிறான்; அதற்கு பயந்தே நாம் உம்மிடம் வந்தோம்' என்று சொன்னாள். இதுகேட்ட குமாரதேவர், 'இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார். அதற்குப் பத்திரகாளி, 'தங்களது திருவடிகளை என்தலைமேல் பதித்தால், எனக்கு வரஇருக்கும் ஆபத்து நீங்கும்' என்று கூறினாள். அதற்கு இசைந்த குமாரதேவர், காளியின் சந்நிதிக்கு வந்து, காளி திருவுருவின் தலைமேல் தன் திருவடியைப் பதித்தார். அப்பொழுது அந்த மாந்திரீகனின் கண்கள் இரண்டும் பார்வை இழந்தன. இது நிகழ்ந்ததும், அந்த மாந்திரீகன், சுதாரித்துக்கொண்டு, 'இங்கு யாரும் பெரியோர்கள் (ஞானிகள்) இருக்கிறார்களா?' என அருகிலிருந்தவர்களிடம் விசாரித்தான்.

மாந்திரீகன் மனம் திருந்தியது:

அங்கிருந்தோர் குமாரதேவர் குறித்து எடுத்துக் கூறினர். அவன் குமாரதேவர் இருக்கும் இடத்தைக் கேட்டறிந்து, அவர்முன் வந்து, அவரை வணங்கி நின்றான். அவனை நோக்கி, 'நீ யார்?' எனக் குமாரதேவர் வினவினார். அவன் தன்னைப்பற்றிக் கூறி, தனக்கு நேர்ந்த துன்பத்தையும் போக்கி அருளவேண்டும்' என்று வேண்டினான். அதற்கு குமாரதேவர், 'நீ இந்த உடம்பு இருக்கும் வரை, மாந்திரீகத்தைக் கைவிடுவதாக உறுதி கூறினால், ஒருகண் பார்வைமட்டும் மீள அருள்புரிவோம்' என்றார். 'அப்படியே

செய்கிறேன்' என்று கூறிய அவன், அவரது திருவடியில் வீழ்ந்து வணங்க, ஒரு கண்ணில் மட்டும் பார்வை வந்தது. அவனும் ஒருகண் பார்வையுடன் தன்ஊர் போய்ச் சேர்ந்தான்.

சிதம்பரம் பிள்ளை சந்திப்பு:

இன்னொரு சமயத்தில் இல்லறத்தான் ஒருவன், தனக்குப் பிள்ளைப்பேறு இல்லாமை குறித்து வருந்தித் தன் மனைவியுடன் வந்து, நாளும் குமாரதேவரை வணங்கிச் சென்றான். ஒருநாள் குமாரதேவர் அவனை அழைத்துத் திருநீறு அளித்தார். அதன்பயனாய் அவருக்கு இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தனர். உரிய பருவத்தில் அப்பிள்ளைகளுக்குக் கல்வியளிக்க முற்பட்டனர். இலக்கணப்பாடம் கற்பிக்க மதுரையிலிருந்து சிதம்பரம்பிள்ளை என்பவரை அழைத்து வந்தனர். அதன்படி சிதம்பரம்பிள்ளை அவர்கள், அந்தப் பிள்ளைகளுக்கு இலக்கணப்பாடம் சொல்லிக் கொண்டிருந்த போது, குமாரதேவர் பிச்சைஏற்கும் பொருட்டு, அந்த வீட்டுக்கு வந்தார்; சிதம்பரம் பிள்ளை மிகுந்த இறுமாப்பு கொண்டிருப்பதைக் கண்டார். அவரைத் தடுத்து ஆட்கொள்ள விரும்பியவர், ஒரு வாக்கியத்தைக் கூறி இதன் பொருள் யாது என வினவினார்; பொருள் கூறமுடியாமல் திகைத்த சிதம்பரம் பிள்ளையவர்கள், 'தங்கள் பெருமை அறியாதவனாய் இறுமாப்பு கொண்டேன்; என்னை மன்னித்து அருளவேண்டும்' என வேண்டினார். குமாரதேவர் அவரை மன்னித்து ஏற்றுக்கொண்டார். சிதம்பரம்பிள்ளையும் துறவு மேற்கொண்டு, குமாரதேவருடன் தங்கினார்.

இருவரும் பேரூர் வருதல்:

அவரைத் தன்னுடைய ஆசிரியரிடம் அறிமுகம் செய்து வைக்க விருப்பம்கொண்ட குமாரதேவர், சிதம்பரம் பிள்ளையை அழைத்துக்கொண்டு, பேரூருக்கு வந்தனர். ஒரு விடியற்காலை நேரம் மடத்தருகே இருவரும் வந்துசேர்ந்தனர். அப்பொழுது கையேட்டுத் தம்பிரான் வெளியில்வர, அவரிடம், அடிகளின் நிலை என்ன? என வினவினார். 'அவர் நிட்டை கூடி இருக்கிறார்' என பதில் வந்தது. குமாரதேவர் சாணிச்சட்டியை எடுத்து, மெழுகும் பணி செய்தார். சிதம்பரம்பிள்ளை திருஅலகு எடுத்துப் பெருக்கும் பணிசெய்தார்.

அடிகள் நிட்டை கலையும் சமயம் அறிந்து, இருவரும் முன்சென்று நின்றனர். கண்விழித்த அடிகள் 'உன் அருகில் நிற்பவன் யார்?' என வினவினார். அதற்குக் குமாரதேவர், 'இவன் தென்னாட்டுச் சைவன்' என்று விடை கூறினார். 'இவனை இங்கே ஏன் அழைத்து வந்தாய்?' எனச் அடிகள் கேட்க, குமாரதேவர் அதற்குப் பதில் எதுவும் கூறாது இருந்துவிட்டார். இரண்டு நாட்கள் கழிந்தன. இவரது நடவடிக்கைகள் கண்டு, ஏட்டுத் தம்பிரான் அடிகளாரிடம், 'இவன் மிகுந்த ஒழுக்கம் உடையவனாக இருக்கிறான்; இவனைத் தாங்கள் திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ள வேண்டும்' என்று கேட்டார்.

சிதம்பரம் பிள்ளையை மாணவனாக ஏற்றது:

அதற்கு அடிகள், 'நமக்கு இருக்கிற சந்ததி (குருவழி சீடன்) போதும்; சந்நதிக்கு சந்நதி இல்லாமல் இருக்கிறது; ஆதலின் இவனை அவ்வாறு ஆக்குதல் வேண்டும்' என்று கூறிவிட்டார். ஏட்டுத் தம்பிரான் அமைதியாய் இருந்துவிட்டார். அதன்பிறகு இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றாம்நாள் அடிகள், குமாரதேவரை இருப்பிடம் செல்லுமாறு பணித்தார். குமாரதேவர் சிதம்பரம் பிள்ளையைச் சுட்டிக்காட்டி, 'இவன் இங்கே இருக்க அனுமதிக்க வேண்டும்' என வேண்டினார். அதற்கு அடிகள், 'இவனை நீயே அழைத்துச் செல்! அவனுக்குச் சரியான பக்குவம் வந்தவுடன், நான் உனக்கு உபதேசித்ததை, நீ இவனுக்கு உபதேசம் செய்!' எனக் கட்டளை இட்டார். அதன்படி விருத்தாசலம் சென்று, உரிய பக்குவம் வந்த பிறகு ஞானஉபதேசம் செய்து, திருப்போரூருக்கு அனுப்பிவைத்தார்.

நூல்கள் பாடுதல்:

அதன்பிறகு குமாரதேவர் ஒருநாள் நிட்டைகூடி இருக்கும் சமயம் பெரியநாயகி அம்மை தோன்றி, 'குமாரதேவா! நீ சில சாத்திர நூல்கள் பாடவேண்டும்' எனக் கூறினார். அதற்குக் குமாரதேவர், 'என்னால் எப்படி முடியும்?' எனக் கேட்க, 'நானே உனது நாவில் நின்று செய்து முடிக்கிறேன்' என்று அம்மை அருள்செய்தார். அதன்படி குமாரதேவர் பதினாறு சாத்திர நூல்களைப் பாடி அருளினார். அவை: 1. மகாராசா துறவு; 2. சுத்தசாதகம்; 3. விஞ்ஞானசாரம்;

4. அத்துவித உண்மை; 5. பிரமானுபூதி விளக்கம்; 6. ஞான அம்மானை; 7. வேதாந்த தசாவத்தைக் கட்டளை; 8. வேதாந்த தசகாரியக் கட்டளை; 9. சகசநிட்டை; 10. உபதேச சித்தாந்தக் கட்டளை; 11. பிரமசித்தி அகவல்; 12. சிவ தரிசன அகவல்; 13. ஆகமநெறி அகவல்; 14. வேதநெறி அகவல்; 15. பிரமானுபவ அகவல்; 16. சிவசமரசவாத அகவல் என்பன. முடிவில் பெரியநாயகியம்மை பதிகமும் பாடினார்.

திருவருள்கலப்பு எய்துதல்:

இவ்வாறு பல அற்புதங்களும் ஞானநூல்களும் செய்தருளிய பிறகு, திருவருட்கலப்பு எய்தும் சமயம் நெருங்கிற்று. இரண்டாம் பட்டம் ரெட்டி சிதம்பர சுவாமிகள், 'சுவாமி! தாங்கள் திருவருட் கலப்பு எய்திய பிறகு, அடியார்கள் கண்டு கும்பிட்டு உய்யும் பொருட்டு, ஒரு திருப்பணி செய்ய அடியேனுக்கு உத்தரவு இடவேண்டும்' என்று விண்ணப்பித்தார். 'தாம் மறைந்த பிறகு தமது பெயர் உலகில் நிலைக்க வேண்டுமா? வேண்டாமே!' என எண்ணம் கொண்டவர், அவரது விண்ணப்பத்திற்கு விடை கூறாமலே, திருவருளில் கலந்தார். பின்னர், பெரியநாயகியம்மை கட்டளையிட, அதனை ஏற்றுக் குமாரதேவர் பெயரில் மடமும், கோயிலும் அமைத்து, ரெட்டி சிதம்பரம் அடிகளும், பின்னொரு நாளில் திருவருளில் கலந்தனர்.

(இந்த வரலாற்றுச் செய்திகள், குமாரதேவர் திருமட வெளியீடாக வந்துள்ள 'மகாராசா துறவு' எண்ன்னும் நூலிலிருந்து திரட்டப்பட்டவை).

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

சிதம்பரஅடிகள் வரலாறு

சாந்தலிங்கர் சந்திப்பு:

சிதம்பர கவிராயர் எனப்பெயர் பெற்ற இவர், மதுரையில் சங்கத்தமிழ்ப் புலவர் பரம்பரையில் வந்து பிறந்தவர். கொங்கு நாட்டுப் பேரூரில் எழுந்தருளி அருளாட்சி செய்துவந்தவரும், சிவப்பிரகாச சுவாமிகளது சகோதரி மகனும் ஆகிய சாந்தலிங்க குருவின் சீடர், கன்னட நாட்டில் புங்கனூரில் அரசுதுறந்து, துறவு மேற்கொண்ட குமாரதேவரால் ஆட்கொள்ளப்பட்டவர். குமாரதேவருடன் சேர்ந்து பேரூர் சென்று, சாந்தலிங்கரைக் கண்டபோது, இவரது புலமைநலம் கண்ட சாந்தலிங்க அடிகள், தாம் எழுதியருளிய கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் ஆகிய நான்கு நூல்களுடன், காழிக்கண்ணுடைய வள்ளல் என்பார் எழுதிய ஒழிவில்ஒடுக்கம் என்னும் ஒருநூலையும் தந்து, உரை எழுதுமாறு பணித்தார். இவற்றைக் குமாரதேவர் வாங்கிக் கண்களில் ஒத்திக்கொண்டு சிதம்பரகவிராயரிடம் கொடுக்க, அவர் அவற்றை வாங்கித் தலைமேல் வைத்து வணங்கி நின்றார்.

அப்பொழுது குமாரதேவர், இவனைத் தங்களின் மாணவனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்என்று ஆசானிடம் வேண்ட, 'எனக்கு, முன்னமே நீ மாணவனாக இருக்கின்றாய்; ஆதலால் இவனை நீ உனக்கு மாணவனாக்கிக் கொள்வாய்!' என விடையளித்தார்.

குமாரதேவரை ஆசானாக ஏற்றல்:

அதன்படி குமாரதேவர் சிதம்பரகவிராயருக்கு இருபத்தொரு விதமான தீக்கையும், வீரசைவ முறையில் இயமம் முதலிய அங்கயோகங்களையும் உணர்த்தி, ஞானஉபதேசம் செய்து, சமாதி கூட்டுவிக்க, அவரும் அவற்றை நன்குஉணர்ந்து, சமாதி கூடினர்.

அந்நிட்டையில் அவருக்கு, ஒருமயில் தோன்றி, தனது சிறகை விரித்து, தன்கோலத்தைக் காட்டி, நடனம் செய்ததைக் கண்டார். இதனை தமது குரு குமாரதேவரிடம் கூறினார். இதன் உட்பொருள் இன்னது என குமாரதேவர் அறிவர்; எனினும் அதனைக் கூறாது, உமது உபாசனாமூர்த்தியாய் உள்ளது எது? என வினவினார். அவர், மதுரை மீனாட்சி என்று விடை கூறினார். தமக்குப் பெரியநாயகி உயிர்த்துணையாய் இருந்து வருவதுபோல, உனக்கு அன்னை மீனாட்சி விளங்குகிறார். எனவே, நீ மதுரை சென்று, அந்த அம்மையை வழிபட, உமக்கு இதன் உண்மை விளங்கும் என்றார்.

மதுரை செல்லல்:

ஆசிரியரின் சொல்லை மீறமுடியாதவராய்ச் சிதம்பர கவிராயர், மதுரைக்கு எழுந்தருளி, 45 நாட்கள் கொண்ட (ஒரு மண்டல) காலஅளவில் தேவி காட்சி நல்காவிடில், பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி மாய்வேன் என்று உறுதிசெய்து கொண்டு, தேவியார் சந்நிதிக்கு எதிரில், நாளும் செய்யவேண்டிய வழிபாட்டுக் கடமைகளைச் செய்து, ஒரு பிடிஅளவு அறுகம்புல் கொண்டு பிழித்தெடுத்த சாறும், மூன்று கைஅளவு பொற்றாமரைக் குளத்து நீரும் ஆகிய இவற்றை ஒருநாளுக்கு ஒருவேளை மட்டும் உணவாகக் கொண்டு, நிட்டைகூடி இருந்தார். அப்பொழுது தேவியின் சோதனை காரணமாக, சுரம், கைகால்பிடிப்பு, சிரங்கு முதலிய நோய்கள் வந்து பொருந்தியது. தம்மால் எழுந்து நிற்கவும், அவ்விடம் விட்டு அசையவும் முடியாத நிலையிலும், சற்றும் மனம் தளராது, வழிபட வருவோரிடம் கூறி, அறுகும் நீரும் வருவித்து, உச்சிப்பொழுதில் மட்டும் அவற்றை அருந்தி, தமது விரதத்தைக் குறிப்பிட்ட நாளில் முடித்து, அம்மையின் அருளால் 'மீனாட்சி கலிவெண்பா' என்னும் ஒரு சிற்றிலக்கியம் (பிரபந்தம்) பாடி அருளினார்.

மீனாட்சி அருளுதல்:

அப்பொழுது அம்மை வெளிப்பட்டுத் தமது திருக்கரங்களால் சிதம்பர அடிகளைத் தடவிக் கொடுக்க, உடல் நோயும், மும்மல நோயும் விலகின. அப்பொழுது அம்மை, 'இங்கிருந்து வடதிசையில் முப்பதுயோசனை தூரத்தில் யுத்தபுரி என்றுஒரு சுப்பிரமணியத்தலம் உள்ளது; அது, இதற்குமுன் ஆறுமுறை மிகவும் விளக்கமாக

(பிரபலமாக) இருந்து, இப்பொழுது விளக்கம் குன்றி இருக்கிறது. உம்மால் அது மீண்டும் மக்களிடையே விளக்கம் பெறவேண்டி உள்ளது. அத்தல மூர்த்தியே உனக்குக் குருவாய் இருந்து காட்சி நல்கி, உண்மையை விளக்கும். அந்தக் கடவுள்தான், உமது நிட்டையில் மயிலாக வந்தது; அதனால் நீ உடனே புறப்பட்டு அத்தலத்துக்குப் போய்ச் சேருவாயாக!' என்று கூறிஅருளினார்.

இதுகேட்ட சிதம்பரதேவர், அடியேன் சிவஞானப்பேறு அடையும் எண்ணம் கொண்டிருக்க, என்னைத் திருக்கோயில் திருப்பணி செய்யப் பணிக்கலாமா? எனத் தன் மனக்குறையை முன்வைக்க, அதற்கு தேவியார், 'இன்று தொடங்கி 40 நாட்களுக்குள் முருகப்பெருமான் ஆசிரிய உருவில் வந்து, உமக்கு அருளுவார்; இது தவறினால் மேலும் பிறப்பு எடுக்கவேண்டி வரும்' என்றுகூறி மறைந்தார்; வேறுவழியின்றி சிதம்பரதேவர் அம்மையின் அருளாணை வழி திருப்போரூர் நோக்கிப் பயணம் மேற்கொண்டார். நிற்க.

திருப்போரூர் – சுயம்புமூர்த்தி:

அங்குத் திருப்போரூரில் முருகப்பெருமான் மறைக்கப்பட்டு, அவ்விடம் பனங்காடாக இருந்தது. அந்தக் காட்டில் ஒரு பெண்பனைமரத்தின் அருகில் சுப்பிரமணியர் புற்றிடங்கொண்டு மறைந்திருந்தார். அந்தக் காட்டின் கிழக்குப் பக்கத்தில் சிலர் பயிர்த் தொழில் செய்து, அங்கே வீடுகட்டி வசித்துவந்தனர். பனைமரங்கள் நிறைந்திருந்ததால் சான்றார் (மரம் ஏறுவோர்) சிலர் அம்மரங்களில் கிடைக்கும் பதநீர், நுங்கு, பழம், கிழங்கு முதலியவை கொண்டு பொருள் ஈட்டி வாழ்ந்து வருவாராயினர். அவற்றுள் ஒருபனைமரம் மட்டும் உயரமாகச் செழித்து வளர்ந்து, ஓலைக்கு ஒருபாளை அரும்பி, அதிகமான குலைகள் தள்ளிப் பெரும்பயன் தந்துவந்தது. ஆனால் அம்மரத்தின் அடிப்பகுதியைச் சுற்றி ஊனாம்கொடிகள் சூழ்ந்து வளர்ந்திருந்தது. அதுகண்டு, ஒருசான்றான், அக்கொடிகளை வெட்டி அப்புறப்படுத்தி, மரம்ஏறி, பாளைகளைச் சிணுக்கறுத்து குடங்களைக் கட்டி வைத்து, மதுவினைப் பெற்றுப், பயனடைந்து வருவானாயினன். ஆனால் அந்த ஊனாம்கொடிகளை அந்தச் சான்றான், காலையில் வெட்டிவிட்டு வர, மாலையில் சென்று பார்த்தால், அவை முன்போலவே வளர்ந்து படர்ந்திருக்கும். அதனை அறுப்பதில் மிகவும் வருத்தமடைந்து, அவற்றை வேருடன் களைவது

என கருவிகளுடன், துணைக்கு ஆட்களையும் அழைத்து வந்தான். அவர்களின் துணைகொண்டு ஊனாங்கொடிகளை வேரோடு பறித்து, அவ்விடத்தை தூய்மைப்படுத்திக் கொண்டிருந்தான். அப்பொழுது அம்மரத்தின் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி ஓடி இருந்த ஒரு மூலவேரை, அரிவாள் கொண்டு வெட்ட, அங்குள்ள புற்றினுள் மறைந்து இருந்த முருகப்பெருமானின் திருமேனிமேல் பட்டு, அவ்விடம் சிவப்பாயிற்று. அதுகண்டு சான்றான் உட்பட அங்கிருந்தோர் அனைவரும் மயங்கி விழுந்தனர்.

மற்ற மரங்களில் ஏறித் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருந்த சிலர், இச்செய்தி கேட்டு, மரத்தை விட்டு இறங்கி, அவ்விடம் வந்து, மயங்கிக் கிடந்தவர் முகத்தில் நீர் தெளித்து, அவ்விடத்தை நன்கு சோதித்துப் பார்க்க. அங்குப் புற்றினுள் சுயம்புவாய் முருகப்பெருமான் எழுந்தருளி இருப்பதுகண்டு. அஞ்சி அன்பு மேலிடப் பெருமானை வணங்கி நின்றனர். மயங்கிக் கிடந்தவர்களும் எழுந்து, செய்திஅறிந்து வணங்கி நின்றனர். அதுமுதல் சான்றார் ஒன்றுகூடி, ஓர்ஏணிக்கு இவ்வளவு பணம் தருவது என முடிவு செய்து, அதன்படி நிதி பெற்றுக் கூரைவேய்ந்து, ஒருசிறுகோயில் அமைத்துப் பூசை செய்ய, ஓர் ஆதிசைவரை நியமித்தனர். அதன்படி சுவாமிக்குத் திருமஞ்சனம் செய்து கற்பூர தீபம் காட்டும்போது, வேறு காரணம் எதுவும் இல்லாமலே, கோயிலும் ஊரும் தீப்பற்றி எரிந்தது. இதுகண்ட ஆதிசைவன் ஓடிப்போனான்; ஊராரும் மிகுந்த அச்சத்தில் உறைந்து போயிருந்தனர். அதனால் முருகப்பெருமானுக்கு வழிபாடு நடைபெறாமல் இருந்தது.

சிவஞானபாலயர் – சந்திப்பு:

இங்கு சிதம்பரஅடிகள் விருத்தாசலம் வந்து, தமது ஆசிரியரைச் சந்திக்கச் சென்றவர், அவர் நிட்டையில் இருப்பது கண்டு, நிட்டை கலையத் தாமதமானால், அம்மையின் உத்தரவை நிறைவேற்றத் தாமதமாகுமே, என்று அஞ்சி, ஆசிரியரை வலமாக வந்து வணங்கிவிட்டுப் பயணத்தை மேற்கொண்டார். வழியில், பொம்மையபாளையம் என்னும் ஊரில் சதுரக்கள்ளிப் பாலை உணவாகக் கொண்டு வாழும் சித்தர் சிவஞானபாலய சுவாமிகளைக் கண்டு அளவளாவ விருப்பம் கொள்ள, அவரும் இதற்கு முன்பே சிதம்பரஅடிகள் குறித்து கேள்விப்பட்டு, சந்திக்க விருப்பம்

உடையவராய் இருக்க, சிதம்பரஅடிகள் வீதிவழியே செல்ல, அது விடியற்காலை நேரமாதலால், அவரும் குளக்கரைக்கு அருகில் எதிரில் வரச் சந்தித்து, மடத்தின் திண்ணையில் அமர்ந்து, பல்துலக்கியபடியே இருவரும் தொடர்ந்து எட்டுநாட்கள் உரையாடிக் கொண்டிருந்தனர். இருவரும் ஒருவருக்கொருவர் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அனுபூதிநிலை குறித்துப் பகிர்ந்துகொண்டனர். ஒன்பதாம்நாள் விடியற்காலை வாய்கொப்பளித்து, நீராடி, சிவபூசை முடித்து, உணவருந்தி விடைபெற்றுச் சிதம்பரஅடிகள் பயணம் மேற்கொண்டனர். அதன்பிறகு சிலநாளில் சிவஞானபாலய சுவாமிகள் மயிலாசலம் என்னும் தலத்தில் தமது குருமூர்த்தியாக விளங்கிய சுப்பிரமணிய சுவாமி சந்நிதியில் திருவருள்கலப்பு எய்தினர்.

மூதாட்டி தந்த கூழைப் பருகுதல்:

சிதம்பரஅடிகள் கிளியனூர் வழியே சென்று கொண்டிருந்த போது, அங்குள்ள சோலையில் பாவு தோய்ந்து கொண்டிருந்த செங்குந்தர் இனத்தாரிடம் பசிக்குச் சோறு கேட்க, அவர்கள் சற்றே காலதாமதம் ஆகும் என்றுகூற, இருவினை ஒப்பும், மலபரிபாகமும், உற்றுஇருந்த, ஒருமூதாட்டி, அடிகளைக் கண்டு, அன்பு மேலிட, அருகில்வந்து, கேழ்வரகுக்கூழ் கொண்டு உபசரிக்க, அதனை வாங்கிப் பருகி, அருள்நோக்கம் செய்து, அடிகள் புறப்பட்டனர். அந்த மூதாட்டி, அடிகள் பின்னே தொடர்ந்து செல்ல, திரும்பிப் பார்த்த அடிகள் 'ஏன் தொடர்கிறீர்?' என வினவ, 'தங்களுக்குப் பணிவிடை செய்து புனிதம் பெற விரும்புகிறேன்' என்றார். அதற்கு அடிகள், மதுரையில் அங்கயற்கண்ணி அருளியவாறு, 'யாம் திருக்கோயில் திருப்பணி செய்யும்பொருட்டுத் திருப்போரூருக்குச் சென்று கொண்டிருக்கிறோம்; நீ ஓராண்டு கழித்து அங்கு வருவாயாக!' என்று அருளிச் சென்றனர்.

திருப்போரூர் சேர்தல்:

அதன்பின்னர் அடிகள் மலை, காட்டாறு எனப் பலவும் கடந்து, திருப்போரூர் என்னும் பனங்காடு சூழ்ந்த அப்பகுதிக்குச் சென்று, வள்ளைப்பூடு நிறைந்த ஓர்ஓடையைக் கண்டு, அங்குச் செய்ய வேண்டிய வழிபாடுகளை முடித்துக்கொண்டு, அவ்வழியே போவோரிடம் இங்குக் கோயில் இருக்கிறதா? என வினவினார்.

அதற்கு அவர்கள், 'சுவாமி! மலைஅடிவாரத்தில் வேம்படி விநாயகர் கோயில் ஒன்று உள்ளது' என்றனர். இதுகேட்ட சிதம்பரஅடிகள், பிள்ளையார் சந்நிதிக்கு வந்து, இரண்டு நாட்கள் அங்குத் தங்கியிருந்தனர். அவ்வாறு தங்கி இருக்கும்போது, நீராடிப் பூசை முடிக்க, முன்பு கூறிய ஓடைக்குச் சென்றும், வந்தும் கொண்டிருந்தார்.

திருடர்களைத் திருத்துதல்:

மூன்றாம் நாள் மாலை அந்த ஓடைநோக்கி வரும்போது, கள்வர் சிலர், அடிகள் அணிந்திருந்த அணிகலன்களைப் பறித்துக் கொண்டு செல்லும்பொருட்டு, பதுங்கியிருந்து வெளிப்பட்டனர்; அப்பொழுது அவர்களது கண்பார்வை மறைந்தது; அஞ்சி நடுங்கிநின்ற அவர்களை நோக்கி அடிகள், 'நீங்கள் யாவர்?' எனக் கேட்டார். அதற்கு அவர்களும் தங்கள் நிலைகுறித்து, 'உள்ளபடி விடை கூறினர். இதுகேட்ட அடிகள், அணிகலன் முழுவதையும் கழற்றிக் கொடுக்கவும், அதனைப் பெறாதவராய், கண்பார்வை வேண்டும் என வேண்டிநின்றனர். அப்படியாயின், தாங்கள் இதுவரை இவ்வாறு சம்பாதித்த செல்வத்தில் குடும்பசெலவு போக, மிச்சம் வைத்திருக்கும் பணத்தை, முருகப்பெருமானுக்கு கொடுக்க உடன்படுவீராயின், அப்பெருமான் உங்களுக்குக் கண்பார்வை வழங்குவார் என்றார். அதன்படி அவர்களும் ஒப்புக்கொண்டு, அடிகளின் திருவடியில் வீழ்ந்து வணங்கப் பார்வை மீண்டது. சேமித்த பொருளைக் கொண்டு வாருங்கள் என்று கூறி, அனுப்பிவிட்டு, பனங்காட்டின் நடுவில் ஒருபெண்பனையின் மூலத்தில் சுயம்புவாய் எழுந்தருளி இருந்த சுப்பிரமணியரை வீழ்ந்து வணங்குதல் முதலியன செய்யாது, கண்டுவணங்குதல் (தரிசனம்) மட்டும் செய்து, வேம்படிப் பிள்ளையார் கோயிலில் தங்கியிருந்தனர்.

முருகன் – குருவடிவில் காட்சித் தருதல்:

அப்பொழுது ஒருநாள் முருகக்கடவுள் குமாரதேவரைப்போல எழுந்தருளி இருக்கக் கண்டார்; விரைந்து ஓடி அருகில் சென்று, வணங்கி நிற்க, ஆசிரியர், 'நீ ஏன் இங்குவந்து தங்கி இருக்கிறாய்?' எனக் கேட்டார். அதற்கு அங்கயற்கண்ணி அம்மையின் ஆணையை, விண்ணப்பம் செய்ய, அப்படியாயின் இருவரும் சேர்ந்து முருகப்பெருமானைக் கண்டு கும்பிடலாம் வருவாயாக! என

குருநாதர் அழைக்க, உடன் செல்லும்போது, 'முற்காலத்தில் இக்கோயில் எவ்வளவு பெரியதும், பெருமைஉடையதுமாய் இருந்தது' எனக்கேட்டனர். அப்பொழுது ஆசிரியர், சிதம்பரதேவரின் நெற்றியில் திருவெண்ணீறு அணிவித்துக் கண்களால் பார்த்து, இப்பொழுது ஆலயம் முழுமையும் உன்காட்சிக்கு வரும் என்று சொன்னார். அதன்படி, சிதம்பரஅடிகள், கோயிலின் கருவறை, அந்தராளம், மகாமண்டபம், அனைத்து வாத்திய மண்டபம், தேவியார் சந்நிதி, மடைப்பள்ளி, திருமதில், கோபுரவாயில், மயில்மண்டபம், கொடிமரம், பலிபீடம், உள்சுற்று, மாடவீதி, மடாலயம், தீர்த்தம் முதலிய அனைத்தும், சிற்ப இலக்கணப்படி, மிகவும் சிறந்த முறையில் அமைந்திருந்தமை கண்டனர். தமது ஆசிரியர் அந்த ஆலயத்துள் புகுந்து, கருவறை அருகில் சென்று, 'அரஅர' எனச் சொல்லி மூலத்தானத்தில் நுழைவது கண்டனர். அங்குத் தமது குரு மூலவராக எழுந்தருளி இருக்கக் கண்டு, ஆசிரியர் திருவடிகளை வணங்கக் கீழே விழுந்து எழுந்தவர், ஆசிரியரைக் காணாது, பனைமரத்தின் மூலத்தில் முன்பு இருந்த வடிவம் மட்டுமே கண்டனர்.

கண் பார்வை தருதல்:

அதன்பிறகு கலிவெண்பாவால், "நெஞ்சுவிடுதூது" என்னும் ஒரு சிற்றிலக்கியம் பாடி விருத்தாசலம் குமாரதேவருக்குக் கொடுத்தனுப்பிவிட்டுத் தாம் விநாயகர் கோயிலில் முன்புபோலவே தங்கியிருந்தனர். அந்தக்கோயிலுக்கு வடக்கில் கண்ணுவப்பேடு என்னும் ஓர் ஊர் இருந்தது. அவ்வூரின் கிழக்கில் நீண்டநாட்களாய் குலால இனப் பெரியவர் ஒருவர் கண்பார்வை இன்றி வாழ்ந்து வந்தார். சிதம்பரஅடிகளின் பெருமை கேட்ட, அப்பெரியவரது பிள்ளைகள், வேம்படி விநாயகர் கோயிலில் ஒரு பெரியவர் இருக்கிறார். அவரைக் கண்டு வணங்கிக் கண்பார்வை பெறலாம் எனக் கூறினர். அதன்படி வந்து, அடிகளை வலம்கொண்டு வணங்கித் தம் குறையை எடுத்துச் சொல்ல, 'சுப்பிரமணியம்! நீ எண்ணியபடி இவருக்கு அருளுவாயாக!' எனச் சிந்திக்க, அவருக்குக் கண்பார்வை வந்தது. அவர் தமது சிறுகுடிலுக்கு அருகில் ஒருபுளியமரம் இருப்பதாகவும், அங்குவந்து தங்கலாம் என்றும் அடிகளிடம் வேண்டினார். அதன்படி அடிகள் அங்கு எழுந்தருளி, வேள்வி முதலியன செய்து, தங்கி இருந்தனர்.

பல நோய்கள் போக்குதல்:

மற்றொருநாள், திருப்போரூருக்கு வடகிழக்கில் இருந்த காலவாக்கம் என்னும் ஊரைச் சேர்ந்த முடவன் ஒருவன் வந்து அடிகளைக் கண்டு கும்பிட்டுத் திருநீறு பெற்று, நோய் நீங்கப் பெற்றான். இவற்றைத் தெரிந்து கொண்ட பலரும் சுரம், சூலை, வயிற்றுவலி, மகோதரம், காமாலை, குடல்வாதம், குட்டம், பெரும்பாடு, தலைவலி என்று பல பெருநோய்களைப் போக்கிக் கொள்ள அடிகளைக் கண்டு வணங்கித் திருநீறு பெற்று நோய்நீங்கப் பெற்றனர். இதனால் கொஞ்சம் காணிக்கையாக நிதி திரண்டது; அந்தக் கள்வர்களும் ஒப்புக்கொண்டபடி தம்மிடமிருந்த நிதியுடன் வந்து சேர்ந்தனர்.

திருப்பணி தொடங்குதல்:

அப்பொழுது அந்த ஊரில் வசித்து வந்தவர்களும் சான்றார்களும் சுவாமிகளின் பெருமை கேட்டு, அவரிடம் வந்து, கந்தசாமிக் கோயிலில் கற்பூர ஆரத்தி காட்ட ஊர் தீப்பற்றி எரிகிறது. அவ்வாறு நிகழாவண்ணம், தாங்கள் வந்து கோயிலைப் புனரமைத்து, நாள்வழிபாடு முதலியன நடக்க ஏற்பாடு செய்து, எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டினர். அதற்கு அடிகள் 'யாமோ பரதேசி, எம்மால் என்ன முடியும்? நிறைய பொருள் தேவைப் படுமே! அப்படி உங்களது வேண்டுகோளை ஏற்றுத் திருப்பணி செய்யத் தொடங்கினால், நீவிர் எந்தவிதத்தில் உதவுவீர்?' என வினவினார். அதற்கு அவர்கள் நாங்கள் இந்தக் கிராமத்தை ஆண்டவர் பெயரில் தந்துவிடுவோம், அத்துடன் வேண்டிய பணிகளையும் நாங்களே செய்வோம் என்றனர். அப்படியாயின் செய்யலாம்! என அடிகள் கூற, ஊரார் செப்பேட்டில் எழுதிக் கொடுத்தனர். அதன்படி பணிகள் தொடங்கின.

மூதாட்டி ஒருபொற்காசு தரல்:

ஊரார் செய்த உதவியும், வழிபடவரும் அன்பர்கள் செய்யும் உதவியும் கொண்டு, கருவறை கட்டத் தொடங்கினர். கிளியனூரில் அடிகளைச் சந்தித்த மூதாட்டி, தனக்கு வருமானம் இல்லையாயினும், திருக்கோயில் திருப்பணிக்குத் தம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டுமே என்று, செங்குந்தர் நூல் இழைக்கும்போதும், பாவு

ஓடும்போதும், புடவை நெய்யும்போதும், நிலத்தில் சிந்துகின்ற நூலிழைகளைப் பொறுக்கி, சிவத்தியானத்துடன் அதனை இணைத்துப் பாவு செய்து, புடவை நெய்து, விற்றதில் ஒருபொன் கிடைக்க, ஓராண்டு கழிந்துவிட்ட நிலையில், அம்மூதாட்டி அதனை எடுத்துக் கொண்டு திருப்போரூர் வந்து சேர்ந்தார். அடிகளைக் கண்டுத் தான் அரிதின் ஈட்டிய பொன்னைக் கொடுக்க, அதனைப் பெற்றவர், தமது திருக்கையில் ஏந்தி, தலையிலும், நெற்றியிலும், கண்ணிலும், தோளிலும், மார்பிலும், வைத்துவைத்து மகிழ்ச்சியால் ஆடி, அதனைக் கருவறையின் சிகர வேலைச் செலவுக்குப் பயன்படுத்தினர்.

திருக்குடமுழுக்கு செய்தல்:

அந்தச் சமயத்தில் வழிபாட்டுக்காக அங்கு வந்த சென்னைப்பாளையத்தா செட்டியார் என்பவர், இரண்டு பை வராகன் கொண்டுவந்து, அடிகளுக்கு முன்னே வைத்து, வணங்கி நின்றார். எட்டுநாட்கள் ஆகியும் அடிகள் அதனைக் கண்டுகொள்ளவே இல்லை. அதன்பின்னர் சற்று மனம்இரங்கியவராய் அடிகள், ஏவலாளர்களிடம் இந்நிதியை திருப்பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கட்டளைஇட்டார். இவைதவிர நாள்தோறும் வழிபட வருகின்ற அன்பர்கள் தரும் நிதியும் கொண்டு, கருவறை, அந்தராளம், மகாமண்டபம், மயில்மண்டபம், கொடிமரம், பலிபீடம் என இவை அமைத்து, மந்திரச் சிறப்புடைய யந்திரம் பதித்து, திருக்குடமுழுக்கு செய்து, நாள்வழிபாடு சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்தனர்.

திருக்குளத் திருப்பணி:

திருப்போரூர் தலத்தில் வசித்து, மலசலம் முதலிய கழிக்க விரும்பாத அடிகள், புளியமரத்தின் தென்கிழக்கில் தவம் செய்வதற்கு எண்ணி, சரசுவதிகூடம், பூசையிடம், ஒடுக்கஉறையுள் ஆகிய இவற்றை உருவாக்கி, அதன் வடபகுதியில் இருந்த சிறுகுளத்தைத் தடாகமாக்கி, அதன் மேல்பக்கம் மண்சுவர் எழுப்பித் தட்டோடு வேய்ந்து, ஒரு சிறிய ஆலயமாக்கி, அதில் விநாயகர் சிலையும், வேலாயுதமும் பிரதிட்டை செய்து, விநாயகருக்குச் சுந்தர விநாயகர் என்றும், தடாகத்திற்கு வேலாயுத தீர்த்தம் என்றும், பெயர் சூட்டினர்.

நூல்கள் பாடி முடித்தல்:

முன்னர் சுப்பிரமணியர் திருக்கோயில் திருப்பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போதே, திருப்போரூர்ச் சந்நிதிமுறை, பஞ்சாதிகார விளக்கம் ஆகிய நூல்கள் பாடி, முன்பு சாந்தலிங்க அடிகளாரிடம் பெற்றுவந்த ஐந்து நூல்களுக்கும் விருத்தியுரையும் செய்து முடித்தனர். கிளியனூர் அம்மையாருக்கு அருள்பாலித்து, ஞானம்மை என தீக்கைத் திருப்பெயர் சூட்டினார்.

அதன்பிறகு தாம் தங்கிஇருந்த இடத்திற்குக் கிழக்கிலும் வழித்தடத்துக்கு வடக்கிலுமாக இருந்த ஒரு சிறுகுளத்தைப் பெரிய வாவியாக்கி, அதற்கு 'வற்றாநீர்க்குளம்' எனப் பெயர்வைத்து, அதன் கரையில் நந்தவனம், தண்ணீர்ப்பந்தர் முதலிய திருப்பணிகள் செய்து, அதன் வடகரையில் ஆத்மார்த்த சிவலிங்கப் பிரதிட்டை செய்து, பூசித்து இருந்தனர்.

ஆனந்தந்து அழுந்தல் – பதவுரை :

ஒருநாள் ஞானம்மை, மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில், "புணர்ப்பது ஒக்க" எனத் தொடங்கும் 'ஆனந்தத்து அழுந்தல்' என்னும் தலைப்பிட்ட பகுதிக்குப் பொருள் எழுதி அருளவேண்டும் என்று விண்ணப்பம் செய்ய, அதற்கு அடிகள் ஒன்றும் விடை கூறாதிருக்க, அந்த அம்மை நாள்தோறும் இதுபற்றி எடுத்துரைக்க, ஒருநாள் அடிகள் மனம்இரங்கி, உரை எழுதத் தொடங்கினார். ஆனால் அது எழுத எழுத நீண்டுகொண்டே போக, முருகப்பெருமான் இவரது ஆசிரியர் வடிவில் எழுந்தருளி, 'இந்நூலைப் பாடிய மாணிக்கவாசகரே அதற்குப் பொருள் கூறாமல், சிற்றம்பலமே அதற்குப் பொருள் என்று காட்டி இருக்கவும், இப்பொழுது உரை எழுத, அது உரையில் அடங்குமோ?' என வினவ, அடிகள், 'இந்தப் பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்றவே, அவ்வாறு எழுதத் தொடங்கினோம்' என்று கூற, 'இந்த, ஒரு தலைப்புக்குப் பதவுரை மட்டும் கூறுக!' என்று கூறி மறைந்தனர். அதன்படி, பதவுரை மட்டும் அந்த ஒரு பகுதிக்கு மட்டும் அருள, அச்செய்தி அறிந்து ஞானம்மை பெரிதும் மகிழ்ந்தார். அதன்பின்னர் அந்த அம்மையார் நெடுநாள் இருந்து, ஓர் ஏகாலிகுலப் பெண்ணுக்கு தீக்கை அருளி,

ஆசியரியர் கட்டளைப்படி, கிளியனூர் சென்று, 'நிட்டானுபவம்' என்னும் ஒரு சாத்திர நூல் பாடி, திருவருளில் ஒடுங்கினார். சிலநாள் கழிந்து அந்த ஏகாலிப்பெண்ணும் ஒடுக்கமாயினர். அந்த இருவரது சமாதிகளும் கிளியனூரில் இருக்கின்றன.

சிவசங்கரர் வருகை:

இங்குச் சிதம்பரஅடிகள் பல அற்புதங்கள் செய்து, ஐம்பது ஆண்டுகளுக்கும் குறையாமல் இருந்துவந்தனர். அப்பொழுது சென்னை - பூவிருந்தவல்லி - கோவூரில் துளுவ வேளாள மரபில் தோன்றிய திரிபுராந்தக முதலியாரது மகன் சிவசங்கரர் என்னும் பெயருள்ள இளம்பிள்ளையைத் திருப்போரூர் முருகப்பெருமான் ஆட்கொண்டதால், அவர் சடை உடையவராய், தெய்வ மயக்கம் உற்று, ஓடியும், பாடியும், கூத்தாடியும், தீர்த்தங்களில் மூழ்கியும், திருநீறு பூசியும், மகிழ்ந்திருக்க, அதனை அறியாத தந்தை, வைத்தியர் மூலம் மணி, மந்திரம், மருந்து முதலியன கொண்டு நோய்நீக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். அது நீங்காமையால், திருப்போரூர் வந்து, அப்பெருமானைப் பலநாள் வழிபட்டும், அந்நிலையில் மாற்றம் உண்டாகாமை கண்டு, சிதம்பரஅடிகளின் பெருமைகளைக் கேள்விப்பட்டு, அவர் முன் சென்று முறையிட்டனர். அவர், 'பிள்ளையை முருகப்பெருமான் சந்நிதிக்குக் கொண்டு செல்லுங்கள்; அவர் துணை செய்வார்!' என்றார். அதன்படி சந்நிதிக்குச் சென்று, முருகப்பெருமானுக்குத் திருமஞ்சனம் முதலியன செய்து, கற்பூரதீபம் காட்டும்போது, அங்கு இருந்தவருள் ஒரு சிறுவன் ஆவேசமுற்று, 'உமது பிள்ளையை யாம் ஆட்கொண்டுள்ளோம். அதனால் அவன் உனது பிள்ளை அல்லன். அவனை எமது சந்நிதானத்தில் விட்டுவிட்டுச் செல்வாய்!' எனக் கட்டளை பிறப்பிக்க, பிள்ளையின் தந்தை மனம் மகிழ்ந்து, பிள்ளையைச் சிதம்பரஅடிகளிடம் ஒப்படைத்துவிட்டு ஊர் திரும்பினார்.

தீக்கை வழங்குதல்:

அதன்பிறகு அடிகள், அப்பிள்ளைக்கு வீரசைவ மரபுப்படி சிவலிங்கம் அணிவித்து (இலிங்க தாரணம்) தீட்சை வழங்கிச் சிவசங்கரத் தம்பிரான் எனப்பெயர் சூட்டித் திருநீற்றுப் பையும்,

வேலாயுதமும், ஒருதாம்பாளமும் தந்து, ஆலயத்திற்குச் சென்று, பிச்சை ஏற்றுத் திருப்பணி செய்யுமாறு பணித்தார். 'சுவாமி! அடியேனுக்கு ஒன்றும் தெரியாதே!' என்று பிள்ளை விண்ணப்பிக்க, அதற்கு, 'அப்பா! நீ, அங்கு வருவோர்க்கு ஆறுமுகம்துணை என்று கூறி திருநீறு தருவாயாயின், திருப்பணி தானே நடக்கும்' என்று விடை கூறினார். அவரும் அடிகளின் கட்டளைப்படி திருக்கோயிலில் நாள்வழிபாடும், சிறப்புவழிபாடும், பெருந்திருவிழாவும், என அனைத்தும் சிறப்பாக நடைபெறுமாறு செய்து, அங்கு இருந்து வந்தனர்.

சமாதி ஏற்பாடு:

இங்கு அடிகள் வழிபாட்டுமடத்தில் ஒடுக்கஉறையுள் வழியாக சுரங்கம் செய்வித்து, அதற்குத் தெற்குப்பக்கம் சமாதி உள்உறை கட்டுவித்து, அதில் நாள்தோறும் நிட்டைகூடி வருவாராயினர். வைகாசித் திங்கள் விசாக நாளில் முழுமதி திதியில் திருவருள்கலப்பு அடையப் போவது உணர்ந்து, அதற்கு முந்தைய நாளாகிய சுவாதியில் சிவசங்கரரை அழைத்து, 'அப்பா! இதுமுதல் இனி ஆண்டுதோறும் இச்சுவாதி நாளில் அடியார் வழிபாடும் (மகேசுவர பூசையும்); மறுநாள் விசாகத்தில் சுப்பிரமணியருக்கு பெருந்திருமஞ்சனமும் (மகாஅபிஷேகமும்) சுவாமியின் முகம்உள்ள உயரம்வரை திருப்பாவாடையில் சுத்தஅன்னம், பருப்பு, நெய், பால், தயிர், காய்கறிகள், பலகாரங்கள் எனப்பலவும் படைத்துத் திருஅமுது (நைவேத்தியம்) செய்வித்து, 1008 தேங்காய் உடைத்து, ஆராதனை செய்து வழிபட்டு வரவேண்டும் என்றும், அன்றைய நாளில் பிரணவ மலைத் தியாக கயிலாசநாதர் கோயில் முதலிய சந்நிதிகளுக்கும் திருமஞ்சனம் முதலியன முறையே செய்து வழிபடவேண்டும் என்றும்; மூன்றாம் நாள் தலவிநாயகர் வேம்படி விநாயகருக்கு பெருந்திருமஞ்சனம் முதலியன செய்வித்து முறைப்படி வழிபட்டு வரவேண்டும் என்றும்; கூறி, அன்றைய அடியார் வழிபாட்டை, உடன்இருந்து நடத்திக் காட்டினர். அடுத்தநாள், வைகாசி - விசாகம் - முழுமதி நாள் என்பதால் மாணாக்கரை ஆலயத்துக்கு அனுப்பி முன்பு பணித்தபடி திருமஞ்சனம் முதலியன செய்யச் சொல்லிவிட்டுத் தாம் வேலாயுத தீர்த்தத்தில் மூழ்கி, சிவவழிபாடு முடித்து, ஒடுக்க அறைக்குச் சென்று நிட்டை கூடினர். நிற்க.

சோணாசலர் வரலாறு:

திருவண்ணாமலையில் சோணாசலர் என்பார், 'தமக்கு அருணகிரி இறைவரே குருவாக வரவேண்டும்!' என்று, வைராக்கிய விரதம் மேற்கொண்டு, 30 வயது முதல் 90 வயதுவரை, நாளும் மலைவலம் (கிரிவலம்) வந்து கொண்டிருந்தனர். ஒருநாள் கோபுரவாயில் வழி உள்ளே நுழையும்போது, நீர்வேட்கை மேலிட, அண்ணாமலையார் அருளால் மயக்கமுற்றார். அப்பொழுது அண்ணாமலை இறைவர், ஓர் ஆதிசைவ அந்தணனாய் வந்து, கலயநீரை முகத்தில் தெளித்து, மயக்கம் போக்கி, இத்தீர்த்தத்தை உண்டு, தாகம் தணிப்பீர் என்றார். அதற்கு, 'இறைவரே குருவாக எழுந்தருளினாலன்றி மலைவலத்தின்போது, நீர் முதலியன அருந்தமாட்டோம்' என்றார். அதற்கு அந்த வேதியர், 'இந்தக் கலியுகத்தில் இது நடவாது; யாம் ஒன்று சொல்கிறோம்; கேள்; இங்கிருந்து கிழக்கு திசையில் கடற்கரைச் சாரலில் பிரணவசைலம் அருகில் போரூர் என்று ஒரு புண்ணியத்தலம் உள்ளது. அங்குச் சிதம்பர அடிகளார் என்று ஒரு பெரியவர் இருக்கிறார்; அவரும் நாளை விசாக முழுமதி நாளில் திருவருளில் கலக்க உள்ளார். அதற்குள் அங்குச் சென்று சேர்வாயாயின், உனக்குக் குரு உபதேசம் கிடைக்கும்' என்று கூறி மறைந்தார். வந்தவர், சிவபெருமானே என்பது அறிந்து, நீர்அருந்தி, வேட்கை தீர்ந்து, விரைந்து புறப்பட்டுப் போனார்.

சோணாசலர் வருதல்:

இதனை ஞானநோக்கால் கண்ட சிதம்பரஅடிகள், அவர் வரவை எதிர்பார்த்திருந்தார். சோணாசலர் அடிகளாரின் இருப்பிடம் கண்டு, வந்து வலம்செய்து, வணங்கி நின்றார். அடிகள் 'அப்பா! நீயார்?' என்றார். அதற்குச் சோணாசலர்,

நேரிசை வெண்பா

''எடுத்தசன னங்கதொறும் ஈன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பால்அனைத்தும் கூட்டில் - அடுத்துவளர்
பன்னாகத்(து) அணைதுயிலும் பாலாழி யும்சிறிதாம்
மன்னா சிதம்பர தேவா''

என்னும் குகைநமயச்சிவாயரது சீடர் குருநமச்சிவாயரது பாடலை விடையாகக் கூறினார். (இதுவரை எடுத்த பிறவிகளில் அவ்வத் தாய்மார் ஊட்டிய பால் முழுதையும் கூட்டிப்பார்க்க, திருமால் பள்ளிகொண்டிருக்கும் பாற்கடலின் பால்அளவு குறைவே) தன்னைச் சோணாசலர் இவ்வாறுதான் அடையாளப்படுத்திக் கொண்டார். மேலும்,

நெடிலடி விருத்தம்

"நவகுணமும் முக்குறும்பும் நவைகள்மற்று அனைத்தும்தீர்ந்து
பவகுணம் சற்றும் தாக்காப் பரமயோகி களாய்நின்ற
சிவகுணச் செல்வர் போற்றும் சிதம்பர தேவாஎன்தன்
அவகுணம் போக்கி ஆள்வது ஐயநின் கடனதாமால்"

என்று துதித்து நிற்க, அடிகளும் அவருக்குத் திருவருள் செய்தனர். மேலும் சோணாசலர்,

கழிநெடில்விருத்தம்

"யான்எனல் காணேன் பூரண அறிவின்
யாதினும் இருந்த பேரொளிநீ
தான்என நிற்கச் சுமந்துற என்னைத்
தன்னவன் ஆக்கவும் தகும்காண்
வான்என வயங்கி நின்றஐம் பூத
மார்க்கமா நெறிதந்து மாறாத்
தேன்என ருசித்துஉள் அன்பரைக் கலந்த
செல்வமே சிவபெரு மானே"

என்று தோத்திரம் செய்தனர்.

அப்பொழுது கந்தசாமி சுவாமியின் சந்நிதியில் பெருந்திருமஞ்சனம் முதலியன செய்து, பேரொளி வழிபாட்டுக்குச் சிதம்பரஅடிகளாரை எதிர்பார்த்து இருந்தனர். அவர் வராமையால் வழிபாட்டைத் தொடர்ந்தனர்.

இங்கு அடிகள் சோணாசலரை நோக்கி, 'அப்பா! யாம் பேரின்பப் பெருநிலையில் கலக்க இருக்கின்றோம். நீ, கற்பலகையால் வாய்தலை மூடி, தளம்படுத்து, நமது சிவசங்கரத்துக்கு இதனை

அறிவித்து, அவனது ஆராமையைத் தீர்த்து, எமது வேண்டுகோளைத் தவறாமல் சொல்லிப் பின்னர் நின்ஊருக்குப் போதுக!' எனப்பணித்து, அப்பொழுதே தமது பூசைப் பொருட்களுடன் நிலவறைக்குள் சமாதித் தானத்தில் இறங்கி, ஒடுக்கமுற்றனர்.

முருகன் திருவுருவில் மறைதல்:

அங்கு முருகக்கடவுள் சந்நிதியில், கற்பூரப் பேரொளி வழிபாடு நடந்துவர, சிதம்பரஅடிகளார் கைகளைக் கூப்பியவராய் சந்நிதியில் தோன்றி, மூலத்தானத்தில் சென்று மறைந்தனர். அதுகண்ட சிவசங்கரரும், வேதியர்களும், ஏனையோரும் அற்புதமும், அதிசயமும், ஆனந்தமும் உற்று 'அரஅர' என்று முழக்கிப் பரவசம் அடைந்தனர். சிவசங்கரர் பூசை முடித்து, ஆசிரியர் ஒடுக்கமுற்ற சந்நிதிக்கு வந்து,

கழிநெடில்விருத்தம்

''இக்கலி யுகத்தில் எழுந்தஎன் குருவே
இன்பமே அன்பினுள் நிறைந்த
முக்கனி ரசமே முதிர்சுவை அமுதே
மூதறி வேமறைப் பொருளே
சர்க்கரை யொடுகற் கண்டுஎன அருச்சிக்கும்
தயாளுவே தமியேன் தனக்குத்
துக்க சாகரத்தைத் தொலைத்தருள் புரிந்தாய்
தூயநீ எங்கு ஒளித்தனையே''

என்று தொடங்கிப் பல பாடல்களால் தோத்திரம் செய்திருக்கக் கண்டு, சோணாசலர் ஓடிவந்து, அவரை அழைத்துக் கொண்டுபோய், ஆசனத்து இருத்தி, ஆராமையை ஒருவாறு ஆற்றி, அடிகளார் கூறியவற்றை எடுத்துரைத்து, அமுது அருந்துவித்துத், தாமும் அமுது அருந்திப் பின்னர் திருவண்ணாமலை புறப்பட்டுச் சென்றனர்.

(இந்த வரலாற்றுச் செய்திகள், 1900-ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளிவந்துள்ள 'திருப்போரூர்த் தலபுராணச் சரிதச் சுருக்கம்' என்ற நூலில் இருந்து திரட்டப்பட்டவை).

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
சாந்தலிங்கர் நாண்மலர் வாழ்க

குருமரபு நான்மணிமாலை

காப்பு

குறள் வெண்பா

"எந்தக் கணத்திலும் சந்தக் கவிபாட
தந்திமுகன் தாளே தரும்".

அருஞ்சொற்பொருள்:

எந்தக் கணத்திலும் - எந்த ஒரு கணநேரத்திலும்; கவிபாட - கவிதை புனைய; சந்தக்கவி - எதுகை மோனை முதலிய தொடைகள் அமையப் பாடும் சந்த நயமுள்ள கவிதை; தந்தி - தந்தம்உடையது (யானை); தந்திமுகன் - யானைமுகன் (விநாயகப்பெருமான்).

பொழிப்புரை:

அடியேன் எந்த ஒரு கணத்தில் எதுகை, மோனை முதலியன அமைந்த சந்த நயமுடைய கவிதை பாட நினைத்தாலும், அந்தக் கணமே தமது திருவடியை எமக்குத் துணையாகத் தந்து முன்வந்து நிற்பவன், யானை முகமுடைய விநாயகப் பெருமானே ஆவன்.

நூல்

"திருவா வடுதுறையில் செம்பொருள்கண் டோங்கும்
குருநமச்சி வாயரருள் கூடத் - திருத்தில்லை
ஆதி சிவப்பிர காச ரருட்பணியால்
நீதிநிறை பூசைநிறைந் தே". (1)

அருஞ்சொற்பொருள்:

திருவாவடுதுறை - கும்பகோணத்துக்கு அருகிலுள்ள ஒருதலம்; செம்பொருள் - சிவமாம் செம்பொருள்; கண்டு ஓங்கும் - கண்டு அதனால் உயரும்; குருநமச்சிவாயர் - திருவாவடுதுறை ஆதீனத்தைத் தோற்றுவித்த குருமுதல்வர்; ஆதிசிவப்பிரகாசர் - குருநமச்சிவாயரது சீடர்; அருட்பணி - குருவருளாலும் திருவருளாலும் நிறைவேறிய ஒரு செயல். நீதி - நியதி (ஒழுங்கு).

பொழிப்புரை:

திருவாவடுதுறை என்னும் தலத்தில் எழுந்தருளி, மனைவி முதலிய உயிர்ச்சார்பும், நிலம் முதலிய பொருட்சார்பும், என இருவகைப் புறப்பற்றுக்களை விட்டு, உலகப்பொருள்கள் மேல் வைத்த ஆசைகளை விட்டு, ஐம்புல நுகர்வுகளை விட்டுச் செம்பொருளாக விளங்கும் சிவத்தைக் கண்டு, அதனால் தம் நிலையில் உயர்ந்து, குருவாய் விளங்கியவர் குருநமச்சிவாய மூர்த்திகள். அவரதுஅருள் (குருவருள்) கைகூடப் பெற்றமையால், மிகுந்த பெருமை பெற்று விளங்கியவர் ஆதிசிவப்பிரகாசர். அவருக்குக் குருவருளும் திருவருளும் துணைநிற்க, அவர் தில்லை (சிதம்பரம்) சென்று, அங்கு மேற்கொண்ட ஒருசெயல், ஆடல்வல்லானுக்குப் பூசை முறைப்படியும் தடையின்றியும் நடைபெற வழிசெய்தது. (ஆதி சிவப்பிரகாசர் வரலாறு பார்க்க).

“தேவே உனைஅன் புடன்நாளும்
பூசைசெய் தேனுமல்லேன்!
கோவே குருவேஎம் குன்றமே
கோதில் கொலைமறுத்தல்
பாவேய் பனுவ லொருநான்கும்
மெய்யுணர் பத்திமைசேர்
நாவால் தமிழில் உலகுய்யத்
தந்தருள் நற்றவனே” (2)

அருஞ்சொற்பொருள்:

தே - தெய்வம்; உனை - உன்னை என்பது இடைகுறைந்து நின்றது; பூசை - வழிபாடு. கோ - அரசன்; கோதுஇல் - குற்றம்இல்லாத; கொலை மறுத்தல் - சாந்தலிங்கர் அருளிய ஒருநூல்; பாவேய் - (பா + ஏய்) பாவொடு பொருந்தி (செய்யுள் வடிவில்); பத்திமை - அன்புடைமை; உலகு - உலகமக்கள்; 'கோதில்' என்பதை, 'பனுவல் ஒருநான்கும்' என்பதனோடு கூட்டி உரைக்க; பனுவல் - நூல்.

பொழிப்புரை:

(சாந்தலிங்க தேசிகரே!) எமது தெய்வமே! பேரூரில் அருளாட்சி செய்யும் குருவே! எமது குன்றமே! அடியேன் உம்மீது, அன்பு மிகுதியும் வைத்து, வழிபடாதவனாக இருந்துவிட்டேன் (உலகர் நிலையைத் தன்மேல் ஏற்றிக் கூறியது) ஆனால் நல்ல தவம் உடைய நீவிர், குற்றமற்ற கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்னும் நான்கு சாத்திர நூல்களைத் தமிழில் மெய்ப் பொருளை நன்கு உணர்ந்த அன்புமிக உடையவராய்ப் பாடி, உலகர் அதன் பொருளை நன்குணர்ந்து, சிவஞானம் கைவரப்பெற்று, உய்யும் வகையில் அருளியுள்ளீர்!

"தவநெறி வேண்டி மணிமுடி துறந்து
சாந்தலிங் கர்தமை நாடி
சிவமெனக் கண்டு தொண்டுகள் பலவும்
சிறப்புடன் செய்து செந்தமிழில்
உவப்புடன் சுத்தசா தகத்தை உணர்வுளோர்
போற்றிட உவந்தருள் முனிவ
அவத்தினில் வீணாள் கழித்திடா நெறியை
அருள்வீர சைவநன் மணியே" (3)

அருஞ்சொற்பொருள்:

தவநெறி - தவம் செய்ய ஏற்புடைய துறவுநெறி. மணிமுடி துறந்து - அரசபதவியைத் துறந்து; தமை - தம்மை என்பதன்

இடைக்குறை; சுத்தசாதகம் - குமாரதேவர் அருளிய ஒருநூல் ('தமிழில் சுத்தசாதகம்' என விதந்து ஓதியது, அவர் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்பதை அறிவிக்க என்க); அவத்தினில் - வீணாக (இங்கு இல்லற நெறியைக் குறித்தது); வீணாள் - நாட்களை வீணாக; கழித்திடா - கழித்திடாத; வீரசைவ நன்மணி - வீரசைவ நெறியில் நின்றவருள் ஒரு மாணிக்கமணிபோல ஒளிர்ந்தவர்.

பொழிப்புரை:

மகிழ்வுடன் தமிழில் சுத்தசாதகம் என்னும் ஒரு சாத்திரநூலை அறிஞர்கள் போற்றுமாறு அருளிய குமாரதேவ முனிவரே! இல்லறத்தில் இருந்து, வாழ்நாளை வீண்நாளாகக் கழிக்க விரும்பாத, வீரசைவ நெறிநின்ற, நல்ல மாணிக்கமணி போன்றவரே! நீவிர் அரசபதவியைத் துறந்து, தவம் செய்ய ஏற்புடையதாய் விளங்கும் துறவுநெறியை மேற்கொண்டு, அந்நாளில் பேரூரில் எழுந்தருளி இருந்த சாந்தலிங்க தேசிகர் மீது விருப்பம் கொண்டு, அவரைச் சிவமாகவே கண்டு, வணங்கித் திருமடத்தில் தங்கி, தொண்டுகள் பலவும் செய்து, சிறப்பு பெற்றீர்!

''மணியும் மருந்துமாய் மாசறு நீறால்
பணிபுரி வார்நோய் பலவும் அகலத்
திருப்பணி போரூர் செவ்வேட் கமைத்த
பெருமைசேர் செந்நெறிப் பேரருட் கவிஞ
சாந்தலிங் கர்நூல் தகும்உரை செய்த
ஏந்தலாம் சிதம்பர முனிஎனும் எந்தாய்
வாட்ட மகல மாண்புறு வண்டமிழ்க்கு
ஆட்படும் நன்னெறி எனக்கு அருளுதியே (4)

அருஞ்சொற்பொருள்:

மாசறு நீறு - குற்றமற்ற திருநீறு; பணி - தொண்டு; போரூர் - திருப்போரூர் என்னும் பெயரில், சென்னை நகருக்கு அருகிலுள்ள ஒரு தலம்; செவ்வேள் - முருகப்பெருமான்; செந்நெறி - வீரசைவச் செம்மைநெறி; ஏந்தல் - பெருமையில் சிறந்து விளங்குபவர்; வாட்டம் - சோர்வு; அகல - நீங்க;

பொழிப்புரை:

அந்நாளில் பேரூரில் எழுந்தருளி இருந்த சாந்தலிங்க குருவானவர் அருளிய நான்கு ஞானநூல்களுக்கும் உலகர் எளிதில் விளங்கிக் கொள்ள ஏதுவாக உரைவழங்கிய பெருமையில் சிறந்து விளங்கும் சிதம்பர முனிவர் என்னும் எம் தந்தையே! திருப்போரூரில் தங்கி, அங்கு முருகப்பெருமானுக்குத் திருக்கோயில் அமைத்துத் திருப்பணி செய்து, பெருமை பொருந்திய வீரசைவ நெறியில் நின்று, அருள்நிறைந்த செய்யுள் பலவற்றையும் அம்முருகன்மீது பாடியருளிய செந்தமிழ்க் கவிஞரே! நீவிர் மணியாகவும் மருந்தாகவும் குற்றமற்ற திருநீறு ஒன்றையே பயன்படுத்தி உம்மை நாடிவந்த அடியார்களின் நோய் பலவற்றையும் போக்கி, அருளியுள்ளீர்! மேலும் என் மனதில் ஏற்பட்டுள்ள சோர்வினைப் போக்கி, மாட்சிமை பொருந்திய வளமான தமிழ்மொழிக்கு அடிமைப் பட்டுப் பணிசெய்யும் நல்ல நெறியினை எனக்கு அருளுவீராக!

**''அருள்சேரும் தில்லையினில் அம்பலவா ணர்க்குப்
பெருமைமிகு பூசை பிறழத் - திருமாலின்
பத்தர்கள் செய்த பழுதகற்ற வீரசைவ
உத்தமனாய்ச் சென்றாய் உயர்ந்து''** (5)

அருஞ்சொற்பொருள்:

அருள்சேரும் தில்லை - நாளும் திருவருள் பெருகுகின்ற தில்லை; அம்பலவாணர் - அம்பலத்தில் வாழ்பவர் (அம்பலக் கூத்தன்); பூசை - வழிபாடு; பிறழ - முறை பிறழ; பத்தர்கள் - அன்பர்கள்; பழுது அகற்ற - குற்றம் நீக்க; உத்தமன் - மேலான குணங்கள் உடையவன்.

பொழிப்புரை:

நாளும் திருவருள் பெருகுகின்ற தில்லையில் (இப்போது சிதம்பரம் என வழங்கப்படுகிறது) திருக்கூத்து நிகழ்த்துகின்ற ஆடல்வல்லானுக்கு நடைபெற்றுவந்த பெருமைமிகு வழிபாட்டுக்குத் திருமால் பத்தர்கள் இடையூறு செய்ய, அப்பொழுது, ஆதி சிவப்பிரகாசரே! நீவிர், உமது குருவின் ஆணைவழி, வேலூர்

சென்று, சடையில் இலிங்கத்தைச் சுமந்து, ஒருசைவ ஆசானாய், இலிங்கண்ணன் என்னும் வீரசைவ அமைச்சனைக் கண்டு, அவன்மூலம் வழிபாட்டுச் சிக்கல் தீர வழிவகை செய்து, அதனால் உயர்ந்து விளங்கினீர்!

''உயர்ந்தார் உணர்கின்ற மெய்ஞ்ஞான
வாழ்வால் உவந்திடவே
பயனறி சான்றோரும் போற்றும்
நெறியைப் பகிர்ந்தருள்வோய்
இயற்றமிழ் நாட்டம் இலாதவர்
வஞ்சத்(து) இருள்நெறியாம்
மயல்அது நீங்கிடச் செந்தமிழ்
நூல்தந்த மாதவனே! (6)

அருஞ்சொற்பொருள்:

நாட்டம் - விருப்பம்; இலாதவர் - இல்லாதவர்; வஞ்சம் - சூழ்ச்சி; இருள்நெறி - அறியாமை நிறைந்த நெறி; மயல் - மயக்கம்; மாதவன் - பெரிய தவமுடையவன்.

பொழிப்புரை:

குணங்களால் உயர்ந்து நிற்கும் சான்றோர்களால் மட்டுமே உணரப்படுகின்ற மெய்ஞ்ஞானத்தால் மகிழ்ந்து பயன்பெற்றோரும் போற்றுகின்ற உயர்ந்த நெறியை உலகுக்குப் பகிர்ந்து அருளியவரே! இயல்தமிழ்மீது மிகுந்த விருப்பம் இல்லாதவரது சூழ்ச்சியால் அறியாமை இருள்நிறைந்த வேறு ஒருநெறி பரவி மக்களை மயக்க, அம் மயக்கத்திலிருந்து அவர்களை விடுவிக்கும் பொருட்டுச் செந்தமிழில் நூல்கள் பாடி அருளிய பெரிய தவம் உடையவரே! (அருளுவீராக!)

''மாதவ னாகி மணிமுடி துறந்து
மயல்அது அகன்று அரிய
சாதனை புரியச் சுத்தசா தகத்தைத்
தருமுது குன்றமர் தவமுனிவ

வேதனை தீரச் சாந்தையர் தாள்பணி
　வேந்தே மெய்உணர் வதனால்
போத முரைசெய் குமார சற்குரு
　நின்னடி போற்றும் வாய்ப்பருளே (7)

அருஞ்சொற்பொருள்:

மணிமுடி - அழகிய கிரீடம் (அரச பதவியைக் குறித்தது); மயல் அது அகன்று - அறியாமை என்னும் ஆணவமல இருள் நீங்கி; சாதனை புரிய - ஆத்ம சாதனை நிகழ்த்த; சுத்தசாதகம் - குமாரதேவர் அருளிய நூல்களில் ஒன்று; வேதனை - பிறவியாகிய துன்பம்; சாந்தையர் - சாந்தலிங்க குரு; போதம் - ஞானம்; சற்குரு - ஞானகுரு.

பொழிப்புரை:

அரசபதவியைத் துறந்து, மேலான தவநெறியாக விளங்கும் துறவுநெறியைப் பின்பற்றி, ஏனையோர் போல 'உடல் உலகம்' ஆகிய இரண்டையும், 'மெய்' என்று நம்பாது, 'சீவனும் சிவனுமே மெய்' என்றுநம்பி, ஆத்ம சாதனை புரிய உதவும் சுத்தசாதகம் என்னும் நூலினைப் பாடி, திருமுதுகுன்றத்தில் எழுந்தருளி இருந்த குமாரதேவ தவ முனிவரே! 'இறப்பு பிறப்பு' என்னும் பெரிய துன்பத்திலிருந்து விடுபட, அந்நாளில் பேரூரில் எழுந்தருளிஇருந்த சாந்தலிங்க குருவைக் கண்டு, அவரது திருவடியை வணங்கிய வேந்தரே! மெய்ஞ்ஞானத்தை நூல்களின் வழி, உலகுக்கு வழங்கிய ஞானாசிரியனே! உமது திருவடிகளைப் போற்றி வணங்கும் வாய்ப்பினை அருளுவீராக!

"வாய்மைப் பொருளால் வளர்கலி வெண்பாத்
　தாய்மீ னாட்சி தாளிணை சூட்டிய
அருட்கவி சிதம்பர முனிவராய் அருளால்
　வருவோர் வாட்டம் மாற்றியே முருகன்
கோயில் திருப்பணி குறைவிலா நிறைவாய்ச்
　சேயாம் போரூர் செவ்வேட் கமைத்து
வயல்வளம் நிலவளம் வாய்த்திட மக்கள்
　செயத்தகு அறங்கள் செப்பினோய் வாழி (8)

அருஞ்சொற்பொருள்:

வாய்மைப் பொருள் - நிலைபேறுடைய பொருள்; வளர் கலிவெண்பா - மேன்மேலும் வளரும் புகழுடைய 'மீனாட்சி யம்மை கலிவெண்பா' என்னும் நூல்; அருட்கவி - திருவருளால் கவிபாடும் கவிஞர்; மாற்றி - போக்கி; சேய் - சிவபெருமானுக்கு மகன்; செவ்வேள் - முருகப்பெருமான்; வயல்வளம் - மருதநிலவளம்; நிலவளம் - ஏனைய குறிஞ்சி, முல்லை, நெய்தல் நில வளங்கள்; செயத்தகும் அறங்கள் - செய்யத் தகுதிஉடைய (செய்யவேண்டிய) அறங்கள்; செப்பினோய் - சொன்னவர்; வாழி - (உலகம் வாழ) நீவிர் வாழ்வீராக!

பொழிப்புரை:

'உடலும் உலகமும் நிலையற்றவை, சீவனும் சிவனும் நிலைத்த தன்மை உடையவை' என்னும் உண்மையை உலகுக்கு உணர்த்த, நாளும் வளர்கின்ற புகழுடைய, 'மீனாட்சியம்மை கலிவெண்பா' என்னும் பாமாலை பாடி, அதனை உலக உயிர் களுக்குத் தாயாக விளங்கும் மதுரை மீனாட்சியம்மையின் இணைஅடியில் சாத்தியவரும், இறைவன் அருளால் கவிபாடும் ஆற்றல் பெற்றவரும், ஆக விளங்கிய சிதம்பர அடிகளே! நீவிர் உம்மை நாடிவந்த அடியார்களின் துன்பங்களைப் போக்கி அருளினீர்! திருப்போரூரில் (சென்னை மாநகருக்கு அருகில் உள்ளது) சிவபெருமானுக்கு மகனாக விளங்கும் முருகப்பெருமானுக்கு குறைஒன்றும் இல்லாவகையில் நிறைவாகத் திருக்கோயில் அமைத்துத் திருப்பணி செய்தீர்! வயல்வளமும் ஏனைய நிலவளங்களும் செழிக்க வேண்டும் என்னும் விருப்பம் கொண்டு, மக்கள் கடைபிடிக்க வேண்டிய அறங்கள், 'இவை இவை' என அறிவுறுத்திய நீவிர் வாழ்வீராக!

''வாழ்வருளும் மெய்கண்டார் மாமரபில் வந்துதித்துத்
தாழ்வகற்றும் சற்குருவே தாரணியில் - சூழ்ந்துவளர்
வீரசைவத் தொன்னெறியை மேவித் திருத்தில்லை
வாரம் வளர்த்தாய் மகிழ்ந்து'' (9)

அருஞ்சொற்பொருள்:

வாழ்வு அருளும் - உயிர்களுக்கு இம்மையில் நல்வாழ்வும் மறுமையில் வீடுபேறும் அருளுகின்ற; மெய்கண்டாரின் மாமரபு - மெய்கண்டாரின் நெடிய பரம்பரை (மெய்கண்டாரின் சீடர் அருள்நந்தி சிவம். அவரின் சீடர் மறைஞான சம்பந்தர். அவரின் சீடர் உமாபதி சிவம் என நீளுகின்ற குரு வழி சீடன் என்னும் பரம்பரை). வந்து உதித்து - வந்து பிறந்து; தாழ்வு - இறப்பு பிறப்பாகிய தாழ்வு; சற்குரு - ஞானாசிரியன்; தாரணி - உலகம்; வளர் வீரசைவத் தொன்னெறி - மேன்மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்ற வீரசைவம் என்னும் பழைமையான நெறி; மேவி - பொருந்தி; வாரம் - அன்பு.

பொழிப்புரை:

உலகர், இம்மையில் நல்வாழ்வும், மறுமையில் வீடுபேறும், பெறுவதற்கு வழிகூறும், மெய்கண்டாரின் மிக நெடிய பரம்பரையில், ஒருவராய்த் தோன்றி, உயிர்களுக்கு மேன்மேலும் உண்டாகும் 'பிறப்பு இறப்பாகிய' இழிவு ஏற்படாவண்ணம், அருளுபதேசம் செய்தருளி, ஞானாசிரியனாய் விளங்கிய ஆதி சிவப்பிரகாசரே! நீவிர் பழம்பெருமை உடைய வீரசைவ நெறியைப் பின்பற்றி, ஏனையோரும் பின்பற்றுமாறு செய்து, தில்லையில் எழுந்தருளிக் கூத்து நிகழ்த்துகின்ற ஆடல்வல்லானிடம் அன்புபூண்டு, பேரின்ப வீடு பெற்று உய்ந்தீர்!

''மகிழ்ந்தன்பர் போற்றும்நல் ஞான
நெறிநின்ற மாதவனாய்
அகிலப் பொருள்கள் நிலையாய்
இலாதென்ப(து) ஆய்ந்துணர்ந்து
பகிர்ந்தருள் சாந்தையர் தம்நெறி
நின்று பணிபலவும்
நெகிழ்ந்துசெய் தொண்டால் இணையும்
வழுவா நெறியினனே'' (10)

அருஞ்சொற்பொருள்:

இலாதென்பது - (இலாது + என்பது) இருக்காது என்பது. பகிர்ந்து அருள் - வகைப்படுத்தி அருளும்; பணி - தொண்டு;

பொழிப்புரை:

சாந்தலிங்க குருவே! நீவிர் அன்பர்கள் மகிழ்ந்து போற்றும் ஞானநெறியில் நின்ற மேலான தவம் உடையவராய் விளங்கினீர்! 'உலகத்துப் பொருள்கள் நிலையற்ற தன்மை உடையது' என்பதை ஆராய்ந்து உணர்ந்து, அதனை நீவிர் பாடிய நூல்களின் வழி உலகுக்கு பகிர்ந்து அளித்து அருளும் செய்தீர்! அடியேனும் அந்நெறியிலே நின்று, மன நெகிழ்ச்சியுடன் செய்யும் தொண்டால் இணைந்து, அந்நெறியிலிருந்து பிறழாதவனாகவே இருந்து வருகிறேன்.

வழுவிலாப் பணிகள் செய்து
வளமுறு சிந்தை யாலே
முழுத்துற வேற்று வீர
சைவமே அருளா மென்று
பழுதில் சீர்த்திரு வாரூரில்
தேர்செலப் பணித்தாய் உந்தன்
விழுமிய நூலாம் சுத்தசா
தகநெறி விளங்கச் செய்யே" (11)

அருஞ்சொற்பொருள்:

வழுவிலா - குற்றம் இல்லாத; முழுத்துறவு - அகப்புறப் பற்றுக்களை அறவே விட்டு விலகும் முழுமையான துறவு; பழுதுஇல் - குற்றம் இல்லாத; சீர் - சிறப்பு; திருவாரூர் - ஒருதலம்; தேர்செல - தேர் செல்ல. (குமாரதேவர் வரலாறு பார்க்க); விழுமிய நூல் - சிறந்த நூல்.

பொழிப்புரை:

குமாரதேவ குருவே! நீவிர் பேரூர் வந்து, சாந்தலிங்கரைக் கண்டு, திருமடத்தில் தங்கி, தொண்டு செய்து, உபதேசம் பெற்று,

புறப்பற்றுக்கள் எனப்படும் பொருள், உறவு, இன்பம், புகழ், இடம் என்னும் ஐந்தினையும், அகப்பற்றுக்கள் எனப்படும் உடலோடு கூடிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் ஐந்தினையும் விட்டு, 'அவற்றை விட்டோம்' என்ற எண்ணத்தையும் நிரந்தரமாக விட்டு, முழுமையான துறவுநெறியினை மேற்கொண்டீர்! 'வீரசைவ நெறி, 'மருள்நெறி அன்று; அருள்நெறியே!' என்பதை நிலைநாட்ட, முதலில் தேர் நிற்கவும், பின்னர்த் தேர் செல்லவும் பணித்தீர்! இப்படிப்பட்ட உயர்ந்தநெறி குறித்து, நீவிர் சுத்தசாதகம் என்னும் நூலில் பேசியுள்ளீர்! இதனை உலகர் மேலும் விளங்கிக் கொள்ள அருள்செய்வீராக!

"செய்ய மேனியன் திருமுரு கன்பணி
செய்யும் மெய்யன்பர் சிறந்திடச் செந்தமிழ்
தெரிந்து தெளிந்து சித்தராய்ப் போரூர்
விரிந்த சந்நிதி முறைநூல் விளம்பி
அருட்பணி யாலே அடைந்தவர் குறையும்
மருட்சியும் நீக்கிய மாண்புசேர் ஞானி
ஏதுபிழை செய்தாலும் ஏழைக் கிரங்கென்(று)
ஓதும் உமதருள் சொல்லுக்(கு) உரியனென்று
நிறுத்துவீர் உமதுஅடி நிழலிடை என்றும்
சிறுதுரும் பனையேன் திளைத்திட அருளே"

(12)

அருஞ்சொற்பொருள்:

செய்ய - சிவந்த; தெரிந்து - கேட்டுத் தெரிந்து; தெளிந்து - தெளிவு பெற்று (கேட்டு சிந்தித்து தெளிந்து நிட்டைகூடி என வருவித்து உரைக்க); சித்தராய் - சில சித்துக்கள் செய்பவராய்; சந்நிதிமுறை - சிதம்பர அடிகள் பாடிய பனுவல் தொகுப்பு; குறை - பற்றாக்குறை; மருட்சி - மயக்கம்; ஏழை - அறிவிலி.

பொழிப்புரை:

சிவந்த திருமேனி கொண்ட முருகப்பெருமானுக்குத் தொண்டு செய்யும் மெய்யடியார்கள் வாழ்வு சிறக்கச் செந்தமிழ்வழி

ஞானநூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடி, பல சித்துக்கள் கைவரப்பெற்று, திருப்போரூர் முருகன்மீது 'சந்நிதிமுறை' என்னும் நூல் தொகுப்பினைப் பாடியருளி, முருகப் பெருமானுக்குப் பல திருப்பணிகள் செய்து, அடியார்களின் குறைகளைப் போக்கி, 'பொய்ப்பொருளை மெய்ப்பொருள்' என்று பிறழ உணரும் மக்களின் மயக்க அறிவைத் தெளியவைத்து, பெருமையில் சிறந்து விளங்கிய, ஞானமுதிர்ச்சி உடைய சிதம்பர அடிகளே! 'எப்படிப்பட்ட பிழை செய்திருந்தாலும் அறிவிலியாகிய எனக்காக மனம் இரங்கி அருளவேண்டும்' என்று நீவிர் சொன்ன சொல்லுக்கு உரிமை உடையவனாய், இப்பொழுது அடியேன் இருக்கிறேன்; எனவே எம்மை உமது திருவடி நிழலின் கீழ் நிற்கச் செய்து, சிறிய துரும்பு போன்ற எனக்கும் அப்பேற்றினைத் தந்து அருளுவீராக!

"அருளே வடிவாக அண்ணா மலையில்
இருள்தீர எண்ணியருள் எந்தாய் - பொருள்சேரும்
அத்துவித வெண்பாவை ஆகமமாய்த் தந்தருளும்
அத்தா சிவப்பிரகா சா" (13)

அருஞ்சொற்பொருள்:

அண்ணாமலை - திருவண்ணாமலை என்னும் தலம்; எண்ணி - நினைத்து; எந்தாய் - எம் தந்தையே; அத்துவித வெண்பா - ஆதி சிவப்பிரகாசர் அருளிய நூலின் பெயர்; அத்தா - குருவே!

பொழிப்புரை:

எமது தந்தையே! சிவப்பிரகாசன் என்னும் பெயரில் எழுந்தருளிய ஞானகுருவே! நீவிர் திருவண்ணாமலையில் அக்கினிதீர்த்தக் கரையில் அமைக்கப்பட்ட திருமடத்தில் அருளே உருவமாகத் திருமேனி கொண்டு எழுந்தருளி இருந்தீர்! மெய்ப் பொருளை உள்ளபடி விளங்கிக் கொள்ளக் காரணமாய் அமைந்ததும், தமிழ்ஆகமம் என்று போற்றப்படும் சிறப்புடையதும், ஆகிய 'அத்துவித வெண்பா' என்னும் ஒரு நூலினைப் பாடி அருளினீர்! நீவிர் எம்மையும் ஒரு பொருளாக மதித்து, அருள்புரிவீராக!

"சிவப்பிர காசர் அருள்கூடச்
செம்பொருள் தேர்ந்துணர்ந்தாய்
பவப்பிணி போக்கிட நூல்நான்கு
ஓதியே பற்றறுத்தாய்
உவந்(து)உல கம்புகழ் சாந்தையர்
தம்முடை ஊற்றமிகு
தவத்(து)உயர் ஆதீனம் ஏழையேன்
சார்ந்தது தண்ணருளே" (14)

அருஞ்சொற்பொருள்:

செம்பொருள் - சிவமாம் செம்பொருள்; பவப்பிணி - பிறவியாகிய பெரிய நோய்; நான்கு ஓதி - நான்கு நூல்கள் பாடி; சாந்தையர் - சாந்தலிங்க குரு; ஊற்றம் - பற்றுக்கோடு; நற்றவம் - நல்ல தவம்.

பொழிப்புரை:

ஞானியர் பலராலும் புகழ்ந்து பேசப்பட்ட சாந்தலிங்க குருவே! நீவிர் உமக்குக் குருவாக எழுந்தருளி வந்த ஆதி சிவப்பிரகாசரது குருவருள் கைகூடச் செம்பொருளாக விளங்கும் சிவம் குறித்து ஆராய்ந்து உணர்ந்தீர்! அதன் பயனாய், பிறவியாகிய பெரிய நோயினைப் போக்கி அருள, மருந்துபோல் உதவும் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்னும் நான்கு ஞான நூல்களைப் பாடி உலகப் பற்றினை அறுத்துக் கொண்டீர்! இதற்கு மேலும் தவம் பெருகு கின்ற பேரூரில் உலகம் மகிழ்ந்து போற்றும் உமது தவத்துக்குப் பற்றுக்கோடாய் விளங்கும் ஆதீனம் தோற்றுவித்தீர்! அதனில் அறிவில் சிறியவனாகிய அடியேன் சார்ந்ததும் தவப்பயனே ஆகும்.

"நற்பே றுதவும் வீரசைவ
நாட்டம் கொண்டு பேரூரில்
கற்போர் தெளிந்து மெய்யியலைக்
கருதும் நூல்கள் நான்குணர்ந்து

நிற்கும் நிலையில் சோராமல்
நீடு தவத்தால் முதுகுன்றில்
உற்ற அன்னை பாலமுதம்
உவந்து பலநூல் உரைத்தாயே (15)

அருஞ்சொற்பொருள்:

நற்பேறு - வீடுபேறு; நாட்டம் - விருப்பம்; நூல்கள் நான்கு உணர்ந்து - குருநாதர் அருளிய நான்கு நூல்களின் உண்மைப் பொருளை உணர்ந்து; சோராமல் - தளராமல்; நீடுதவம் - பெருகின்ற தவம்; முதுகுன்று - விருத்தாசலம்; உற்ற அன்னை - அத்தலத்துக்கு உரிய அம்மை (பெரியநாயகி); பாலமுதம் - பால்உணவு; பலநூல் - இங்கு அவர் பாடிய 16 நூல்களைக் குறித்தது.

பொழிப்புரை:

குமாரதேவ சற்குருவே! நீவிர் வீடுபேறு அடைய உதவும் வீரசைவ நெறியின்மீது விருப்பம் கொண்டு, அரசபதவியைத் துறந்து, கன்னட நாட்டை விட்டு நீங்கி, கொங்குநாடு வந்து, பேரூரை அடைந்து, அங்கு வீரசைவை ஞானாசிரியனாக எழுந்தருளி இருந்த சாந்தலிங்க தேசிகரைக் கண்டு, அவர் அருளிய நான்கு நூல்களைப் பாடமாக ஓதக்கேட்டு, மெய்யியலின் விளக்கம் பெற்று, நிட்டைகூடி, அதனில் சோர்வு வராமல் காத்துப் பின் குருவின் ஆணைவழி விருத்தாசலம் சென்று, அங்கு அத்தலத்து அம்மை பெரியநாயகி தந்த பால் உணவை அருந்தி மகிழ்ந்து, (குமாரதேவர் வரலாறு பார்க்க), உலகம் உய்யும் பொருட்டு, பதினாறு நூல்களைப் பாடி அருளியுள்ளீர்!

"உரையும் பொருளும் உயர்கவி ஓதிப்
பரைமீ னாட்சி கலிவெண் பாவை
அருளிய போரூர் சிதம்பர அடிகேள்
ஒருமைத் தவம்நிறை நிறுவனத் துற்று

நற்பணி புரிவோர் நன்மைகள் பெறவே
சொற்பொருள் உணர்ந்து தூய நெறியில்
நாட்டம் முருகன் நற்பதத்(து) இருத்தி
வாட்டம் அகலும் மாண்பினை அருளே'' (16)

அருஞ்சொற்பொருள்:

உரையும் பொருளும் - பொருளோடு பொருந்திய உரை; கவி ஓதி - செய்யுள் நூல் பாடி; பரை - (பரன் × பரை) பரன் என்னும் ஆண்பாலுக்குரிய பெண்பாற்சொல்; ஒருமைத் தவம் - மனதை ஒருமுகப்படுத்திப் பின்னர் அம்மனத்தை இறந்துபடச் செய்யும் தவம்; நிறுவனம் - ஆதீனம், மடம் முதலிய ஆன்மீக நிறுவனங்கள்; நற்பதம் - தூய திருவடி. வாட்டம் - வருத்தம்;

பொழிப்புரை:

திருப்போரூர் என்னும் தலத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்த சிதம்பர அடிகளே! நீவிர், பேரூர் சாந்தலிங்கர் அருளிய நான்கு நூல்களுக்கும், காழிக் கண்ணுடைய வள்ளல் அருளிய ஒழிவில் ஒடுக்கம் என்னும் ஒரு நூலுக்கும், ஆக ஐந்து சாத்திர நூல்களுக்குப் பொருளாழம் மிக்க விளக்கவுரை எழுதியதோடு, அன்னை மீனாட்சியின்மீது கலிவெண்பா பாடி, இவ்வுலகுக்கு அருளியுள்ளீர்! மனம் ஒருநிலையில் நிற்கவும், தவம் கைகூடவும் வேண்டுமாயின், அதற்குத் துறவே உகந்த நெறி என்றும், 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்று வள்ளுவர் கூறியது - புகழ்வது போலப் பழித்தல் என்றும், எனவே அதற்குரிய நிறுவனத்தைப் பற்றி நிற்றல் வேண்டும் என்றும், நீவிர் கூறி இருப்பதைக் கேட்டு, அதன் சொல்லும் பொருளும் உணர்ந்து, தூய துறவு நெறியில் நின்று, விருப்பம் முழுவதையும் முருகப் பெருமானின் நல்ல திருவடிகளிலே நிலைக்கச் செய்து, சோர்வினைப் போக்கி அருளும் ஒரு மாண்பினையும், அப்படி நன்முறையில் பணிசெய்வோர் நன்மைகள் பெறவும் எனக்குத் தந்து அருளுவீராக!

''அருள்குரவன் ஆணையினால் அம்பலத்தில் ஆடும்
பெருமான் வழிபாடு பேணித் - திருவருள்சேர்
கொற்றங் குடியில் அடியவர் கூட்டமுடன்
நற்றாள் தொழுநாய கா''. (17)

அருஞ்சொற்பொருள்:

அருள்குரவன் - திருவருளோடு பொருந்தி இருக்கும் குரு; ஆணை - கட்டளை; பெருமான் - நடராசப் பெருமான்; பேணி - காத்து; திருவருள்சேர் - தெய்வத் தன்மை பொருந்திய; நற்றாள் - நல்ல திருவடி;

பொழிப்புரை:

சாந்தலிங்கரும், அவர்வழியில் குமாரதேவரும், அவர்வழியில் சிதம்பர அடிகளும் எனப் பலரும், நிட்டை கூடி, சமாதிநிலை அடைய, அருள்உபதேசம் செய்த ஆதி சிவப்பிரகாச ஆசாரியனே! நீவிர், உமது குருநாதர் நமச்சிவாய மூர்த்திகளின், ஆணையை ஏற்றுத் தில்லை சென்று, அம்பலவாணனுக்கு நடைபெற்றுவந்த, வழிபாட்டில் காணப்பட்ட குற்றம் களைந்தீர்! பின்னர் அவ்வழிபாடு, தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்யும்பொருட்டு, கொற்றங்குடி என்னும் தலத்தில் அன்பர்களுடன் எழுந்தருளி இருந்து, நாளும் தில்லை சென்று, அம்பலவாணனை வழிபட்டு, நன்மை பயக்கும் அவனது திருவடியை விரும்பி வணங்கும் தலைமை பெற்றீர்!

"நாயன தீக்குணக் கூட்டம்
தவிரும் நலனறியாத்
தீயனை ஆட்கொண்டு சிற்றூரில்
வாழும் சிறுமைஇன்றித்
தாயன்பால் நோக்கி அருள்ராமா
னந்தர் தரும்பணியால்
ஆய புலமை யுடன்ஆதீ
னப்பணி ஆய்ந்தனனே" (18)

அருஞ்சொற்பொருள்:

நாய் அன - நாய்போன்ற; அன - அன்ன என்பது இடை குறைந்து நின்ற உவமஉருபு; தீயனை - தீயகுணங்கள் கொண்டவனை; ஆட்கொண்டு - அடிமையாக ஏற்று; சிற்றூர் - முதலிபாளையம் என்னும் பெயரில் அன்னூருக்கு அருகில்

உள்ள ஒரு சிறியஊர். ராமானந்தர் - சிரவையிலுள்ள கௌமார மடாலயத்தைத் தோற்றுவித்த குருமுதல்வர்;

பொழிப்புரை:

சாந்தலிங்க குருவே! முதலிபாளையம் என்னும் மிகச் சிறிய ஓர் ஊரில் பிறந்து, நாய்போன்ற கீழ்க்குணம் உடையவரை விட்டு விலகி நிற்கும் நன்மை அறியாது, நாளும் பல தவறுகள் செய்யும் அறியாமை நிரம்பி இருந்த என்னை, ஒரு பொருளாக மதித்து, தடுத்து ஆட்கொண்டு, அந்தச் சிறிய கிராமத்தில் கிடந்து, சிறுமை உறாது இருக்க, தாய்போல் அன்பு செய்து என்னைப் பார்த்தருளி, சிரவை ஆதீனத்தை நிறுவிய இராமானந்த அடிகளுக்குத் தொண்டு செய்யுமாறு பணித்தீர்! அவ்வாறு சிலகாலம் தொண்டு செய்தபிறகு, (படித்துப் புலமை பெற்று) அப்புலமையால் ஆதீனத்தில் உள்ள பணிகள் குறித்து, 'செய்வன இவை, தவிர்வன இவை' என ஆய்ந்து, அதன்பின்னர் பணிகளைச் செய்ய வழிவகுத்தீர்!

"தனையுண ரறிவும் தமிழறிவும்
தழைத்திடச் சாந்தலிங் கர்தாள்
நினையும் மெய்யடியர் குழுவினிடை
நீடிய தவத்தினால் உயர்ந்து
புனையும் பாவால் மெய்யியலின்
பொருள்சேர் சுத்தசா தகநூலை
மனைஉற வாதிமா சறவே
மாண்பருள் நெறிவாழ் வருளே" (19)

அருஞ்சொற்பொருள்:

தனை - தன்னை என்பது இடைகுறைந்து நின்றது. தன்னை உணரும் அறிவு - 'உடம்பு நானன்று, சீவனே நான்' என உணரும் அறிவு. தமிழ் அறிவு - தமிழ்ப்புலமை (தாய்மொழி கன்னடமாக இருந்தும், தமிழில் கவி புனையும்அளவு பெற்றிருந்த மொழிப்புலமை). மெய்யடியர் - உண்மை அடியார்; குழு - திருக்கூட்டம்; சுத்தசாதகம் - குமாரதேவர்

அருளிய நூல். மனை உறவு ஆதி - மனைவி மக்கள் முதலிய உறவுகளாகிய புறப்பற்று. மாசறவே - மாசு + அறவே. மாசு - குற்றம். அற - நீங்க.

பொழிப்புரை:

ஞானச் செல்வமாய் விளங்கும் குமார சற்குருவே! 'நான் என்பது உடம்பன்று, சீவன்' என்று அறியும் அறிவும், தமிழ்மொழி அறிவும், பெற்று, அவை மேலும் தழைத்துவளர, சாந்தலிங்கரது திருவடிகளை நினைத்துப் போற்றும், அடியார் திருக்கூட்டத்தில், நீவிரும் ஒருவராகச் சேர்ந்திருந்து, நிட்டைகூடி, நீண்ட காலம் தவம் செய்து, பாக்கள் கொண்டு தொடுக்கப்பட்ட பாமாலையாகிய சுத்த சாதக நூலைப் பாடிச் சாத்தி வழிபட்டீர்! புறப்பற்றுக்களாக விளங்கும் மனைவி முதலிய உயிர்ச்சார்பும், நிலம் முதலிய பொருட்சார்பும் ஆகிய இரண்டுவகைக் குற்றங்கள் நீங்கவும் ஆன்ம வளர்ச்சி பெறவும் உரிய அருள்நெறி வழி வாழும் வாழ்வினை அனைவர்க்கும் தந்து அருளுவீராக!

"அருள்மிகு கோயில் அருட்பணி செய்ய
வருமடி யவர்தம் வல்வினை மாற்றும்
செந்தமிழ்க் கவிஞ திருப்போ ரூர்தனில்
பந்தமற் றரிய பணிசெய் பெரும
வஞ்சமும் பொறாமையும் மாசுடை மனமும்
நெஞ்சறி பொய்யும் நேர்ந்திடா வண்ணம்
நின்னுடைத் திருமடம் நிலைபே றெய்திட
மன்னிய அருள்செய் மாதவ அறிஞரே (20)

அருஞ்சொற்பொருள்:

வல்வினை - தீவினை; பந்தம் அற்று - பற்றுக்கள் இன்றி; அரியபணி - செய்தற்குஅரிய திருப்பணி; பெரும - பெருமை உடையவரே! வஞ்சம் - வஞ்சனை; மாசு - குற்றம்; நெஞ்சு அறி பொய் - மனமறியப் பேசும் பொய்; அறிவருள் (அறிவு + அருள்) அறிவினை அருளுவீராக.

பொழிப்புரை:

நிரம்பிய ஞானம்உடைய சிதம்பர தேசிகரே! நீவிர் திருப்போரூரில் முருகப்பெருமானுக்கு அருள்மிகு திருக்கோயில் எழுப்பித் திருப்பணி செய்யும் பொருட்டு, நாடி வந்த அடியார்களின் தீயவினைத் துன்பங்களைப் போக்கி அருளினீர்! செந்தமிழ் மொழியில் பல பாக்களை இயற்றிக் கவிஞராய்த் திகழ்ந்தீர்! அகப்புறப் பற்றுக்களை அறவே துறந்து, அரிய பல பணிகள் செய்த பெருமைக்கு உரியவரானீர்! உலகில் வஞ்சனை, பொறாமை, குற்றமனம், மனம் அறியப் பேசும் பொய் முதலிய தீயகுணங்கள் நேராவாறு, அவற்றுக்கும் அப்பாற்பட்டு, உம்மால் உருவாக்கப்பட்ட திருமடம் நிலைத்து நிற்க, பெரிய தவமும் அறிவும் தந்து காப்பீராக!

''அறிவால் அறிந்துஞான வாழ்வருள் ஆசான்
நெறிநின்று சைவம் நிலைக்கப் - பொறிவாயில்
ஐந்தவித்தார் போற்றும் கிளைமடங்கள் ஆக்கமுறத்
தந்தார் சிவப்பிரகா சர்'' (21)

அருஞ்சொற்பொருள்:

அறிவால் - 'இறை உயிர் தளை' என்னும் முப்பொருள் உண்மை குறித்து அறியும் அறிவால். சைவம் - சிவனை வழிபடும் சமயம்; பொறி - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து அறிவுபெறும் கருவிகள்; அவித்து - அழித்து; ஆக்கம் உற - மேன்மேலும் பெருக; கிளைமடங்கள் - திருவாவடுதுறை ஆதீனம் தலைமை மடமாக விளங்க, திருவண்ணாமலை துறையூர் முதலிய ஊர்களில் உருவாக்கப் பட்ட கிளைமடங்கள்.

பொழிப்புரை:

'இறை உயிர் தளை' என்னும் முப்பொருள் உண்மை குறித்து அறிவால் அறிந்து, உயர்ந்த ஞானத்தை உலக உயிர்களுக்குக் காட்டிக் கொடுக்கும், குருவாக விளங்கிய நமச்சிவாய மூர்த்திகளின் வழியைப் பின்பற்றி, சிவனை வழிபடும் சமயமாகிய சைவம்

நிலைத்து நிற்கும்பொருட்டு, பொறிவழி செல்லும் புலன்கள் (சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்) ஐந்தினையும் அழித்துத், தன்னையும் (சீவனையும்) தலைவனையும் (சிவனையும்) அறிந்து, (கண்டு) போற்றுதலுக்கு ஏதுவாகிய திருவாவடுதுறையில் தலைமை மடமும், திருவண்ணாமலை, துறையூர் முதலிய ஊர்களில் கிளைமடங் களும் தோற்றுவித்துச் சிறப்புப் பெற்றவர் ஆதி சிவப்பிரகாசர்.

"காசறு அன்பர்க்(கு) உரியநல்
மெய்ஞ்ஞானம் காட்டிடவே
மாசறு வைராக் கியதீபம்
நல்கிய மாட்சிமையால்
ஆசறு அன்பர்கள் ஆய்ந்திட
ஆதீனம் ஆக்கமுற
ஈசர் அருள்வளர் சத்வித்யா
சங்கம் இயங்குவித்தாய்" (22)

அருஞ்சொற்பொருள்:

காசு - குற்றம்; அறு - அறும்படி; மாசுஅறு - குற்றம் அறும்படி; வைராக்ய தீபம் - சாந்தலிங்கர் அருளிய நூல்களுள் ஒன்று; மாட்சிமை - சிறப்பு; ஆசுஅறு - குற்றமற்ற; ஆதீனம் - திருமடம்; ஈசர் - ஆளும் தன்மை உடைய இறைவர்; சத்வித்யா சங்கம் - பேரூர்த் திருமடத்தில் 1914ஆம் ஆண்டில் மாணிக்க அடிகளால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு சங்கம்.

பொழிப்புரை:

சாந்தலிங்க அடிகளார் அவர்கள், குற்றமற்ற மெய்யடியார் களுக்கு உரிய நல்ல மெய்ஞ்ஞானத்தை போதிக்கும் பொருட்டு, குற்றமற்ற வைராக்கிய தீபம் என்னும் நூலை உலகுக்கு வழங்கிய சிறப்புக்கு உரியவர். மாசு நீங்கிய அன்பர்கள் இருந்து ஆய்ந்து அறிய உதவும் பொருட்டு, கொங்கு நாட்டுப் பேரூரில் திருமடம் தோற்றுவித்தது மட்டுமின்றி, அவர், எல்லா உலகங்களையும் ஆளும் இறைவனது அருளைப் பெற்று. சத்வித்யா சங்கம் தோன்றவும், அது இன்றளவும் நிலைத்திருக்கவும், தோன்றாத் துணையாய் இருந்து, ஊக்குவித்தும் வருபவர்.

"வித்தாய் முளையாய் சிவநெறியின்
விளக்க மதாகமெய்த் தவத்தோர்
பத்தர் அறிஞர் தவர்போற்றப்
பழகு தமிழில் பலருவக்க
கொத்தாய் நூல்கள் பலசெய்த
குமார தேவே வழிவருவோர்
பித்தாம் காமப்பிணி முதல்தீர்
பெருவாழ் வுற்றுயர் வழியருளே (23)

அருஞ்சொற்பொருள்:

வித்து - விதை; பத்தர் - அன்பர்; தவர் - தவசிகள்; கொத்தாய் - இங்கு 'பல' என்னும் பொருளில் நின்றது; காமப் பிணி முதல் - காமம் வெகுளி மயக்கம் என்னும் நோய்கள்;

பொழிப்புரை:

'பிறப்பு துன்பம் தருவது' என்னும் எண்ணமாகிய விதையை ஊன்றி, 'அதனை அறுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?' என்னும் வினாவினை எழுப்புதலாகிய முளைவிடுமாறு செய்து, (குருவை நாடி இருந்து) 'பொருட்சார்பு, உயிர்ச்சார்பு என்னும் இருவகைச் சார்புடைய புறப்பற்றுக்களைவிட்டு, பொருள்கள் மேல் வைத்த ஆசையை அறுத்து, ஐம்பொறிகளையும் புலன்கள்மேல் செல்லாமல் தடுத்து, அதனால் அகக்கருவிகளின் துன்பம் ஒழிந்து, நனவில் உறக்கம் என்னும் அவத்தையை அடைந்து, அறியாமையை நீக்கி, சீவனைக் கண்டு, பரையைக் கண்டு, சிவனைக் கண்டு, சிவத்தில் கலந்து பேரின்பம் பெறுதல்' என்னும் சிவநெறியின் விளக்கம் முழுவதையும், மேலான தவமுடையவர், அன்பர், ஞானிகள், தவசிகள் எனப் பலரும் போற்றும்விதமாக, அந்நாளில் மக்கள் வழக்கில் இருந்த எளிய இனிய தமிழ்ச்சொற்களைக் கொண்டு, பாடிப் பதினாறு நூல்களை உலகுக்கு வழங்கிய குமார தேவரே! நினது மரபில் வருவோர், காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்கள் அற்றவராய் இருக்கவும், அவர்களும் மேற்கூறிய வீட்டின்பம் என்னும் பெருவாழ்வு பெற்று உயரவும் வழி செய்வீராக!

"வழிவழி வந்த மாசறு பீடம்
இழிவுறா வகையில் இன்பம் ததும்ப
செந்தமிழ்ச் சந்நிதி முறைகொடு முருகனைப்
பந்த முறாவகை பாடித் துதித்தீர்
கறைபடா வாழ்வினைக் காணவு மன்பர்
நிறைநிலா நாளில் நினைந்துபோற் றிடுவர்
கோதிலா உன்தன் கோயிலும் மடமும்
நீதியால் வளர நின்னருள் புரியே" (24)

அருஞ்சொற்பொருள்:

வழிவழி - குருவழி சீடன் என்னும் பரம்பரை; மாசறு - குற்றமற்ற; பீடம் - ஆதீனம்; பந்தம் - தளை; கறை - களங்கம்; நிறைநிலா நாள் - முழுமதிநாள் (பௌர்ணமி நாள்); கோதிலா - குற்றம் இல்லாத; நீதியால் - நியதிப்படி.

பொழிப்புரை:

திருப்போரூர் சிதம்பர அடிகளே! நீவிர் அந்நாளில், 'திருப்போரூர் சந்நிதிமுறை' என்னும் பனுவல் தொகுப்பினை, முருகப்பெருமான்மீது பாடி, வழிபட்டு, ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத் தளையிலிருந்து விடுபட்டீர்! இன்றும் அன்பர் பலரும் முழுமதி நாளில் ஒன்றுகூடித் தங்கள் வாழ்வில் இழிவு நேராதிருக்க வேண்டும் என்றும், களங்கமின்றி வாழவேண்டும் என்றும், வாழ்வில் இன்பம் ததும்ப வேண்டும் என்றும், வழிபட்டுச் செல்கின்றனர். உம்மால் தோற்றுவிக்கப்பட்ட குரு வழி சீடன் என்னும் பரம்பரை, விளக்கம் பெறும் வகையிலும், திருமடமும் திருக்கோயிலும் முறைப்படி வளர நினது அருளைப் பொழிவாயாக!

"புரிசடைசேர் முக்கண்ணன் போன்றே திகழ்ந்து
எரியுறு நீரென எங்கள் - பரிபவம்
தீர்க்குமண் ணாமலைசேர் தெய்வமடத் தொன்மையினைப்
போக்குமவர் புன்மையினைப் போக்கு" (25)

அருஞ்சொற்பொருள்:

புரிசடை - முறுக்கிய சடை; முக்கண்ணன் - மூன்று கண் உடையவன் (சிவபெருமான்); எரியுறு நீர் என - எரிகின்ற நெருப்பினால் சூடேற்றப்பட்ட நீர் போல; பரிபவம் - தவறுகள்; தொன்மை - பழைமை; புன்மைநிலை - இழிநிலை.

பொழிப்புரை:

ஆதி சிவப்பிரகாச குருவே! நீவிர் முறுக்கேறிய சடையும், மூன்று கண்களும், கொண்ட சிவபெருமானாகவே, எங்களுக்குக் காட்சி அளிக்கிறீர்! நெருப்பினால் சூடேற்றப்பட்ட நீரில் வெப்பம் நீக்கமற நிறைந்திருப்பது போல இறைவனது திருவருள் எல்லா இடத்தும் நீக்கமற நிறைந்திருந்தாலும் உயிர்கள் செய்யும் நல்வினை, தீவினைகளால் இறைவன் தாக்குறுவது இல்லை. அது போல நீவிரும் நாங்கள் செய்யும் தவறுகளால் வரும் பாவங்களால் தாக்குறாது இருந்து, எங்களைக் காக்க வேண்டும். திருவண்ணாமலையில் தெய்வத்தன்மையும் தொன்மைச் சிறப்பும் கொண்டு 'பெரியமடம்' என்னும் பெயரில் விளங்கிவரும் மடத்தினையும், அதனை அழிக்க நினைப்பவரையும், அழிவிலிருந்து காத்து அருளுவீராக! (சாந்தலிங்கரின் மனைவியார் ஞானாம்பிகை அம்மையாரின் சமாதி இங்குதான் உள்ளது).

"போக்கும் வரவு மிலாததொர்
பூரணன் சற்குருவாய்
தேக்கரி தானதோர் இன்பம்
தருகின்ற தீபமதில்
நீக்க மறநிற்கும் அன்பின்
நிலைகூறி நீள்தவத்தோர்
ஏக்க மறச்செய் திடும்இன்ப
வாழ்வு எமக்கருளே" (26)

அருஞ்சொற்பொருள்:

போக்கு - இறப்பு; வரவு - பிறப்பு; இலாததோர் - இல்லாத ஒரு; பூரணன் - எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன்;

சற்குருவாய் - ஞானாசிரியனாய்; தேக்க அரிதானதோர் இன்பம் - தேக்கிவைக்க அருமைஉடைய ஓர் இன்பம்; தீபமதில் - வைராக்கிய தீபம் என்னும் நூலில்; ஏக்கம் அற - கவலை நீங்க.

பொழிப்புரை:

சாந்தலிங்க தேசிகரே! 'இறப்பு பிறப்புகளுக்கு அப்பாற்பட்டு, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் முதற்பொருளாக விளங்கும் இறைவனே, மாணவனின் தீவிரதரத்தைக் கருத்தில் கொண்டு, ஞானகுருவாய் எழுந்தருளி வருவான்' என்ற கூற்றுப்படி, நீவிர் எங்களுக்கு ஞானகுருவாக எழுந்தருளி வந்தீர்! தேக்கிவைக்க அருமைஉடைய வீட்டின்பம் குறித்தும், அதனை அடையும் வழிவகை குறித்தும், வைராக்கிய தீபம் என்னும் நூலின்வழி உலகுக்கு விரிவாக எடுத்துரைத்தீர்! அந்நெறியைச் சற்றும் வழுவாமல், உள்ளபடியே பின்பற்றிய மெய்த்தவமுடைய குமாரதேவர், சிதம்பரஅடிகள் போன்றோர் உயர்ந்த நிலையினைப் பெற்றனர். அவ்வாறு அவர்கள் பெற்ற நிலையினை, அடியேனும் பெற்று, பேரின்ப வாழ்வு வாழ அருளுவீராக!

''அருள்சேர் வீரசை வத்தை
அத்துவித வெண்பா அதனால்
பெருமை பெறவே அருள்ஆதி
சிவப்பிர காசரா தீனம்
மருவு முனது முதுகுன்றம்
மாண்பார் பீடத்துடன் ஓங்கும்
குருவாம் சாந்தையர் தண்ணருளைக்
குறைவிலா தேற்கும் குணக்குன்றே'' (27)

அருஞ்சொற்பொருள்:

அத்துவித வெண்பா - ஆதி சிவப்பிரகாசர் அருளிய ஒரு நூல்; ஆதி சிவப்பிரகாசர் ஆதீனம் - ஆதி சிவப்பிரகாசருக்கு இலிங்கா ரெட்டியாரால் உருவாக்கித் தரப்பட்ட துறையூர் ஆதீனம்; உனது திருமுதுகுன்ற ஞானபீடம் - உம்மால்

உருவாக்கப்பட்ட விருத்தாசலம் குமாரதேவர் மடம்; குருவாம் சாந்தையர் - உமது குருநாதர் சாந்தலிங்கர். குறைவிலாது - (குறைவு + இலாது). இலாது - இல்லாது.

பொழிப்புரை:

குமாரதேவ தேசிகரே! அருளால் பொலிவு பெற்று விளங்கும் வீரசைவ நெறியைத் தழுவி, அந்நெறியின் தத்துவத்தை விளக்கிக் கூறும் அத்துவித வெண்பா என்னும் ஒரு நூலைப் பாடிப் பெருமை பெற்ற ஆதிசிவப்பிரகாசருக்கு இலிங்காரெட்டியார் உருவாக்கித் தந்த துறையூர்த் திருமடமும், உம்மால் உருவாக்கப்பட்ட திருமுதுகுன்றம் என்னும் தலத்தில் உள்ள மாட்சிமை பொருந்திய ஆதீனமும், மேலும் பெருமை பெற, அருளால் உயர்ந்து நிற்கும் உமது குருநாதர் சாந்தலிங்க தேசிகரது தண்ணருள் உதவும்; அந்தக் குருவின் அருளைக் குறைவற ஏற்கும் குணக்குன்றமாய் நீவிர் திகழ்வதையும் யாம் அறிவோம்.

"குன்றுதோ றும்ஆடும் குமரன் அடியிணை
ஒன்றிய உள்ளத்(து) உயர்அருட் கவிஞர்
குலவும் போரூர் கோயில் பணியில்
பலரும் வணங்கச் சித்துகள் பலவுடன்
போரூர் சந்நிதி முறையினில் போற்றி
சீரும் பொலிவும் தெளிசாந் தலிங்கர்
நூல்கட் குரிய நுண்ணுரை நவின்று
நால்வகை நூலின் நயமது நிறுவித்
தரும்நின் புலமை தனைஅடி யேனும்
விரும்பித் தமிழ்நெறி தழைத்திட விழைந்தேன்
வாழ்வியல் அருளியல் வளர்தமிழ் நெறியால்
சூழ்ந்தே உலகம் சுகமுற வளர்த்தருள்" **(28)**

அருஞ்சொற்பொருள்:

குலவும் - கொண்டாடும்; சீர் - சிறப்பு (குணச்சிறப்பு); பொலிவு - தவப்பொலிவு; நுண்ணுரை - (ஆழ்ந்து அகன்று) நுண்ணிதாய் விளங்கும் உரை. நவின்று - (சொல்லி) எழுதி;

நால்வகை நூல் - நால்வகைக் கருத்துகளைக் கொண்ட நான்கு நூல்கள்; நயம் நிறுவி - நயங்களை எடுத்துக் காட்டி; விழைந்தேன் - விரும்பினேன்.

பொழிப்புரை:

சிதம்பர அடிகளே! குன்றுதோறும் எழுந்தருளி இருக்கின்ற குமரனது திருவடி இணையை ஒன்றிய சிந்தையுடன் இருந்து புகழ்ந்து போற்றும் அருட்கவிஞரே! நீவிர் திருப்போரூர் என்னும் தலத்தில், அனைவரும் கொண்டாடி மகிழுமாறு, முருகப்பெருமானுக்குத் திருக்கோயில் அமைத்தீர்! சித்துகள் பலவும் செய்து, மக்களது குறைகளைக் களைந்தீர்! முருகப்பெருமான்மீது பல நூல்கள் பாடி, அவை 'திருப்போரூர் சந்நிதிமுறை' என்னும் தொகுப்பாய் விளங்குமாறு செய்தீர்! குணச்சிறப்பும் தவப்பொலிவும் உடைய பேரூர் சாந்தலிங்கர் அருளிய நான்கு கருத்துகளை வலியுறுத்தும் நான்கு நூல்களுக்கு, அவற்றின் நயம் வெளிப்படுமாறு, நுண்ணிய உரை எழுதினீர்! மூலநூல் வழியும், உரைநூல் வழியும், வெளிப்பட்ட உமது புலமை கண்டு, அடியேன் உம்மீது விருப்பம் கொண்டேன். (சைவத்தையும் தமிழையும் வேறு பிரித்துப் பார்க்க முடியாது என்பதால்) வாழ்வியல், அருளியல் சார்ந்த நிகழ்வுகளைத் தமிழ்வழியில் நிகழ்த்த எண்ணம் கொண்டேன். அந்த எண்ணம் ஈடேறவும், அதனால் உலகம் இன்புறவும், அந்த இன்பம் மேன்மேலும் பெருகவும் அருளுவீராக!

"வளரும் தமிழ்நெறி மாண்புறச்செய் வோர்தம்
தளரா வகைதொண்டர் தன்பால் - கிளர்ச்சிமிகும்
ஆதி சிவப்பிர காச அடியார்பால்
நீதி தழைக்க நினை" (29)

அருஞ்சொற்பொருள்:

மாண்புறச் செய்வோர் - சிறப்புறச் செய்வோர்; தளரா வகை - சோர்வடையா வகை; கிளர்ச்சி - எழுச்சி; நீதி - முறைமை; தழைக்க - செழித்து வளர; நினை - நினைப்பாயாக.

பொழிப்புரை:

திருமணம் முதலிய வாழ்வியல் நிகழ்வுகளும், குடமுழுக்கு முதலிய அருளியல் நிகழ்வுகளும், ஆக அனைத்து நிகழ்வுகளும், நாளும் வளர்ந்து வருகின்ற தமிழ்மொழியின் வழியாகவே செய்யவேண்டும் என்று, மனம் தளராத் தொண்டர்கள் நினைக் கின்றார்கள். அப்படி அதனைச் சிறப்புறச் செய்வோர், எழுச்சி பெற உதவும். ஆதி சிவப்பிரகாச குருவே! உமது அடியார்களிடம் இம்முறைமை தழைக்க, நீவிர் அருளுவீராக!

"நினைப்பவர் நெஞ்சம் நெகிழத்
திருமுறை நீடுநெறி
தனைநல்கும் ஆன்றோர் அருளும்
வழியில் சமயநலம்
புனைவேள்வி தானும் தமிழில்எந்
நாளும் பொலிவுறவே
உனைவேண்டி நிற்கின்றோம் எங்கும்
பரவும் உயர்வருளே" (30)

அருஞ்சொற்பொருள்:

நெஞ்சம் நெகிழ - மனம் உருக; பொலிவுற - விளக்கம் பெற; உயர்வருளே - உயர்வு + அருளே.

பொழிப்புரை:

சாந்தலிங்க குருவே! உம்மை எப்பொழுதும் மறவாது வாழும் அன்பர்கள், தங்கள் மனம் உருகுமாறு, நிலைத்து வாழும் தன்மைஉடைய திருமுறையிலுள்ள பாடல்களைக் கொண்டு, வேள்வி முதலியவற்றைச் செய்துவருகிறார்கள்; சான்றோர்களாகிய நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற நெறி, அதனால் விளக்க முறுகிறது; எனவே தமிழ்வழி வேள்வி முதலியன செய்து, வாழும் அவரது வாழ்வு, சிறக்கவும், அம்முறை மேலும் நாடெங்கும் பரவி வளரவும், ஆன உயர்வினைத் தந்து அருளுவீராக! இதனை வேண்டுதலாக உம் திருமுன் வைத்துக் காத்து நிற்கிறோம்.

"அருள்சேர் வாய்மைத் திருமுறைகள்
அன்பால் ஓதி வேள்விபல
பெருகு மக்கள் தமிழ் நெறியைப்
பேணிச் சாந்த லிங்கரது
அருள்நோக் கால்செந் தமிழ்ப்பாடல்
அருளிப் பெருகும் உள்ளத்தே
மருவாய் மலராய் ஆய்ந்தாய்ந்து
வளர்நூல் பலவும் தந்தனையே" (31)

அருஞ்சொற்பொருள்:

அருள் சேர் வாய்மை - அருளோடு சேர்ந்த வாய்மை; பெருகு - இன்பம் பெருகு; பேணி - பாதுகாத்து; அருள்நோக்கு - அருட்பார்வை; மரு - மணம்;

பொழிப்புரை:

அருளும் வாய்மையும் ஒருங்கே பெற்றுள்ள திருமுறை வழியில் நடத்தப்படும் வேள்விகள் சிறந்து விளங்கவும், மக்கள் வாழ்வில் அதனால் இன்பம் பெருகவும், அந்தத் திருநெறிய தமிழ் வழிபாட்டு முறையினைப் பேணிப் பாதுகாக்குமாறு, நமது குருமுதல்வர் சாந்தலிங்கர் அருள்நோக்கம் செய்தார். அதனால் குமாரதேவ தேசிகராகிய நீவிரும் மணமுள்ள மலர்கொண்டு தொடுக்கப்பட்ட மாலை போல உள்ளத்தை உருக்கும் செந்தமிழ்ப் பாடல் கொண்டு, பலரும் பல முறையும் ஆராய்ந்து அறிய உதவும் பல நூல்களைத் தந்து அருளியுள்ளீர்!

"தந்தி முகனை வேம்படிப் பிள்ளையைச்
சிந்தை யமர்த்திச் செந்தமிழ்ப் பாடலை
அருளிய கவிஞ அன்னைமீ னாட்சிமேல்
இருமை நலம்பெற இயல்கலி வெண்பா
நூலினை அருளினை நுண்ணிய உரையினை
நாலிய லாக நல்கிய குரவன்
உளம்கொள உரைத்தாய் ஓங்கும் போரூர்
வளமுறு மடமும் மாண்புற அமைத்தாய்

தண்டமிழ் முருகன் தண்ணருள் பெற்றுப்
புண்ணியக் கோயில் பொலிவுடன் புதுக்கி
வழிவரும் வீர சைவ மரபினில்
பழியகல் நோக்கால் பலரையும் திருத்தி
ஆளுமைத் திறத்தால் அன்பரைச் சேர்த்து
நீளுறு புகழ்பெறும் நின்மடம் சிறக்க
நற்பணி பலவும் நயந்து செய்தருளும்
சற்குரு வேநின் தண்ணருள் வேண்டுவன்'' (32)

அருஞ்சொற்பொருள்:

வேம்படிப் பிள்ளை - வேப்பமரத்தின்கீழ் எழுந்தருளிஇருக்கும் பிள்ளையார் (சிதம்பர சுவாமிகள் வரலாறு பார்க்க); இருமை - இம்மை மறுமை என்னும் இருமை; இயல் - இயல் தமிழால் (செய்யுள் வடிவில்); குரவன் - குரு; உளம்கொள - உள்ளம் கொள்ள என்பன இடைகுறைந்து நின்றன; மனம் ஏற்கும்படி என்பது இதன் பொருள். (சாந்தலிங்கர் வாழ்ந்த காலத்தில், உடன் வாழ்ந்தவர் சிதம்பரஅடிகள் என்பதால், தம் நூல்களுக்கு, அவர் எழுதிய உரையைக் கண்ணுற்று, ஏற்றுக்கொண்டார் என்பது கருத்து); பழி அகல் நோக்கு - பழிநீங்க வேண்டும் என்னும் கண்ணோட்டம்; ஆளுமைத் திறம் - முழு ஞான வீரமாகிய வலிமை; நீளுறு புகழ் - வளர்கின்ற புகழ்; நயந்து - விரும்பி;

பொழிப்புரை:

தந்தத்துடன் கூடிய யானைமுகம் கொண்டவரும், வேப்பமரத்தின்கீழ் எழுந்தருளி இருப்பவரும், ஆகிய விநாயகப் பெருமானை மனதில் நிறுத்தி, செந்தமிழ் மொழியில் பாக்கள் பலவும் இயற்றிய பாலவரே! நீவிர், மதுரை நகரில் எழுந்தருளி, உலக உயிர்களுக்குத் தாயாக விளங்கும் மீனாட்சியம்மை மீது, மக்கள் இம்மையிலும் மறுமையிலும் நலம்பெற வேண்டும் என்று வேண்டி, இயல்தமிழில் 'மீனாட்சி கலிவெண்பா' என்னும் நூலினைப் பாடினீர்! உமது குருவின் குரு சாந்தலிங்க தேசிகன் நான்கு தலைப்பின்கீழ் பாடிய, நான்கு நூல்களுக்கும் மிக நுண்ணிய உரையினை, அவர் உள்ளம் ஏற்கும் வகையில் எழுதினீர்! மேன்

மேலும் புகழானது வளரும் திருப்போரூரில் வளமான திருமடம் ஒன்றினை மாண்புற அமைத்தீர்! தமிழ்க்கடவுள் என்று போற்றப்படும் முருகப்பெருமானுக்குத் திருவருளை முன்னிறுத்தி, வழிபடுவார்க்குப் புண்ணியம் மிகுமாறு, புதிய திருக்கோயிலைப் பொலிவுடன் அமைத்தீர்! வீரசைவ நெறியைப் பின்பற்றி குரு வழியில் சீடன் என்னும் மரபில் வந்து, நீவிரும் ஒரு ஞானாசிரியனாகத் திகழ்ந்தீர்! வீரசைவ நெறிக்குப் பழி ஏற்படா வகையில், உமது அருள்நோக்கால் பலரையும் திருத்தி அருள்செய்தீர்! உமது முழுஞான வீரத்தால் அன்பர் கூட்டம் பெருகித் திருமடம் மேன்மேலும் பெருமையில் சிறந்து விளங்கியது. அரிய நல்ல பல திருத்தொண்டுகளை உமது விருப்ப மிகுதியால் செய்து, நீண்ட பெருமைக்கு உரியவரானீர்! உமது தண்ணருளை அடியேன் வேண்டி நிற்கிறேன்.

"வேண்டும் அடியார் வினைதீர்க்கும் ஐந்தெழுத்தால்
ஈண்டு குருநாதன் எண்ணத்தில் - நீண்டசைவம்
நாடி நிலவிடும் நல்ல கிளைமடங்கள்
நீடிஎங்கும் செய்பணி நேர்ந்து" (33)

அருஞ்சொற்பொருள்:

வேண்டும் அடியார் - விரும்பும் அன்பர்; வினை தீர்க்கும் - தொல்வினை, ஏறுவினை ஆகியவைகளைப் போக்கி அருளும்; ஐந்தெழுத்து - பரிய திருவைந்தெழுத்தும் (நமசிவாய); நுண் திருவைந்தெழுத்தும் (சிவாயநம), மிகநுண் திருவைந்தெழுத்தும் (சிவயசிவ); நீண்ட சைவம் - நெடுங்காலமாக மக்களால் பின்பற்றப்பட்டு வரும் சைவநெறி; நாடி - விரும்பி; நீடி - பரவி.

பொழிப்புரை:

ஆதி சிவப்பிரகாச குருவே! நீவிர், உமக்கு அருள்செய்ய குருவாக எழுந்தருளி வந்த குருநமச்சிவாய மூர்த்திகளின் எண்ணத்தின்படி, உம்மை நாடிவந்து, உபதேசம் பெற்ற சீடர்களின் (நுகர்வினை என்பது அனுபவித்துக் கழிக்க வேண்டிய வினை ஆதலின், அது தவிர உள்ள ஏனைய) தொல்வினைகளையும், ஏறுவினை களையும் போக்கி அருளினீர்! மிகப் பழங்காலம் தொட்டு வழக்கத்தில் இருந்துவரும் சிவபெருமானை முதற்கடவுளாகக்

கொண்டு வழிபடப்படும் சைவசமயம் தழைக்கப் பாடுபட்டீர்! துறையூரில் கிளைமடம் தோற்றுவித்தது போலப் பல ஊர்களிலும் கிளைமடங்கள் தோன்றக் காரணமாக இருந்தீர்! உமது சீடர் சாந்தலிங்கர் பேரூரிலும், அவரது சீடர் குமாரதேவர் திருமுதுகுன்றத்திலும், அவரது சீடர் சிதம்பர அடிகள் திருப்போரூரிலும் திருமடங்கள் அமைத்தனர். அம்மடங்களும் இன்றளவும் நல்ல முறையில் அருளாட்சி செய்து வருகின்றன.

''நேரும் வலிமிகு ஊழினை
மாற்ற நிறைதவத்தோர்
கோரும் தெளிதமிழ் நூல்நான்கு
தந்து கொலைமறுத்தல்
ஆரும் உளங்கொள் அவிரோத
உந்தி அருளியன்பர்
ஓரும் வகைதீ பமுடன்
சதகம் உரைத்தனையே'' (34)

அருஞ்சொற்பொருள்:

வலிமிகு ஊழ் - வலிமை மிகஉடைய விதி; மாற்ற - போக்க; கோரும் - கேட்டுப் பெறும்; தெளிதமிழ் - தெளிவான சொற்களால் தெளிவான பொருளை வழங்கும் தமிழ்மொழி. ஆரும் - அனைவரும் அவிரோத உந்தி - அவிரோத உந்தியார் என்னும் நூல்; ஓரும் நிலை - ஆராய்ந்து தெளிவுபெற வேண்டிய நிலையில் உள்ள; சதகம் - வைராக்கிய சதகம் என்னும் ஒரு நூல்; தீபம் - வைராக்கிய தீபம் என்னும் மற்றொரு நூல்.

பொழிப்புரை:

சாந்தலிங்க தேசிகரே! நீவிர், 'ஒருவன் முற்பிறவிகளில் செய்த வினைகளால் வந்து பொருந்திய வலிமை மிகுந்த விதியினை மாற்றுவதற்கு இப்பிறவியில் தவம் செய்யவேண்டும்' என்னும் கருத்தை எடுத்துரைக்கும் பொருட்டு, கேட்டுப் பெற்ற தெளிவான சொற்கள் கொண்டு தெளிவான பொருளில் பாடப்பட்ட நான்கு நூல்களைச் செம்மையாகத் தமிழில் செய்து உலகுக்குத் தந்து அருளி இருக்கிறீர்! அனைவரும் உள்ளம் கொள்ளும்விதமாக அமைந்துள்ள

அந்நூல்களுக்குக் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் அவிரோத உந்தியார் எனப் பெயர் நல்கி உள்ளீர்!

"உரைத்த சமயநூல் பலவும்
உணர்ந்தோர் நினது மெய்யியலாம்
புரைதீர் சுத்தசா தகத்தைப்
புகழ்ந்தார் நாடுபோற் றிடவே
விரைவாய் மயலறு துறவறத்தின்
மேன்மை உணர்ந்தோர் மெய்யுணர்வால்
கரைந்(து)எம் நெஞ்சம் உருகிடவே
காலம் கருதி அருள்வாயே" (35)

அருஞ்சொற்பொருள்:

உரைத்த - பல காலங்களில் பல இடங்களில் பலரும் சொன்ன; புரைதீர் சுத்த சாதகம் - குற்றமில்லாத சுத்தசாதகம் என்னும் நூல்; காலம் கருதி - உரியகாலம் இதுஎன எண்ணி; அருள் செய்வாயே - ஆத்மசாதகர் படிக்கவும், பொருள்விளங்கவும், கடைபிடிக்கவும், கடைத்தேறவும், அருள்செய்வீராக.

பொழிப்புரை:

குமாரதேவ தேசிகரே! பல காலங்களில் பல இடங்களில் பலரும் சொன்ன, பல சமய நூல்களைக் கற்றுணர்ந்து, ஆத்மசாதனை புரிய நினைத்தவர் பலரும், உமது சுத்தசாதகத்தைக் கற்று, குற்றமற்ற அதன் பெருமை குறித்துப் புகழ்ந்து பேசினார். அதுகேட்டு நாடே போற்றியது. அறியாமை மயக்கத்தைப் போக்கும் துறவற நெறியின் மேன்மையினை உணர்ந்தோர், தங்களது மெய்யறிவால் இந்நூலின் பெருமை அறிந்து, அதனால் மனம் கரைந்து உருக நின்றனர். மேலும் அந்நூற் சிறப்பினை இதுவரை அறியாதவர் அறியவும், பொருள் விளங்கவும், கடைபிடிக்கவும், கடைத்தேறவும் உரிய காலம் இதுஎன அறிந்து, அவர்க்கு மேலும் நீவிர் அருளுவீராக!

"அருள்சேர் அண்ணல் திருப்போ ரூருறை
முருகன் அருளால் முதற்குரு வாகும்

சாந்த லிங்கர் தாள்பணிந் தவர்நூல்
போந்த பொருள்நயம் போற்ற வுரைத்து
கந்த சாமிக் கடவுள் கோயில்
வந்து வழிபடும் மக்கட் கெல்லாம்
நீடு புகழும் நிறைந்த செல்வமும்
வாடுத லிலாத வாழ்வும் வகுத்துத்
திருக்குளப் பணியும் செய்துல கேத்தத்
திருவருள் பெற்றுச் வளர்த்தீர் செந்தமிழ்'' (36)

அருஞ்சொற்பொருள்:

அண்ணல் - தலைவன்; முதல்குரு - குருவுக்கும் குரு; போந்த - வெளிப்பட்ட; பொருள் நயம் - கருத்து நயம்; கந்தசாமிக் கடவுள் - அத்தலத்து முருகன் பெயர்; வாடுதல் இலாத வாழ்வு - துன்பம் இல்லாத வாழ்க்கை; ஏத்த - புகழ.

பொழிப்புரை:

சிதம்பர தேசிகரே! நீவிர், திருப்போரூர் என்னும் தலத்தில் எழுந்தருளி இருக்கும் அருளே வடிவான தலைவன் ஆகிய முருகப்பெருமான் அருளால் உமது குருவுக்கும் குருவாக விளங்கும் சாந்தலிங்கரின் திருவடி பணிந்து, அவரது நான்கு நூல்களுக்கும், அவற்றின் கருத்துநலம் வெளிப்படுமாறு, உரை எழுதி அருளினீர்! அதனால் தமிழ்மொழிக்கு மேலும் பெருமை சேர்த்தீர்! அத்தலத்தில் கந்தசாமி என்ற பெயரில் எழுந்தருளி இருக்கும் முருகப் பெருமானுக்குத் திருக்கோயில் அமைத்துத் திருக்குளமும் வெட்டுவித்து, உலகம் புகழ, திருவருள் பெற்றீர்! வந்து வழிபடும் அன்பர்கள் வாழ்வில் பெரும்புகழும் நிறைந்த செல்வமும் பெற்று, துன்பமில்லாத இனிய வாழ்வுபெற வகையும் செய்தீர்!

''செந்தமிழால் போற்றிச் சிவநெறியை நாடெங்கும்
வந்தனையால் கோயில் வழிபாட்டை - முந்தையோர்
செய்தார்கள் தில்லையினைச் சேர்சாந்த லிங்கருக்கு
உய்திபெறத் தந்தார் உவந்து'' (37)

அருஞ்சொற்பொருள்:

'சிவநெறியைச் செந்தமிழால் போற்றி' என மாற்றி உரைக்க; வந்தனை - வணங்குதல்; முந்தையோர் - நமக்கு முன்னர் வாழ்ந்த அருளாளர்கள்; உய்திபெற - உய்ய (கடைத்தேற); உவந்து - மகிழ்ந்து.

பொழிப்புரை:

ஆதி சிவப்பிரகாச ஞானாசிரியனே! நமது முன்னோர்களாகிய திருமுறை ஆசிரியர்களும், அப்பாலும் அடிசார்ந்த அடியார்களுள் இறைவனைப் புகழ்ந்து பாடியவர்களும், ஆக அவர்கள் அனைவரும் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று, அங்கு எழுந்தருளி இருக்கும் சிவபெருமானைக் கண்டு, வணங்கிச் செந்தமிழில் பாமாலை புனைந்து சாத்தியே வழிபட்டுள்ளார்கள். எமது குருமுதல்வர் சாந்தலிங்க தேசிகரும் தில்லைக்கூத்தன்மீது, தண்தமிழில் பாடல்கள் பாடியே வழிபட்டார். அதுகேட்டு மகிழ்ந்த பெருமானும் அவர்களெல்லாம் உய்யுமாறு திருவருள் புரிந்துள்ளார்!

''உவந்தன்பர் கோயில் தொறும் செயும்
பூசை உயர்தமிழால்
சிவனடிச் செம்பொருள் வாய்மை
மறவார் தெரிந்துணர
தவமிகு சாந்தையர் தாள்போற்றி
மாண்புறு தண்ணருளால்
கவறாம் அயல்நெறி சேராதே
நன்னெறி காட்டியதே'' (38)

அருஞ்சொற்பொருள்:

உவந்தன்பர் - 'அன்பர் உவந்து' என மாற்றுக. பூசை - வழிபாடு; கவறு - சூது; அயல்நெறி - தமிழ்நெறி தவிர்ந்த ஏனைய நெறிகள்.

பொழிப்புரை:

சாந்தலிங்க சற்குருவே! அடியார்கள் திருக்கோயில்கள் தோறும் சைவநெறி சார்ந்த வழிபாடுகளைத் தமிழ்மொழி வாயிலாகச் செய்து

இன்பம் அடைகிறார்கள். சிவனது திருவடியாகிய செம்பொருளின் வாய்மை மறவாதவர், தெரிந்து கொள்ளவும், உணரவும், தவம் மிக உடைய சாந்தலிங்க குருவாகிய உமது திருவடிகளைப் போற்றி, மாட்சிமை பொருந்திய தண்ணருளால் சூது நிறைந்த வேற்றுமொழி வழிபாட்டு முறையை மக்கள் கடைபிடியா வகையில் தமிழில் வழிபடுதலாகிய நல்ல நெறியைக் காட்டி அருளுவாயாக!

''காட்சிக் குரியதெய் வத்தைக்
கனிந்த தமிழால் வழிபடலை
மாட்சிக் குரியார் மதிக்கின்றார்
வழிவழி என்றேஅயல் நெறியைக்
காட்டும் சிலர்தம் கலக்கத்தைக்
கனிவாய்ச் சொல்லி அவர்உளத்தை
மீட்டுமுது குன்றுஅமர் முனிவா
விளக்க அருளை வேண்டுவனே'' (39)

அருஞ்சொற்பொருள்:

காட்சிக்குரிய தெய்வம் - நம் கண் முன்னே இருக்கும் தெய்வத் திருவுருவுகள்; கனிந்த தமிழ் - உருக்கமான தமிழ்; மாட்சிக்கு உரியார் - பெருமைக்குரியவர்கள்; மதிக்கின்றார் - நினைக்கின்றார்; கலக்கம் - தெளிவின்மை;

பொழிப்புரை:

குமாரதேவ குருவே! திருமுதுகுன்றில் எழுந்தருளி இருக்கும் முனிவனே! நம் கண்முன்னே நாம் காணுமாறு எழுந்தருளி இருக்கும் தெய்வத் திருவுருவுகளைத் தமிழ் மொழியிலுள்ள திருமுறைப் பாடல்களைப் பாடி, மனம்உருகி வழிபட வேண்டும் என்று பெருமைக் குரிய பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அதுகண்டு, ஆதிக்கம் செய்து கொண்டிருக்கிற அயல்நெறியாளர், மரபை மீறுவதாகக் கூறித் தம் சிந்தையில் கலக்கம் அடைகின்றனர். அவர்களது சிந்தையில் ஏற்பட்டுள்ள தெளிவின்மை நீங்க வேண்டுமாயின் கனிந்த சொற்களால் எடுத்துக்கூறி அவர் உள்ளத்தை மீட்டு எடுக்க வேண்டும். அதற்கான அருளை உம்மிடம் வேண்டுகின்றேன்.

"வேண்டு மன்பர் விருப்புடன் நாளும்
மாண்பார் தமிழால் மலித்து ஏத்த
வளரும் புகழும் மதியின் நலமும்
உளநெகிழ் கசிவும் உயர்ந்தோ ருரையும்
எய்திடப் போரூர் இனிதிருந் தருளைச்
செய்திடும் சிதம்பர தேசிக நினது
புலமையும் மெய்ம்மையும் பொருந்திடு செந்தமிழ்
நிலவும் பூசையில் நெகிழ்வதுஉன் திருவருளே" (40)

அருஞ்சொற்பொருள்:

வேண்டும் அன்பர் - விரும்பும் அடியார்; நாளும் - நாள்தோறும்; மாண்புஆர் தமிழ் - மாட்சிமை பொருந்திய தமிழ்மொழி; மலிந்து ஏத்துதல் - மிகுதியாகப் போற்றுதல்; மதிநலம் - அறிவுநுட்பம்; கசிவு - உருக்கம்; உயர்ந்தோர் உரை - சான்றோர்களது அறிவுரை (தமிழ்வழி இறைவனை வழிபடும்போது, அப்பாடல்களின் இடையே வரும் அறிவுரையாக அமையும் கருத்துகள்); நிலவும் பூசை - நடைபெறும் வழிபாடு.

பொழிப்புரை:

சிதம்பர தேசிகரே! அடியார்கள் தாங்கள் விரும்பியபடி, நாள்தோறும் மாட்சிமை பொருந்திய தமிழ்மொழிவழி இறைவனைப் போற்றி, மிகுதியும் வழிபாடு இயற்றும்போது, அவரது வாழ்வில் புகழும், அறிவுநுட்பமும், உள்ளத்தில் உருக்கமும், சான்றோர்களின் அறிவுரையும், என அனைத்தும் பெற்றுச் சிறக்க வாழ்வர். நீவிரும் திருப்போரூரில் நுண்நிலையில் (சூக்குமத்தில்) இருந்து அவர்க்கு அருளுவீர்! உமது புலமையும் மெய்ம்மையும் பொருந்திய செந்தமிழ் கொண்டு செய்யும் வழிபாட்டின் வழி, உமது திருவடியின் துணையைப் பெறமுடியும்.

குருமரபு நான்மணிமாலை மூலமும் உரையும் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்



திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம்
பேரூராதீன இருபத்தைந்தாம் பட்டம் குருமகாசந்நிதானங்கள்
கயிலைப்புனிதர் முனைவர் திருப்பெருந்திரு

சாந்தலிங்க மருதாசல அடிகளார்



இந்நூலின் புரவலர்:

பி ஆர் வீரமணி

நிறுவனர் & தலைவர், பி ஆர் வீரமணி

ராசு முதலியார் ராமலட்சுமி கல்வி மற்றும் தொண்டு அறக்கட்டளை

89, சுவாதி ஸ்ரீநிவாஸ், சுவாமி நகர், சுவாமிமலை

பிஆர்வி ஜாப் சென்டர்,
ஆவண எழுத்தர்,
சுவாமிமலை & பாபநாசம்

PRV Home Stay,
கீழவீதி தென்பாகம், சுவாமிமலை.

அலைபேசி எண்: **84499 98449**